விலை : ரூபா 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM

நாதம் 01 | சுக்கில ஆம் பங்குனி மீ 12-ம் உ | ஞாயிற்றுக்கிழமை | (25 - 03 - 1990) | ஹிஜ்ரி 1410 | ஷஃபா 27 | ஓசை 35

## ஒரிஸா தமிழ்க்குழு அகதிகள் அந்தமானுக்கு

(புவனேஸ்வரர்)

இந்தியாவின் ஒரிஸா மாநிலத்தில் தற்பொழுது தங்கியுள்ள இலங்கைத் தமிழ்க் குழு அகதிகள் அந்தமான் மற்றும் நிக்கோபார்த் தீவுகளுக்கு மாற்றப் பட இருக்கிறார்கள். ஒரிஸா மாநில முதலமைச்சர் பிஜு பட்னாயக் 'இந்துஸ்தான் ரைம்ஸ்' பத்திரிகைக்கு அளித்த பிரத்தியேகப் பேட்டியில், ஒரிஸா மாநிலத்தின் கோரக்பூர் மாவட்டத்திலுள்ள முகாம்களில் தங்கியுள்ள 1618 இலங்கைத் தமிழ்க் குழு அகதிகள் அந்தமான், நிக்கோபார்த் தீவுகளுக்கு மாற்றப் படலாம் எனக் குறிப்பிட்டார்.

# தலைவர் பிரபாவின் இலட்சிய உறுதியே படை வெளியேற்றம்

## போராளிகளின் தியாகமும் மக்களின் ஆதரவுமே காரணம்

### கலாநிதி பாலசிங்கம் விளக்கம்

(யாழ்ப்பாணம்)

"தலைவர் பிரபாகரனின் இரும்பு போன்ற இலட்சிய உறுதியும் தலை சிறந்த போர்முறைத் திட்டமும் ராஜதந்திர சாணக்கியமும், எமது போராளிகளின் அற்புதமான தியாகங்களும் எமது இயக்கத்தின் மீது மக்களுக்குள்ள நம்பிக்கையுமே இந்தியப்படை நேற்றுடன் முற்று முழுதாக இலங்கை மண்ணிலிருந்து வெளியேறித் திரும்பிச் செல்தற்குக் காரணமாகும்.

இவ்வாறு விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் நேற்றுமாலை பத்திரிகையாளர்களைச் சந்தித்தபோது கூறினார்.

தாங்கள் எடுத்தபோர் நடவடிக்கைகளே தமிழீழ விடுதலைப் புலிகள் ஜனநாயக வழிக்குத் திரும்புவதற்குக் காரணம் என்று இந்திய இராணுவ வட்டாரங்களும் டில்லி அரச வட்டாரங்களும் செய்து வந்த பிரசாரங்களுக்குப் பதி



இரண்டு ஆண்டுகளாக நாம் நடத்திய ஆயுதப்போராட்டமும், பின்னர் நாம் நடத்திய பேச்சுவார்த்தைகளினாலும், அந்நிய இராணுவம் நம் மண்ணை விட்டு வெளியேறியது. இவ்வெளியேற்றம் வரலாற்றில் புதிய திருப்பமாகவே கருதுகிறோம். இது விடுதலைப் புலிகள் படைத்த மாபெரும் சாதனையாகவே கருதுகின்றோம். என்றும் கலாநிதி பாலசிங்கம் தெரிவித்தார்.

## "இந்தியப் படையை எதிர்த்து முதலில் பலியானவர் ஒரு பெண்"

(யாழ்ப்பாணம்)

"1987ஆம் ஆண்டு இந்திய இராணுவம் ஆக்கிரமிப்பு நோக்கத்துடன் எம் மக்கள்மீது மேற்கொண்ட தாக்குதல்களின்போது அதற்கெதிராக ஆயுதம் ஏந்தி இந்திய வல்லரசை எதிர்கொண்டு முதல் முதலில்வீரமரணத்தைதழுவிக் கொண்டவர் ஒரு பெண் புலியே" எனபுலிகளின் மகளிர் பிரிவுப் உறுப்பினர் மாலினி தெரிவித்தார்.

நேற்று அரியாலை மணியம் தோட்டத்தில் அப்பகுதி மக்களால் அன்னை பூபதி, மணிப்புரி மைந்தன் மைக்கல் ஆகியோரின் நினைவஞ்சலிக் கூட்டத்தில் பேசுகையிலேயே செல்வி மாலினி இவ்வாறு தெரிவித்தார்.

(4 ஆம் பக்கம் பார்க்க)

## ஹிரோயின் போதைவஸ்துடன் இரு வடபகுதி இளைஞர் கைது

(கொழும்பு)

இரண்டு கிலோ ஹிரோயின் போதைப் பொருளை வைத்திருந்த இரு வட பகுதி இளைஞர்கள் தெஹிவளையில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தெஹிவளையில் உள்ள பொலிஸ் வீதித் தடுப்புச் சோதனை நிலையத்தில் வைத்து இவர்கள் சோதனையிடப்பட்டபோதே இவ்வாறு கைது செய்யப்பட்டனர்.

இந்த இளைஞர்களில் ஒருவர் ராமேஸ்வரத்தில் இருந்து அண்மையில் சட்ட விரோதமாக நாடு திரும்பியுள்ளதாகப் பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இதேசமயம் டாம் வீதியில் உள்ள வர்த்தகர் ஒருவரும் போதை வஸ்து வைத்திருந்தனால் கைது செய்யப்பட்டதாகப் போதைத் தடுப்புப் பணியகப் பொலிஸ் அத்தியட்சகர் திரு பீ. அன்ரன் ஜெயநாதன் தெரிவித்தார்.

புகையிரதப் பகுதிக்கு

## பத்து வருடத்தில் நூறுகோடி ரூபா நஷ்டம்

(கொழும்பு)

கடந்த பத்து வருடங்களில் புகையிரதப் பகுதிக்கு நூறு கோடி ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளதாக கணக்காய்வுபுள்ளி விபரங்கள் மூலம் தெரியவருகிறது.

1978 முதல் 1988 வரையிலான காலங்களில் இந்தநட்டம் ஏற்பட்டுள்ளது. 1984-இல் 5990 இலட்சங்களும் ரூபா நட்ட மேற்பட்டுள்ளது.

இந்த வருடம் புகையிரதப் பகுதியை நடத்துவதற்கு 4520 இலட்சமும் ரூபா செலவாகியுள்ளதாகவும் கூறப்படுகிறது: 1986, 1987, 1988 இல் முறையே 289 இலட்சம் ரூபாவும் 288 இலட்சம்ரூபாவும. 309 இலட்சம் ரூபாவும். 399 இலட்சம் ரூபாவும் நட்டம் ஏற்பட்டுள்ளது.

## இராணுவத்தை இலங்கைக்கு அனுப்பியதே தவறு

– வெங்கடேஸ்வரன்

(புதுடில்லி)

"இலங்கைக்கு இந்தியா தனது படைப் பிரிவை அனுப்பியதே பெருந்தவறு" என்று இந்தியாவின் முன்னாள் வெளியுறவுச் செயலர் திரு. ஏ. பி. வெங்கடேஸ்வரன் நேற்றுமுன்தினம் பத்திரிகை ஒன்றிற்கு அளித்த பேட்டியில் தெரிவித்தார்.

அமைதிப் படையாகச் சென்ற இந்திய இராணுவம் அங்கு அமைதியை ஏற்படுத்தவில்லை என்றும் அவர் குறிப்

(4-ம் பக்கம் பார்க்க)

# இந்தியப்படை முழுதும் போனது!

(நமது சிறப்பு நிருப?; ஈ. ஆர். தி.)

(திருக்கோணமலை)

இலங்கையில் வடக்கு - கிழக்கு மாகாணங்களில் 'அமைதி காக்க' என்று வந்தஇந்திய இராணுவம் கடந்த வருடம் ஜூலை மாதத்திலிருந்து படிப்படியாக வெளியேறத் தொடங்கி நேற்றுக்காலை இந்தியப் படையின் தளபதி லெப். ஜெனரல் கல்கத் தமது கடைசி ஜவானையும் கூட்டிக் கொண்டு திருமலைத் துறைமுகத்திலிருந்து கப்பலில் பயணமானார்.

# அமைச்சர் ஹமீத் செவ்வாய் மட்டக்களப்பு செல்கிறார்

(மட்டக்களப்பு)

கிழக்கிலங்கையில் முஸ்லிம் மக்களைச் சந்தித்துப் பேசுவதற்காக உயர் கல்வி விஞ்ஞான அமைச்சரும் சமாதானக் குழுத் தலைவருமான ஜனாப் ஏ. ஸி. எஸ் ஹமீத் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை மட்டக்களப்புக்கு விஜயம் செய்கிறார்.

காத்தான்குடி, ஏறாவூர், ஓட்டமாவடி ஆகிய முஸ்லிம் பகுதிகளுக்குச் செல்லும் அமைச்சர் ஹமீத் இந்தஇடங்கள் ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு மணி நேரத்தைச்செலவிட்டு விடுதலைப் புலிகளுக்கும் அரசுக்கும் நடைபெற்று வரும் பேச்சுவார்த்தைகள் சம்பந்தமாக அபிப்பிராயத்தைப் பரிமாறிக்கொள்வார்.

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் மட்டக்களப்புப் பிரதேசப் பிரதிநிதிகளையும் அமைச்சர் ஹமீத் சந்தித்துப் பேசுவாரென்றும் தெரிகிறது.

வந்த பிரசாரங்களுக்குப் பதிலளிக்கு முகமாகவே கலாநிதி அன்ரன் பாலசிங்கம் மேற்கண்டவாறு கூறினார்.

**வரலாற்று முக்கியத்துவம்**

இந்திய ஆக்கிரமிப்பு இராணுவம் இலங்கை மண்ணிலிருந்து முற்றுமுழுதாக வெளியேறிய நேற்றைய தினம் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்ததாகுமெனக் கருதுகிறோம்



வித்தார்.

கடந்த இரண்டரை வருடத்தில் இந்தியாவின் தலையீடு எந்தவித நன்மையையும் தமிழ் மக்களுக்கு அளிக்கவில்லை மாபெரும் அழிவுக்கு வித்திட்டது. ஆறாயிரம் அப்பாவிப் பொதுமக்கள் கொல்லப்பட்டார்கள், ஐயாயிரத்துக்கு மேற்பட்ட மக்கள் காய

(4ஆம் பக்கம் பார்க்க)

இந்திய இராணுவத்தின் கடைசி அணி நேற்றுக்காலை சரியாக ஒன்பது மணி ஐம்பத்தைந்து நிமிஷத்துக்கு திருக்கோணமலைத் துறைமுகத்திலிருந்து தாயகம்நோக்கிப் புறப்பட்டுச் சென்றது.

இரண்டாயிரம் உறுப்பினர்களைக் கொண்ட இந்த அணியினர் இந்தியக் கடற்படையின் மூன்று கப்பல்களில் புறப்பட்டுச் சென்று கொண்டிருக்கின்றனர். இவர்கள் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் நான்கு மணிக்குச் சென்னைத் துறைமுகத்தை அடைவார்களென்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்திய இராணுவத்தின் தளபாடங்கள், ஆயுதங்கள் முதலியன மற்றுமிரு கப்பல்களில் சென்று கொண்டிருக்கின்றன.

இந்திய இராணுவத்தின்

( 4ஆம் பககம் பார்க்க)

ஞாயிறு மலர் உள்ளே

## மட்டக்களப்பு மாவட்டத்தில்

# 7456 பேருக்கு வீடமைப்பு கடனுதவி வழங்கப்பட்டது

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் 10 இலட்சம் வீடமைப்பு திட்டத்தின்கீழ் 7456 பேருக்கு வீடமைப்பு கடனுதவி வழங்கப்பட்டுள்ளது.

1984ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இத்திட்டத்தின் கீழ் நகர வீடமைப்பு திட்டம் கீழ் 1129 பேர் இதனைப் பெற்றார்கள்.

கிராமிய வீடமைப்பு திட்டத்தின் கீழ் 6327 பேருக்கும் மேற்படி உதவி வழங்கப்பட்டுள்ளது.

புதிய வீடமைப்பு, வீடுகள் திருத்தம், விஸ்தரிப்பு ஆகியவற்றின் கீழ் வழங்கப்பட்ட கடனுதவி 3 கோடி 25 இலட்சம் ரூபாய் என தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை மாவட்ட முகாமையாளர் திரு. கே. பத்மநாதன் தெரிவித்தார். (37)

## பஸ் நிலையம் கட்ட நிதி ஒதுக்கிடு

(திருக்கோவில்)

1990ம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டத்தின் கீழ் 50,000 ரூபாய் செலவில் திருக்கோவில் நவீன பஸ் நிலையம் ஒன்றினை அமைப்பதற்கான தனது நிதி ஒதுக்கீடுகளை திரு. ஜெ. திவ்விய நாதன் திகாமடுல்ல பாராளுமன்ற உறுப்பினர் தெரிவித்துள்ளார். (46)

# யாழ். பல்கலைக் கழகத்தில் 343 பேருக்கு மகாபொல

(யாழ்ப்பாணம்)

இவ்வருடம் மகாபொல புலமைப் பரிசில் பெற யாழ். பல்கலைக் கழகத்தில் இருந்து 343 மாணவர்கள் தெரிவாகியுள்ளனர், இவர்கள் இன்று ஆரம்பமாகும் மகாபொல புலமைப் பரிசில் வழங்கும் ஒன்பதாவது தொடர் வைபவத்தில் கலந்து கொள்வதற்காகக் கொழும்பு சென்றுள்ளார்கள். இவ்வைபவம் பண்டாரகம மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது. இவ்வைபவம் எதிர் வரும் நாலாம் திகதி வரை நடைபெறவுள்ளது.

இவ்வைபவத்தை ஜனாதிபதி பிரேமதாசா ஆரம்பித்து வைப்பார். யாழ் பல்கலைக் கழகத்தில் இருந்து செல்லும் மாணவர்கள் யாழ். நகரில் இருந்து நான்கு பஸ்களில் சென்றுள்ளனர்.

## பயிலுநர் ஆசிரியருக்கு பயிற்சி வகுப்புகள்

உடுவில், கோப்பாய் உதவி அரசாங்க பிரிவில் இருந்து தெரிவு செய்யப்பட்ட பயிலுநர் ஆசிரியர்களுக்கான தொழில் தூண்டல் பயிற்சி வகுப்பு நாளை திங்கட்கிழமை உடுவில்மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

( 4ஆம் பக்ககம் பார்க்க)

# "கௌரவமாக வந்து கௌரவமாக போகிறோம்" - சட்டர்ஜி

(நமது சிறப்பு நிருபர் ஈ. ஆர். தி.)

இலங்கைக்கு கௌரவத்துடன் வந்தோம், கௌரவத்துடன் திரும்புகிறோம் கஷ்டமான சூழ்நிலையிலும் இங்கு செயல்பட்ட சிப்பாய்கள் வீடு திரும்புவதையிட்டு சந்தோசமடைகிறார்கள். நேர்மையாகவும் கௌரவத்துடனும் செயல்பட்டார்கள் என்று இந்திய இராணுவத்தின் தென் பிராந்திய தளபதி ஏ. கே. சட்டர்ஜி நமது சிறப்பு செய்தியாளரின் கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் தெரிவித்தார்.

படையினரை வழியனுப்பி வைத்த வைபவத்தில் பேசிய விமானப்படைத் தளபதி ஹெரன் பெர்னான்டோ கருத்துத் தெரிவிக்கையில் இந்தியப் படையினர் தமது கடமைகளைச் சரிவரச் செய்தரர்கள்.

(4-ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியாவில்

## தபால் சேவை இல்லாத கிராமங்கள்

(வவுனியா)

வவுனியா மாவட்டத்தில் இருக்கும் சேனைப்புலவு, நாவலர் பண்ணை ஆகிய இரண்டு கிராமங்களுக்கும்

(4-ஆம் பக்கம் பார்க்க)

# யாசீர் அரபாத் இலங்கை விஜயம்

(கொழும்பு)

பலஸ்தீனிய விடுதலை இயக்கத்தின் தலைவர் ஜனாப் யாசீர் அரபாத் முதல் முதலாக அடுத்த மாதம் மட்டில் இலங்கைக்கு விஜயம் செய்வார் என எதிர்பார்க்கப்படுகிறது.

பல முஸ்லிம் அமைப்புகள் விடுத்த வேண்டுகோள்களையடுத்தே அவர் இங்கு வர விருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

இஸ்ரேலிய நலன்காக்கும் பிரிவை ஜனாதிபதி பிரேமதாஸ மூட எடுத்த நடவடிக்கைகளையடுத்தே ஜனாப் அரபாத் இங்கு வர ஏற்பாடு செய்யபபட்டுள்ளது.

இதுதொடர்பாக புதுடில்லியில் நடைபெறும் மாநாடு ஒன்றிற்கு வரும் ஜனாப் அரபாத்திடம் சபாநாயகர் எம். எச். மொகமட் சென்று இதற்கான அழைப்பை விடுப்பார் எனவும் தெரிவிக்கப்படுகிறது

## கல்முனை உ. அ. அ. (தமிழ்ப் பிரிவில்)

# பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணநிதி ஒதுக்கீடு இல்லை

(அம்பாறை மாவட்ட நிருபர்)

கடந்தகால வன்செயல்களினால் பாதிக்கப்பட்ட அம்பாறை மாவட்ட மக்கள் இது வரை புனர்வாழ்வுஅமைச்சின் நிவாரணங்களை முழுமையாகப்பெறமுடியாதவர்களாக இருக்கின்றனர்.

குறிப்பாக கல்முனை உதவி அரச அதிபர்(தமிழ்ப் பிரிவில்) உள்ள தமிழ் மக்கள் பெரிதும் பாதிப்படைந்தும் நிவாரணம் பெறமுடியாத நிலையில் இருக்கின்றனர்.

பாதிக்கப் பட்டவர்கள், அதாவது இறந்தவர்களின் பெற்றோர், மனைவியர்கள் சகல தஸ்தாவேஸுக்களையும் சேர்த்து உதவி அரச அதிபர் மூலமாகவிண்ணப்பித்துவிட்டு அம்பாறைக் கச்சேரிக்குச் சென்று உரிய அதிகாரிகளைக் கேட்கும்போது அரசு பணம் ஒதுக்கவில்லையெனச் சொல்கிறார்களாம்.

இவ்வாறாக இவர்கள் அங்கும் இங்குமாக அலைந்து திரி

(4ஆம் பக்கம் பார்க்க)

# அக்கரைப்பற்று பஸ் டிப்போவில் 5 பஸ்களே சேவையாற்றுகின்றன

(அட்டாளைச்சேனை நிருபர்)

அக்கரைப்பற்று அம்பாறை, அக்கரைப்பற்று பொத்துவில், அக்கரைப்பற்று கல்முனை ஆகிய பாதைகளில் பஸ் போக்குவரத்து மிகவும் சீர்குலைந்துள்ளது. இதனால் பிரயாணிகள் மிகவும் கஸ்டத்திற்குள்ளாகின்றனர்.

அக்கரைப்பற்று டிப்போவின் பஸ் வண்டிகளே இப்பாதையில் சேவையாற்ற வேண்டியுள்ளது. மேற்படி டிப்போவில் 24 பஸ் வண்டிகள் சேவையாற்ற வேண்டியிருந்தும் தற்போது ஐந்து பஸ் வண்டிகள் தான் சேவையில் ஈடுபடுத்தப்படுகின்றன. ஏனையவைகள் பழுதடைந்த நிலையில் டிப்போ வளவுக்குள் கிடக்கின்றன.

இந்த டிப்போ கடலோரத்தில் அமைக்கப்பட்டுள்ளதால் பஸ் வண்டிகளின் உதிரிபாகங்கள் மிக விரைவாக துருப்பிடித்து பழுதடைவதே இப் பகுதியில் பஸ் சேவை குறைந்துள்ளதற்கு காரண

(4-ஆம் பக்கம் பார்க்க)

# மட்டக்களப்பு மாவட்டத்திற்கு வீடமைப்புக் கடன்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் 15 இலட்சம் வீடமைப்புத் திட்டத்தின் கீழ்க் கடன் பெற விரும்புபவர்கள் பதிவு செய்யும் நடவடிக்கைகளைத் தேசியவீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையினால் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மேற்படி திட்டத்தின் கீழ்க் கடன்பெற எந்தவொருஅமைப்பு அல்லது தனிநபர் சிபார்சும் தேவையில்லை.

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை, தேசிய வீடமைப்புத் திணைக்களம், புனர்வாழ்வுத் திட்ட நிவாரணம் பெற்றவர்கள் இக்கடனைப் பெறத் தகுதியற்றவர்களாவர்.

மாதாந்தம் 701 ரூபா முதல் 2400 ரூபா வரையில் வருமானம் பெறுபவர்கள், 18-50 வயதுடையவர்கள் கடன்பெற பதிவுசெய்துகொள்ளமுடியும். பதிவு செய்யப்படும் பட்டியல் அடிப்படையில் கடன் வழங்கப்படும்.

நகர உப வீடமைப்புத் திட்டத்தின் கீழ் விண்ணப்பங்கள் இம்மாதம் 31ஆம் திகதிவரை விநியோகம் செய்யப்படுகின்றன.

மாநகர சபையில் விண்ணப்பம் பெறப்பட்டு 10 நாட்களுக்குள்ஒப்படைத்தல்வேண்டும்.

கிராம வீடமைப்புத் திட்டத்தின் கீழ் 15. 5. 90 வரை விண்ணப்பம் உதவி அரசாங்க அதிபர் அலுவலகங்களிலுள்ள வீடமைப்பு உத்தியோகத்தர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளமுடியும் எனத் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை மாவட்ட முகாமையாளர் திரு. கே. பத்மநாதன் தெரிவித்தார். (37)

# மாணவரின் உடல் நலத்திற்கு விளையாட்டுப்போட்டி அவசியம்

(கொழும்புத்துறை)

நம் சிறார்கள் மத்தியில் கல்வி வளர்ச்சி மட்டுமன்றி உடல் நலமும் மிகப்பாதிப்படைந்திருப்பதைக் காண முடிகின்றது. பாடசாலையில் மாணவரின் கல்வியறிவை வளர்ப்பதற்கு வகுப்பறைகளும் ஆசிரியர்களும் எவ்வளவு இ நியமையாத தேவையோ அதுபோன்று மாணவர்களின் உடல்நலத்தை அபிவிருத்தி செய்வதற்கு விளையாட்டு மைதானமும், போதிய உடல் பயிற்சியும் இன்றியமையாதன ஆகும்.

இவ்வாறு இளவாலை மெய்கண்டான் மகா வித்தியாலய இல்ல மெய் வல்லுநர் போட்டியின் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய மேற்படி பாடசாலையின் ஸ்தாபகர் ஏழுர் இராசரத்தினத்தின் மகள் திருமதி கிருபா சக்தி தர்மதாசன் குறிப்பிட்டார்.

இவ் மெய்வல்லுநர் போட்டியில் அலைமகள் இல்லம் முதலாம் இடத்தையும், மலைமகள் இல்லம் இரண்டாம் இடத்தையும், கலைமகள் இல்லம் மூன்றாம் இடத்தையும் பெற்றன.

சிறப்பு விருந்தினர்களாகத் திரு. எஸ். அருளானந்தசிவம் சட்டத்தரணி திரு சொ. சண்முகலிங்கம் ஆகியோர் பங்கு பற்றினர். (24)

## பருத்தித்துறையில் கிரிக்கெட் போட்டி

(பருத்தித்துறை)

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி பழையமாணவர் கிரிக்கெட் குழுவுக்கும், பருத்தித்துறை வேலாயுதம் மகாவித்தியாலய கிரிக்கெட் குழுவுக்கும் இடையே நடைபெற்ற சிநேகபூர்வ கிரிக்கெட் போட்டி வெற்றி தோல்வியின்றி முடிவுற்றது.

இதன் மத்தியஸ்தராகத் திரு. எஸ். நடராஜசுந்தரம் கடமையாற்றினார். 25

## வடமராட்சி கிழக்கில் விளையாட்டுப் போட்டி

(வடமராட்சிகிழக்கு)

வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான, மெய்வல்லுனர் போட்டி எதிர் வரும் 28ம் திகதி (28.03 90)உதயசூரியன் விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இப்போட்டி வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் திரு நீ.சந்திரசேகரம் தலைமையில் நடைபெறும்.

இப்போட்டிக்கும் பிரதம விருந்தினராக யாழ் அரசாங்க அதிபர் திரு. அன்ரன் அல்பிரட்டும் சிறப்பு விருந்தினராக தலைமைப்பீட உதவி அரசாங்க அதிபர் திரு க.சண்முகநாதனும் கலந்து கொள்வார்கள். (36)

## கல்முனையில் நினைவு தூபிகள்

(அம்பாறை மாவட்ட நிருபர்)

கல்முனைப் பிரதேசத்தில் கடந்தகால போராட்டங்களில் வீரமரணம் எய்திய தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர்கள் நினைவாக கல்முனை அரசடிச் சந்தியில் பிரமாண்டமான நினை...

# நிவாரணம் பெறுவோரின் விபரம் மக்கள் பார்வைக்கு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் புனர்வாழ்வு நிவாரணம் பெற தெரிவு செய்யப்பட்டவர்களின் பெயர்ப் பட்டியல் பொது மக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது.

கச்சேரி புனர்வாழ்வுக் கிளை, உதவி அரச அதிபர் அலுவலகம் ஆகியவற்றில் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது. குறைபாடுகள் இருப்பின் முறையிடும் வாய்ப்பு உண்டு என செயலக அதிகாரியொருவர் தெரிவித்தார். (37)

## மறுமலர்ச்சிக் கழகம் வேண்டுகோள்

சமூக நலனையே நோக்கமாகக்கொண்ட யாழ் பல்கலைக்கழக மறுமலர்ச்சிக்கழகத்தின் நூல் நிலையத்திற்கு...

# பருத்தித்துறைப் பொலிஸார் மந்திகையில் இரத்ததானம்

(பருத்தித்துறை)

பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தில் பொலிஸ் தினம் கொண்டாடப்பட்டது. பருத்தித்துறைப் பொலிஸ் நிலையப் பகுதியில் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி திரு. ஆர். பி. அமரசிறி தலைமையில் சிரமதானமும், மரம் நாட்டும் விழாவும் நடைபெற்றது.

பருத்தித்துறை அரசினர் வைத்தியசாலையில் பொலிஸ் உத்தியோகத்தர்களான திரு. பீ. கே. தயாரத்ன திரு, எஸ். எம். உகுகொட, திரு. பி. பி. எம். பீ. பண்டார, திரு. ரீ. ஏ. விஜயவீர, திரு. ஜீ. எஸ். ஜீ. பீ. குணதிலக ஆகியோர் இரத்ததானமும் செய்தனர்.

இரத்ததான வைபவம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி, திரு. அமரஸ்ரீ, சப் இன்ஸ்பெக்டர் எஸ்., ஜயவீர திரு. வி. வல்லிபுரம் ஆகியோர் தலைமையில் இடம் பெற்றது. (25)

## வீடமைப்புத்திட்ட கடனுதவி

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் ஜனாதிபதியின் 10 இலட்சம் வீடமைப்புத்திட்டத்தின் கீழ் 3 கோடி 25 இலட்சம் ரூபாய் கடனுதவி வழங்கப்பட்டுள்ளது.

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை மாவட்ட முகாமையாளர் திரு. கே. பத்மநாதன் இதனைத் தெரிவித்தார்.

இக் கடனுதவிமூலம் நகர வீடமைப்பில் 1129 வீடுகளும் கிராம வீடமைப்பில் 6327 வீடுகளும் அமைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். 37

# மட்டக்களப்பு பகுதியில் மீண்டும் விளையாட்டுப் போட்டி

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் இன்றைய அமைதியான சூழ் நிலை காரணமாக விளையாட்டுத்துறை மீண்டும் உற்சாகமாக கலகலப்பு பெற்று புத்துயிர் பெறத் தொடங்கியுள்ளது.

இவ்வாறு மட்டக்களப்பு நகர் உதவி அரச அதிபர்பிரிவு வருடாந்த விளையாட்டுவிழாவில் பிரதமஅதிதியாக கலந்து கொண்ட மேலதிக அரச அதிபர் திரு. இரா. தியாகலிங்கம் தனது உரையில் குறிப்பிட்டார்.

உதவி அரச அதிபர் திரு கே. தங்கத்துரை தலைமையில் நடைபெற்ற இவ்வைபவத்தில் அவர் மேலும் உரையாற்றுகையில்:

கடந்தகால சூழ்நிலையினால் விளையாடடுத்துறை ஸ்தம்பிதம் அடைந்து காணப்பட்டது. இதனால் மாவட்ட விளையாட்டு சபையும் கூட இயங்கவில்லை. இவ்வருடம் முதல் இயங்கவுள்ளது.

இம் மாவட்ட விளையாட்டுத்துறையை ஊக்குவிக்க பல்வேறு நடவடிக்கைகள் தடுக்கப்பட்டுள்ளது என்றார். திருமதி பி. எதியாசலிங்கம் பரிசுகள் வழங்கினார். (37)

# பனை அபிவிருத்தி நடவடிக்கை ஆய்வுகள் மேற்கொள்ளப்படும்

(நெடுந்தீவு)

"எமது தேசிய செல்வமாகிய பனை மரத்தைப் பேணிக்காப்பதிலும், அதன் பயனை முழுமையாகப் பெறுவதிலும் நாம் அதிக கவனம் செலுத்துதல்வேண்டும். பனம் பொருட்களை உற்பத்தி செய்வதிலும் அவற்றின் மூலம் வருமானத்தைப் பெறுவதிலும் இன்றைய தலைமுறையினர்கூடிய ஆர்வம் செலுத்துவது அவசியமாகும்."

அவர் தொடர்ந்து பேசுகையில் பனை மரங்கள் அருகி வருகின்றன. அவற்றினை வளர்க்கவும், பாதுகாக்கவும் தற்பொழுது பல ஆய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

மிக வேகமாகப் பனை மரத்திலிருந்து பயன்பெறும் வகையில் பனங்கிழங்கை நாற்று நடுவதன் மூலம் விருத்தி செய்ய முடியும் என்றார்.

வரிவிளம்பரம்

விற்பனைக்கு

தூய வெள்ளை நிறமான மேசை உப்புத் தூள் (Table Salt) மொத்தமாகவும் சில்லறையாகவும் விற்பனைக்கு உண்டு, M. G. M. No. 777, K. K. S. Road, Jaffna(. /66)

வசந்தி எலக்ரிக்கல்ஸ் (பழைய பொலிஸ் நிலையம் முன்பாக) சுன்னாகம் Solide மின் மோட்டார்கள், நீர் இறைக்கும் இயந்திரம்(England)எஸ்லோன் பைப்புகள் Hand Pump China (B-366)

விற்பனையாகிறது

வரலாறு ஆண்டு 6, வரலாறு ஆண்டு 7, 1990 ஆம் ஆண்டு தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படுகின்ற பாடத்திட்டத்தைத் தழுவி எழுதப்பட்டது. ஆக்கம், ஆலோசனை: எம். எஸ். அப்துல்ரஹீம், தி. கமலநாதன்

சேவை

RAJZ BRAND எவசில்வர் பாத்திரங்கள் எங்கும் கிடைக்கும், உங்கள் விருப்பமே எங்கள் சேவை! பற்பலடிசைன்களில் பற்பல ரகங்கள்! சாப்பாட்டுப் பீங்கான்கள் செற் சட்டிகள், தாச்சிச் சட்டிகள், ரேகள், சோஸ்பான்கள். பொரியல் சட்டிகள், டின்னர் செற்கள், ரீ செற்கள் கோவிற் சாமான்கள் இன்னும் பற்பல நம்பிக்கை நிதானம் RAJZ BRAND, பார்வை அறை S. A. தேவதாசன், சூராவத்தை, சுன்னாகம். (B-270)

வாடகைக்கு

வீடியோ பிரதிகள் வாடகைக்கு விடப்படும். ஹப்பி வீடியோ சென்ரர், 613, பீச் றோட், குருநகர். (B- 335)

தேவை

பழைய கொப்பிபுத்தகங்கள் தேவை. இருப்பவர்கள் தொடர்பு கொள்ளவும். அண்ணா தொழிலகம் இணுவில் (B-350)

திருமண சேவை நிலையம் பரமேஸ் கோணேஸின்...

## யாழ் நகரில் இன்றைய சினிமா

வின்சர் - யாழ்
10.30 2.30 6.30
BOBBY
(உருது)
இனிய பாடல்களுடன் கூடிய காதல் காவியம்

81 வது நாளாக!!
நியூ சாந்தி (யாழ்)
தினசரி 10.30, 2.30, 6.30
சூப்பர் ஸ்ரார்' ரஜனி - அமலா நடித்த
கொடி பறக்குது
(கலர்)

7 வது வாரம்
மனோகரா - (யாழ்)
தினசரி 10.30, 2.30, 6.30
ரஜனி, ரூபினி, நடித்த
மனிதன்
(கலர்)

ஜனத்திரள் காட்சிகள்
ஹரன் யாழ்.
10-30 2-30 6-30
கமலஹாசன் சரண்யா நடித்த
நாயகன்
(கலர்)

லிடோ (யாழ்)
75வது நாளை நோக்கி அரங்கு நிறைந்த காட்சிகள்
10. 30, 2. 30, 6. 30
★ பிரபு ★ சரிதா
பூ- பூவா பூத்திருக்கு
(கலர்)

ராஜா (யாழ்)
10. 30, 2. 30, 6. 30
ரஜனி (இரு வேடம்)
ராதா, நதியா
ராஜாதி ராஜா
(கலர்)

128வது நாளை நோக்கி அரங்கு நிறைந்தகாட்சிகள்
வெலிங்டன் (யாழ்)
தினசரி
10. 30, 2. 30 6. 30
★ கார்த்திக் ★ குஷ்பு
வருஷம் 16
(கலர்)

அனுதாபம்

### திருமண சேவை நிலையம்

பரமேஸ் கோணேஸின் முன்னணிப் பாடகர் ''வின்ரோ மகேந்திரா'' ஆரம்பிக்கும் மெல்லிசைக் குழுவுக்கு பெண்பாடகிகள் Lead Guitor, Flute, Violin, வாத்தியக் கருவிகள் மீட்டுவதில் திறமையுள்ளவர்கள் உடன் தேவை. திருமண சேவை நிலையம் 6, நவீன சந்தை மேல் மாடி, யாழ்ப்பாணம். (B-308)


...வாக கல்முனை அரசடிச் சந்தியில் பிரமாண்டமான நினைவுத் தூபி ஒன்றும் கல்முனை பொலிஸ் நிலையத்தை அண்மியுள்ள நாற்சந்தியில் இறந்த அனைத்துப் போராளிகளின் நினைவுச் சின்னமாக மற்றொரு பிரமாண்டமான நினைவுத் தூபியும் தற்போது பொதுமக்களால் அமைக்கப்பட்டு வருகின்றன. (48)

...அலுவலகம் ஆகியவற்றில் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது.

உயிரிழப்பு, காயமுற்றோர், தொழில் ஆரம்பித்தல் (ரூபா 4,000) ஆகிய நிவாரணம் பெற தெரிவானோர்தான் பட்டியலில் இடம் பெறுகிறார்கள்.

பொதுமக்கள் ஆட்சேபனையை இதன் மூலம் தெரிவிக்...

...கலைக்கழக மறுமலர்ச்சிக்கழகத்தின் நூல் நிலையத்திற்கு சமூக, பொருளாதார, அரசியல் நூல்களை அன்பளிப்புச்செய்ய விரும்புவோர் கழக நிர்வாகத்துடன் நேரிலோ அல்லது தபாலிலோ தொடர்பு கொள்ளுமாறு மறுமலர்ச்சிக் கழகத்தினர் ''ஈழநாதம்'' மூலம் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

...லும் இன்றைய தலைமுறையினர்கூடிய ஆர்வம் செலுத்துவது அவசியமாகும்.''

இவ்வாறு நெடுந்தீவுக்கு விஜயம் மேற்கொண்டு நெடுந்தீவு மகாவித்தியாலயத்தில் கருத்தரங்கொன்றை நடாத்திய பனம்பொருள் அபிவிருத்தித் துறையினர் மத்தியில் பேசிய பல்கலைக்கழகத் தாவரவியற் பேராசிரியர் கலாநிதி எஸ். கந்தையா கூறினார்.

...நாற்று நடுவதன் மூலம் விருத்தி செய்ய முடியும் என்றார்.

விரிவுரையாளர் எஸ். பேரின்பநாதன், விரிவுரையாளர் என். நந்தகுமார், பனம்பொருள் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் எஸ். கோகுலதாசன் எஸ். மகேந்திரன் ஆகியோரும் உரை நிகழ்த்தினர்.

## அனுதாபம்

(கொழும்புத் துறை)

உலகத் தமிழர் பண்பாட்டு இயக்கத்தின் இலங்கைக் கிளையில் பலவருட காலமாகத் துணைத் தலைவராகச் சேவையாற்றிய அமரர் எஸ் ஏ. அம்பலவாணரின் மறைவுக்குஉலகத்தமிழர்பண்பாட்டு இயக். இலங்கைக் கிளை அனுதாபம் தெரிவித்துள்ளது.


SOLE AGENT FOR

Black and Decker Power Tools, Gestetner Duplicating and Photo Copy, Machines and Gestetner consumables. Remington Tamil Typewriters

SAMUEL SONS & CO LTD.
206, 208, Hospital Road,
Jaffna. B/337

### வீடு தேவை

அரச பணியிலுள்ள ஒரு தம்பதியினருக்கு யாழ் மாநகர எல்லைக்குள் ஒரு வீடு வாடகைக்கு தேவை. விண்ணப்பிக்குக.

விளம்பர இல:001
C/o. ஈழநாதம்
இல-31, வைமன் வீதி,
யாழ்ப்பாணம். B/150

### தொழில் பங்காளர் தேவை

யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதியில் 45 வருடமாக இயங்கும் ஹாட்வெயர் (இரும்புப் பொருட்கள்) ஸ்தாபனத்திற்கு முதலீட்டுடன் முழுநேர பங்காளர் தேவை. விபரங்களுடன் எழுத்து மூலம் தொடர்பு கொள்ளவும.

விளம்பர இல: 002
C/o. ஈழநாதம். 31 வைமன் வீதி, யாழ்ப்பாணம். (B/149)

ஈழநாதத்துக்கு
எமது இனிய வாழ்த்துக்கள்!

## அன்றீஸ் அன் கம்பனி லிமிட்டெற்
## நாவற்குழி.

எமது ஏற்றுமதித் தரத்திலான (EXPORT QUALITY) பின்வரும் கடலுணவுப் பொருட்களை முதன்முதலாக வடமாகாணத்தில் சந்தைப்படுத்துகிறோம்.

- சுத்தப்படுத்திய இறால்
- ,, கணவாய்
- ,, நண்டு

அத்தோடு

- எமது தொழிற்சாலையிலேயே பதனிடப்பட்ட உரித்த இறைச்சிக்கோழி (Dressed Broilers)

**1 கிலோ கிராம் ரூபா 75/- மாத்திரமே**

- கொழும்பிலிருந்து விசேடமாகத் தருவிக்கப்பட்ட சகல விதமான ஐஸ்கிறீம் (ICE CREAM) வகைகள்-

என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

B/148

## கம்பியூட்டர் கல்வி

**Diploma in data Processing and Computer Programming in Basic Language.**

ஆரம்பம்:

28 மார்ச் 90 - (திங்கள், புதன், வெள்ளி வகுப்புகள்) 10-30 a.m.

7 ஏப்ரல் 90 - சனி, ஞாயிறு வகுப்புக்கள் 11-00 a. m.

கட்டணம் 1500/-

## WORD PROCESSING

ஆரம்பம்: 25 MARCH 1990

O/L படித்த இருபாலாரும் சேரலாம். மிகவும் விளக்கமான முறையில் பயிற்சி அளிக்கப்படும். பயிற்சி முடிவில் சான்றிதழ் வழங்கப்படும். சேரும்பொழுது செலுத்த வேண்டியது ரூபா 500/- மாத்திரமே.

## UNIKCO
## Computer Centre

No: 5, Power House Road,
2-nd Lane,
JAFFNA.

## வெளி நிலை விரிவுரைகள்
## 1990/91

இலங்கைப் பல்கலைக்கழகங்களின் பட்டப்பாட நெறிகளான

- கலைமாணி **B. A.**
- விஞ்ஞானமாணி **B. Sc.** (புள்ளிவிபரவியல்)
- வணிகமாணி **B. Com.**

க. பொ. த, உயர்தரம் 3 பாடங்களில் சித்தி அல்லது பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் விண்ணப்பிக்கலாம்.

விபரத்தினையும் விண்ணப்பப் படிவத்தினையும் ரூபா 10 செலுத்தி நேரில் / தபால் மூலம் பெற்றுக் கொள்ளலாம்.

**விண்ணப்ப முடிவுத்திகதி: 31-3-1990**

**புதிய பிரிவு விரிவுரைகள் 1-4-1990இல் ஆரம்பமாகின்றன.**

உதவிப் பதிவாளர்,
**பட்டப் படிப்புகள் கல்லூரி,**
148/1, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

(B-146)

# லித்வேனியா இராணுவம் அமைக்க சோவியத் யூனியன் தடை

(மொஸ்கோ)

லித்வேனிய அரசு தனது உள்நாட்டு பாதுகாப்பிற்காக தனிப்பட்ட இராணுவம் ஒன்றை அமைக்க எத்தனிப்பதை உடனடியாக கைவிட வேண்டும் என சோவியத் ஜனாதிபதி கொர்பச்சேவ் கேட்டுள்ளார்.

இராணுவம் அமைக்கும் முயற்சியை கைவிட லித்வேனியாவுக்கு கொடுத்த காலக்கெடு நேற்றுடன் முடிந்துவிட்டது. அதேவேளை சோவியத் படையில் இருக்கும் லித்வேனியப் படையினரை உடனடியாகக் கடமைக்குத் திரும்பும்படியும் கொர்பச்சேவ் உத்தரவிட்டுள்ளார்.

இது குறித்து விவாதித்த லித்வேனியத் தலைவர் லயன்ஸ் பேகட் இப்பிரச்சினை பற்றி தாம் தகுந்த முடிவு எடுக்கவேண்டும் என பாராளு மன்றத்தில் தெரிவித்தார்.

கொர்பச்சேவ் மீது தாம் நம்பிக்கை வைத்துள்ள போதும் சோவியத் இராணுவ பலமும், ஆட்சியாளர்களின் நெருக்கடியும் அவரை மாற்றலாம் என தாம் அஞ்சுவதாகவும் அவர் தெரிவித்தார்.

சுதந்திர லித்வேனியாவின் இறைமையை வெளிப்படுத்தும் முயற்சியோடு புதிய அரசாங்கம் ஒன்றை உடனடியாக நிறுவி உலக அங்கீகாரத்தை பெறவேண்டும் என்றும் அவர் கூறினார்.

இதேவேளை மொஸ்கோவுக்கும், பால்டிக்குடியரசுக்கும் இடையே பதற்றம் நீடிப்பதைத் தொடர்ந்து லித்வேனியாவைவிட்டு மேற்குத்தேச அரச பிரதிநிதிகளை வெளியேறுமாறு சோவியத் அதிகாரிகள் கேட்டுள்ளனர்.

## மின் ஒழுக்கினால் கடை தீக்கிரை

(மட்டக்களப்பு)

மின் ஒழுக்கு காரணமாக வீடியோ நிறுவனமொன்று தீக்கிரையானது.

இச்சம்பவம் அண்மையில் மட்டக்களப்பு ஆனைப்பந்தி சந்தியில் நடைபெற்றது.

நள்ளிரவு நேரம் இவ்விபத்து நடைபெற்றதால் தீயணைப்பு முயற்சிகள் மேற்கொள்ளப்படாத நிலையில் சகல உடமைகளும் எரிந்து விட்டன. (37)

## இந்தியா அண்டை நாடுகளில் ஆதிக்கம் செலுத்தப் பார்க்கிறது

— பாகிஸ்தான் ஜனாதிபதி

(இஸ்லாமாபாத்)

இந்தியா சிறிய அயல்நாடுகள் மீது ஆதிக்கம் செலுத்த முயற்சிக்கிறது என்று பாகிஸ்தான் ஜனாதிபதி குலாம் இஸாக்கான் குற்றம் சாட்டியுள்ளார்.

நேற்றுமுன்தினம் இங்கு நடைபெற்ற பாகிஸ்தான தேசிய தின இராணுவ அணிவகுப்பில் ஜனாதிபதி உரையாற்றிய போது இவ்வாறு கூறினார்.

இந்தியா தன்னை இராணுவ ரீதியாக தயார்படுத்திக் கொள்வது தெற்காசியப் பிராந்தியத்தில் அமைதியின்மையைத் தோற்றுவிக்கும் என்றும் அவர் கூறினார்.

இராணுவ பலத்தின் மூலமாக சில நாடுகள் மக்களை அடிமையாக்க முயற்சிக்கின்றன எனவும் பாகிஸ்தான் ஜனாதிபதி தெரிவிக்கார்.

## வீதிகளின் சீர்கேடு

(புங்குடுதீவு)

புங்குடுதீவுப் பகுதியின் பிரதான வீதியில் ஆஸ்பத்திரி சந்திக்கும் சந்தையடிக்கும் இடைப்பட்ட பகுதி மிகமோசமாக காணப்படுகிறது.

அத்துடன் வல்லன் ஊடாகச் செல்லும் வீதியும் குன்றும் குழியுமாக காணப்படுவதால் அப்பகுதியால் வாகனங்கள் செல்லமுடியாதுள்ளது. இதனால் வல்லன் பகுதி பிரயாணிகள் நீண்ட தூரம் நடந்து வந்து ஆலடிச் சந்தியிலிருந்தும் குறிச்சுக் காட்டுச் சந்தியிலிருந்தும் தமது பிரயாணத்தை மேற்கொள்ள வேண்டியுள்ளது.

## எழுது வினைஞர் தொழிற்சங்கம் புனரமைக்கப்பட்டது

(கொழும்புத்துறை)

அரசியல் சூழ்நிலை காரணமாகவும், அரசின் நெருக்கடி காரணமாகவும் கடந்த சில ஆண்டுகளாக செயற்படமுடியாது முடக்கி வைக்கப்பட்டிருந்த அரசாங்க எழுது வினைஞர் சங்கத்தின் யாழ். மாவட்டக் கிளை புனரமைப்புச் செய்யப்பட்டுள்ளது.

இப்புனரமைப்புக் கூட்டம் யாழ். கல்வித்திணைக்கள அலுவலகத்தில் நடைபெற்றது. அரசாங்க எழுது வினைஞர் சங்கத்தின் நீண்ட கால உறுப்பினரான திரு. செ. பரராஜசிங்கம் சங்க யாழ். கிளையைப் புனரமைப்புச் செய்து வைத்துப் பேசுகையில் தற்போதுள்ள சூழ்நிலையில் சங்கம் தீவிரமாக இயங்க வேண்டிய அவசியம் பற்றி வலியுறுத்தினார்.

நடப்பு வருடப் பொதுக் கூட்டம் இவ்வாண்டு நடுப்பகுதியில் யாழ்ப்பாணத்தில் நடாத்தப்பட இருப்பதால் சகலரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டுமென்றும் அவர் அங்கத்தினர்களைக் கேட்டுக் கொண்டார்.

## உயிர்விட்ட பொம்மை அரசு!

இலங்கையின் வடகிழக்கு மாகாணங்களில் இருந்து இந்திய சமாதான (!) படை வாபஸ் ஆகிற இறுதிக் கட்டம் அங்கே இருந்த வரதராஜப் பெருமாளின் பொம்மை அரசுக்கும் இறுதிக் கட்டமாகி விட்டது! விமானம் ஏறி அவர் இந்தியாவுக்குத் தப்பி வந்தது ஒரு பரிதாபம் கலந்த தமாஷ் காட்சி!

இந்த லட்சணத்தில் வரதராஜப் பெருமாள் ''ஈழக் குடியரசு''என்று தனதுஆட்சியை அறிவித்தது அவர் செய்த கடைசி தமாஷ்களில் ஒன்று! இப்படி ஒரு கேலிக்கூத்தான நிலை ஏற்படும் என்று தான் தமிழக முதல்வர் (பேச்சு வார்த்தைகள் நடத்தியபோது அவரைக் கௌரவமாக ராஜினாமா செய்யச் சொன்னார். 'அதெல்லாம் முடியாது' என்று வீறாப்பு பேசினார் வரதராஜப் பெருமாள்.

தஞ்சம் அடைந்தவரைக் கேலி செய்வது நம் எண்ணமல்ல! இருப்பினும் மக்கள் ஆதரவோ நமது ராணுவத்தைத் தவிர தன்னைப் பாதுகாக்க வேறு சக்தியோ அற்ற ஒரு அமைச்சரவையைப் பிடிவாதத்துடன் உட்காரவைத்து வரதராஜப் பெருமாளை ஏதோ ஈழ மக்களின் மாபெரும் தலைவரைப் போல அன்றாடம் டி. வி. யில் காட்டி மக்களை முன்னாள் இந்திய அரசு எந்தஅளவுக்கு ஏமாற்றியிருக்கிறது என்பது இப்போதாவது புரியும்! வரதராஜப் பெருமாளைப்பார்த்து எழும் உலகளாவிய சிரிப்பு உண்மையில் ராஜீவ் அரசின் ராஜதந்திரத்தைப் பார்த்து எழுகிற சிரிப்பு அலையே!

வி. பி. சிங் அரசு வீம்புக்கு வரதராஜப்பெருமாளை ஆதரிக்காமல் யதார்த்தமாகச் செயல்பட்டிருக்கிறது. அது போதாது! முந்தைய அரசு ஈழப் பிரச்சினையில் செய்த குழப்பங்களைப் போக்கி நல்ல தீர்வு காணவேண்டும். தமிழர்களின் பாராட்டைப் பெற அதுவே வழி!

நன்றி: யூனியர் போஸ்ட்

## சாவகச்சேரி நகரில் கடைகள் பூட்டும் தினங்கள்

(சாவச்சேரி)

சாவச்சேரி நகரில் ஞாயிறு அரை நேரமும், திங்கள்முழு நேரமும் கடைகள் பூட்டுவது என்று சாவகச்சேரி வர்த்தகர் சங்கம் தீர்மானித்துள்ளது.

இத்தீர்மானம் 25 ஆம்திகதி ஞாயிறு முதல் தொடர்ந்து நடைமுறையில் இருக்கும்.

சாவகச்சேரி வர்த்தகர்சங்கம் அண்மையில் கூடிகடை பூட்டும் தினங்கள்பற்றி தீவிரமாக ஆலோசனை நடத்தியது. ஈற்றில் ஞாயிறு அரை நாளும். திங்கள் முழு நாளும் பூட்டுவது என ஏகமனதாகத் தீர்மானித்துள்ளது. (35)

## கன்சவேட்டிவ் கட்சி தோல்வி

(லண்டன்)

பிரிட்டனில் இடம் பெற்ற இடைத் தேர்தல் ஒன்றில் ஆளும்கட்சியான கன்சர்வேட்டிவ்கட்சி தோல்வி அடைந்துள்ளது.

மத்திய இங்கிலாந்துதொகுதியில் நடைபெற்ற இந்த இடைத்தேர்தலில் தொழிற்கட்சி வேட்பாளர் ஹீல், கன்சர் வேட்டிவ் கட்சி வேட்பாலர் சார்ஸ்ஸை விட9,449 அதிகப் படியான வாக்குகளால் வெற்றி பெற்றுள்ளார்.

1987 இல் நடைபெற்ற பொதுத் தேர்தலில் இந்தத் தொகுதியில் கன்சர்வேட்டிவ் கட்சியே வெற்றி பெற்றிருந்தது.

## இன்று பொதுத்தேர்தல்

(சிட்னி)

அவுஸ்திரேலியா பொதுத் தேர்தல் இன்று நடைபெறுகிறது. நேற்று நடைபெற்ற அபிப்பிராய வாக்கெடுப்பில் கன்சர்வேட்டிவ் கட்சிக்கும் தொழிற் கட்சிக்கும் இடையில் கடுமையான போட்டி நிலவுகிறது எனத் தெரிவிக்கப் பட்டுள்ளது.

தற்போது தொழிற்கட்சி ஆட்சி செய்கிறது. கன்சர்வேட்டிவ்கட்சி எதிர்க் கட்சியாகவுள்ளது.

அவுஸ்திரேலியாவிலிருந்து வெளியாகும் பத்திரிகையொன்று நடாத்திய மதிப்பீட்டில் தொழிற்கட்சி கன்சர் வேட்டிவ் கட்சியை விட இரண்டு புள்ளிக கூடுதலாசப்பெற்று நான்காவது முறையாக அதிகாரத்துக்கு வரும் என தெரிவிக்கப் பட்டுள்ளது.

ஆனால் மற்றொரு பத்திரிகையான டெய்லி மிரர்நடாத்திய மதிப்பீட்டின்படி லிபரல் கட்சி ஒரு புள்ளியால் முன்னணியில் நிற்கிறது.

## சட்டவிரோத மின்பாவனை வவுனியா நகரில் துண்டிப்பு

(வவுனியா)

இந்தியப்படை வவுனியாவை விட்டு சென்றதன் பின், மின்சாரத்தால் அதிகளவு இலாபம் கிடைத்து வருகிறது. இப்போது நிலவும் அமைதியினால் புதிய வேலைத் திட்டங்களை ஆரம்பித்துள்ளோம் என்று வவுனியா நகரசபையின் செயலாளர் திரு ராசா தணிகாசலம் தெரிவிக்தார்.

புதிதாக வவுனியா நகரப் பகுதியெங்கும் நவீன (ரியூப்) தெருவிளக்குகள் பொருத்தும் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

திருட்டு மின்சார இணைப்புகள் கண்டு பிடிக்கப்பட்டு, கத்தரிக்கப்பட்டு வருகின்றன என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

விரைவில் நகரசபை நிர்வாகத்திற்குட்பட்ட வீதிகள், வீடுகள் எங்கும் மின் விநியோகம் வழங்கப்பட இருப்பதாகத் தெரிவித்த அவர், போதிய நிதி உதவியை தாம் வெளிநாட்டு நிறுவனங்களிடம் எதிர்பார்ப்பதாகவும், அது கிடைக்கும் பட்சத்தில் வவுனியா நகரம் சிறப்பாக்கப்படும் என்றும் குறிப்பிட்டார். (தி)

## புலமைப்பரிசிலில் சித்தி

(வடமராட்சி கிழக்கு)

ஐந்தாம் ஆண்டுப் புலமைப் பரிசில் பரீட்சையில் பளை மகா வித்தியாலயத்திலிருந்து தோற்றிய மாணவர்களில் மூவர் சித்தியடைந்துள்ளனர்.

இராமலிங்கம் றஜேஜன், அரியரத்திளம் செந்தூரன், தர்மலிங்கம் சுதாகரன் ஆகிய மூன்று மாணவர்களே ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தவர்களாவார்கள்.

பளை தொத்தணியில் இப் பரீட்சையில் இராமலிங்கம்

## அன்னை பூபதிக்கு நெல்லியடியில் அஞ்சலி

(கரவெட்டி)

நெல்லியடி பஸ் நிலையத்தின் முன்பாக பந்தலிட்டு அன்னை பூபதியின் உருவப்படம் வைக்கப்பட்டுள்ளது. அதனைச்சூழ தோரணங்களாலும், கறுப்பு கொடிகளாலும் அலங்கரிக்கப்பட்டுள்ளது. (18(

## யாழ்நகரில் முதல் விண்ணப்பங்களுக்கு குழாய் நீர் விநியோகம்

## வவுனியா பாடசாலைகளுக்கு புனரமைப்பு நிதி

(வவுனியா)

புனர்வாழ்வு புனரமைப்பு திட்டத்தின் கீழ் வவுனியா

## யானை அடித்து தந்தையும் மகனும் படுகாயம்

(வந்தாறுமூலை)

வந்தாறுமூலைக்கு அண்மிய வயல் பிரதேசங்களில் தற்போது காட்டு யானைகளின் தொல்லை அதிகரித்து காணப்படுகிறது. இதனால் விவசாயிகள் அச்சத்துடன் தொழில் செய்ய வேண்டிய நிலை தோன்றி உள்ளது.

இந்த யானைகள் வேளாண்மை வயல்களை

பெற்று வருகின்றனர். இதனால் மேற்படி பகுதி விவசாயிகளிடம் மிகுந்த பீதி தோன்றி உள்ளது.

## அமைப்பு வேலைகள்

(நெடுங்கேணி)

நெடுங்கேணிப் பிரதேசத்

## செஞ்சிலுவைச் சங்கம் அங்குரார்ப்பணம்

(நெடுங்கேணி)

வவுனியா மாவட்ட செஞ்சிலுவைச் சங்க அங்குரார்ப்பணக் கூட்டம் வவுனியாவில் வைத்தியக் கலாநிதி க. இளங்கோ தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்திற்கு சர்வதேசச் செஞ்சிலுவைச் சங்க இலங்கைப் பிரதிநிதி திரு. கொக்காவ, வடபிரதேச செஞ்சிலுவைக் சங்கச் செயலாளர் திரு. சிவானந்தராஜா ஆகியோர்

மூன்று மாணவர்கள் ஐந் தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந் தவர்களாவார்கள்.

பளை றொத்தணியில் இப் பரீட்சையில் இராமலிங்கம் றஜேன் மிகக் கூடுதலான புள்ளிகளைப் பெற்று சித்தி யடைந்துள்ளார். (36)

## முதல் விண்ணப்பங்களுக்கு குழாய் நீர் விநியோகம்

(யாழ்ப்பாணம்)

யாழ் மாநகரசபையிலிருந்து குழாய் நீர் பெறுவதற்காக விண்ணப்பித்தோரில் முதல் ஆயிரம் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்பட உள்ளது.

தெரிவு செய்யப்பட்ட விண்ணப்ப தாரிகளுக்கு பிரத்தியேக கடிதம் கிடைத்தவர்சள் உடனடியாக உரிய விண்ணப்பப் பத்திரத்தை நீர் விநியோக சபையிடம் பெற்று விண்ணப்பிக்குமாறு வேண்டப்பட்டுள்ளனர்.

விண்ணப்பங்களைத் சமர்ப்பிக்கத்தவறுவோர் முன்னுரிமை நீக்கப்பட்டு விண்ணப்பித்த அடிப்படையில் ஏற்றுக் கொள்ளப்படும் என மாநகர சபை உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (ஃலா)

## வ.பி.இ.போ.ச. ஊழியர்களுக்கு சம்பள அதிகரிப்பு இல்லை

(கோண்டாவில்)

அரசாங்க ஊழியர்களுக்கு கடந்த ஜனவரி மாதம் முதல் அதிகரிக்கப்பட்டுள்ள இரு நூறு ரூபாய் சம்பள உயர்வு வட பிராந்திய போக்குவரத்து சபை ஊழியர்களுக்கு இதுவரை வழங்கப்பட வில்லை.

மேலும் சில மாதங்களுக்கு முன்பு அரசாங்க ஊழியர்களுக்கு கஷ்ட நிவாரணமாக வழங்கப்பட்ட ஆறு மாதங்களுக்கான அரை மாத சம்பளத்தொகையும் தமக்கு கிடைக்கவில்லையென புகார் தெரிவித்துள்ளனர். (34)

## பாடசாலைகளுக்கு புனரமைப்பு நிதி

(வவுனியா)

புனர்வாழ்வு புனரமைப்பு திட்டத்தின் கீழ் வவுனியா மாவட்டத்திற்கு சில பாடசாலைகளுக்கு செலவு செய்ய நிதி வழங்கப்பட்டுள்ளது.

நெடுங்கேணி மகாவித்தியாலயம் 1.5 மில்லியன் ரூபா, நயினாமடு அ. த. க. பாடசாலை திருத்த வேலைக்கு 5 லட்சம் ரூபா, பட்டிக்குடியிருப்பு அ. த. க. பாடசாலை திருத்த வேலைக்கு 5 லட்சம் ரூபா, ஒலுமடு அ. த. க. பாடசாலை திருத்த வேலைக்கு 5 லட்சம் ரூபா என்பனவே.

விரைவில் இந்தப் பாடசாலைகளில் வேலைகள் ஆரம்பிக்கப்படும் என உயர் அதிகாரி ஒருவர் ஈழநாதத்துக்கு தெரிவித்தார். (31)

படுகிறது. இதனால் விவசாயிகள் அச்சத்துடன் தொழில் செய்ய வேண்டிய நிலை தோன்றி உள்ளது.

இந்த யானைகள் வேளாண்மை வயல்களை அழிப்பதுடன் மற்றும் வாடிகள், தென்னை மரங்கள் போன்றவற்றையும் நாசம் செய்துள்ளன. அத்தோடு ஆட்களையும் தாக்கி உள்ளன. இத்தாக்குதலுக்கு இலக்காகி பலர் அரச வைத்திய சாலைகளில் சிகிச்சை பெற்றுவருகின்றனர்.

கடந்த வெள்ளிக்கிழமை இரவுசித்தாண்டியைச் சேர்ந்த இளையதம்பி ஆறுமுகம் என்னும் விவசாயியும் அவரது மகன் ஒருவரும் யானை மிதித்து மிகவும் ஆபத்தான நிலையில் மட்டக்களப்பு அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை

## அமைப்பு வேலைகள்

(நெடுங்கேணி)

நெடுங்கேணிப் பிரதேசத்தில் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் சிற்றூரவை அமைப்பு வேலைகள் பூர்த்தியடைந்து விட்டன.

மிகத் துரிதகதியில் இவ் அமைப்பு வேலைகள் நடைபெற்றன. ஒவ்வொரு கிராம சேவகர் பிரிவிலும் ஒவ்வொரு சிற்றூரவை அமைக்கப்பட்டன.

நெடுங்கேணி பிரதேசப் பொறுப்பாளர் திரு சேரன் சிற்றூரவையின் பணிகளையும் சிற்றூரவையின் நோக்கங்களையும் எடுத்துக் கூறினார்.

இக்கூட்டத்திற்கு சர்வதேசச் செஞ்சிலுவைச் சங்க இலங்கைப் பிரதிநிதி திரு. கொக்காவ, வடபிரதேச செஞ்சிலுவைக் சங்கச் செயலாளர் திரு. சிவானந்தராஜா ஆகியோர் கலந்து கொண்டனர்.

## வீதி திருத்தப் படாமையால் நோயாளர் அவதி

(கோண்டாவில்)

கோண்டாவில் ஆஸ்பத்திரி வீதி நீண்டகாலமாக திருத்தப்படாமல் உள்ளது. வீதி முற்றாக அழிந்து குன்றும், குழியுமாக இருப்பதால் வாகனங்களில் கொண்டு வரப்படும் நோயாளிகள், கர்ப்பிணிப் பெண்கள் பலவாறான சிரமங்களை அனுபவித்து வருவதைக் காணக்கூடியதாக உள்ளது. (34)


## இரண்டாம் ஆண்டு நினைவு அஞ்சலி



வீரத் தமிழ் அன்னை பெற்றெடுத்த திலகம் அன்னை பூபதி
மட்டக்களப்பு மண் மாண்புடன் தந்த வீரமகள் பூபதி
தன் குலக் கொடியின் விடுதலைக் களத்தில் முன்னணி வீராங்கனை
ஈழத் தமிழ் இனத்தின் விடுதலைப் பணிக்கு
இடர் நேர்ந்த போது அத்துயர் துடைக்க
உண்ணா நோன்பில் உயிர் துறந்த
அன்னை பூபதியின் தியாகம் காலமெலாம் வாழும்
தியாகத்தின் ஈராண்டு பூர்த்தியில் எமது

**இதய அஞ்சலிகள் காணிக்கை!**

(B-387)

**-தீவக மக்கள் சார்பாக**

தனியார் போக்குவரத்துச் சங்கம்
ஊர்காவற்றுறைப் பிரிவு.

ஈழநாதம்

## நினைவுத் தூபி அமைப்பு வேலைகள்

(ஈச்சமோட்டை)

தமிழீழ விடுதலைப் புலிகளின் இயக்கத்தின் போராளியின் நினைவாக பழைய பூங்கா சந்தியில் ஸ்தூபி ஒன்று அழகுற அமைக்கப்பட்டு வருகிறது.

# சென்.ஜோன்ஸ் இனிங்சால் வென்றது

# சிறந்த வீரராக சுரேன்குமார் தெரிவு

(யாழ். விளையாட்டு நிருபர்)

யாழ். மத்திய கல்லூரியில் நடைபெற்ற சென். ஜோன்ஸ் கல்லூரி, யாழ். மத்திய கல்லூரியின் 87-ஆவது மாபெரும் கிரிக்கெட் போட்டியில் சென். ஜோன்ஸ் கல்லூரி இன்னிங்சாலும், 29 ஓட்டங்களாலும் வெற்றியீட்டியது. இப்போட்டியில் இரு சாதனைகள் நிலைநாட்டப்பட்டது. முதலில் எஸ். சுரேன்குமார் 145 ஓட்டங்களை மிகவும் சிறப்பான முறையில் பெற்று 1982 ஆம் ஆண்டு ஆகக் கூடுதலான ஓட்டங்களைப் பெற்ற பிரகலாதனின் 125 ஓட்டங்களைப் பெற்றசாதனையை முறியடித்தார். இரண்டாவதாக ஆகக் கூடுதலான மொத்த எண்ணிக்கை (309) - 5 விக்கெட் நஷ்டத்திற்குப் பெறப்பட்டதை இன்று சென். ஜோன்ஸ் கல்லூரி 5 விக்கெட் நஷ்டத்திற்கு 311 ஓட்டங்களைப் பெற்று ஒரு சாதனையை நிலைநாட்டியது.

இன்று இரண்டாம் நாள் காலை 9.30க்கு சென். ஜோன்ஸ் கல்லூரி தனது மொத்த எண்ணிக்கையை 311 றாக 5 விக்கெட் நஷ்டத்திற்கு உயர்த்தியதும் ஆட்டத்தை நிறுத்திக் கொண்டு யாழ். மத்திய கல்லூரியை இரண்டாவது இன்னிங்சை விளையாடும்படி பணித்தனர். யாழ். மத்திய கல்லூரி தனது ஆட்டத்தை ஆரம்பித்தனர். யாழ். மத்திய கல்லூரி வீரர்கள் சஜித் 12 ஓட்டங்களையும், சுஜேந்திர ஜித் 23 ஓட்டங்களையும், முகுந்தன் 27 ஓட்டங்களையும், றமேஸ் 31 ஓட்டங்களையும், சிறி சங்கர் 34 ஓட்டங்களையும், நந்தகோபாலன் 11 ஓட்டங்களையும் பெற்று மொத்த எண்ணிக்கையாக 129 ஓட்டங்களை மாத்திரம் பெற்றுள்ளது. சென். ஜோன்ஸ் கல்லூரி சார்பில் பந்து வீசிய கே. பிரசாந்தன் 27 ஓட்டங்களைக் கொடுத்து 3 விக்கட்டுக்களையும், டி. புஷ்பவினோதன் 12 ஓட்டங்களைக் கொடுத்து 2 விக்செட்டுக்களையும் கைப்பற்றினார்கள்.

யாழ். மத்தியகல்லூரி இப்போட்டியைமிகவும் சிறப்பாக நடத்தி பலரின் பாராட்டுக்களைப் பெற்றனர். இவர்களுக்கு மைதானம் சரியான முறையில் இல்லாத காரணத்தால் மிகவும் சிரமத்துடன் இக் கல்லூரியின் மைதானத்தில் பயிற்சிபெற்று சிறப்பாக விளையாடி இப்போட்டியை சரியான முறையில் நடத்திய மைக்கு மத்திய கல்லூரி அதிபர் என். இராசரட்ணத்திற்கும் மற்றும் உத்தியோகஸதர்களுக்கும் தனிப்பட்ட பாராட்டுக்களை பலர் தெரிவித்ததுடன் சென். ஜோன்ஸ் கல்லூரி அதிபர் திரு. தேவசகாயத்துக்கும் நன்றியை பலர் தெரிவித்தனர்.

இப்போட்டியில் சிறந்த துடுப்பாட்டக்காரராக (சென் ஜோன்ஸ் கல்லூரி) எஸ். சுரேன்குமாரும், சிறந்த பந்து வீச்சாளராக (சென் ஜோன்ஸ் கல்லூரி) த. சதீசனும், சகல துறை ஆட்டக்காரராக (சென் ஜோன்ஸ் கல்லூரி) எஸ். பிரசாந்தனும், போட்டியில் சிறந்த வீரனாக எஸ் சுரேன்குமாரும், சிறந்த பந்துகாப்பாளராக யாழ். மத்திய கல்லூரியைச் சேர்ந்த எஸ். நிரஞ்சனும் தெரிவு செய்யப்பட்டனர்.

## பரீட்சை எழுதுவதற்கு மாணவர்கள் விடுதலை

(கொழும்பு)

தெற்கில் சுமார் இரண்டாயிரம் மாணவர்கள் தடுப்பு முகாம்களிலிருந்து எதிர்வரும் க. பொ. த. சாதாரண பரீட்சையில் தோற்ற இன்று விடுவிக்கப்படுகிறார்கள்.

இவர்கள் இன்று தத்தம் பெற்றோரிடம் ஒப்படைக்கப்படவுள்ளதாக பாதுகாப்பு அமைச்சக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இது தற்காலிக நடவடிக்கை என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. இவர்களில் ...டும் எனக் கோரி அரசுக்கு எதிரான வன்முறைகளில் ஈடுபட்டதாக கைது செய்யப்பட்டனர். சிலர் ஜே. வி. பி. நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தனர்.

### தலைவர்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மடைந்தார்கள், பலகோடி ரூபாய் சொத்துக்கள் அழிக்கப்பட்டன, இதுவே இந்திய இராணுவம் தமிழ் மக்களைத்

## ஏழு லட்சத்திற்கு மேற்பட்ட வாகனங்கள் பாவனையில்

(கொழும்பு)

நாட்டில் ஏழு லட்சத்துக்கு மேற்பட்ட வாகனங்கள் இருப்பதாக மோட்டார் போக்குவரத்து திணைக்களம் தெரிவித்துள்ளது.

1980இல் மூன்று லட்சத்து முப்பத்தேழாயிரத்து முன்நூற்றி எண்பத்திரண்டு வாகனங்கள் இருந்தன.

1985இல் ஐந்து லட்சத்து இருபத்தி மூவாயிரத்து, எழுநூற்றி இருபத்தி மூன்று வாகனங்கள் இருந்தன.

1989 டிசெம்பர் வரை ஏழு லட்சத்து பதினான்கு ஆயிரத்து ஐம்பத்தெட்டு வாகனங்கள் இருப்பதாக புள்ளி விபரங்களில் இருந்து தெரிவிக்கப்படுகிறது.

## நயினாதீவில் பத்திரிகைகள் இல்லை

(நெடுந்தீவு)

தினசரிப் பத்திரிகைகள் எதுவும் நயினாதீவுக்கு எடுத்துச் செல்லப்படுவதில்லை எனத் தெரியவருகிறது. கடந்த வருடத்தில் நயினாதீவில் பத்திரிகை விநியோகத்தை மேற்கொண்டு

## ஈழத்து எழுத்தாளரின் நூல்கள் மட்டக்களப்பு பாடசாலைகளில்

(மட்டக்களப்பு)

வட-கிழக்கு மாகாண எழுத்தாளர்களிடமிருந்து மாகாண சபை கொள்வனவு செய்த நூல்கள் நூல்நிலையங்களுக்கு விநியோகம் செய்யப்படுகின்றன.

மாகாண பிரதி கலாசார பணிப்பாளர் திரு. எஸ். எதிர்மன்னசிங்கம் அண்மையில் மட்டக்களப்பு மாவட்ட பாடசாலைகளுக்கு விநியோகம் செய்ய ரூபா 35,000 பெறுமதியான 840 நூல்களை பிரதி கல்விப்பணிப்பாளர் திரு. கு. சோமசுந்தரத்திடம் கையளித்தார்.


கல்முனை பிராந்திய பாடசாலைகளுக்கான ரூபா 20,000 பெறுமதியான 350 நூல்கள் பிரதம கல்வி அதிகாரியிடம் கையளிக்கப்பட்டது.

நாவல், ஆக்க இலக்கியம், நாடகம் என்பன இதில் அடங்

### இந்தியப்படை...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கடைசி அணி இலங்கையிலிருந்து புறப்பட்டுச் செல்வதற்குமுன் இலங்கை இராணுவம் அணிவகுப்பு மரியாதை அளித்துப் பிரியாவிடைகொடுத்தது. திருமலைத் துறைமுகத்திலும் கப்பலிலும் இலங்கைப் பாதுகாப்பு ராஜாங்க அமைச்சரும் வெளிவிவகார அமைச்சருமான ரஞ்சன்விஜேரத்னா,




## கிராமசேவகர்களின் சம்பள முரண்பாடு நீக்கப்பட்டுள்ளது

### தொழிற்சங்க தலைவர் தகவல்

(மட்டக்களப்பு)

கிராமசேவை அலுவலர்களுக்கும் விசேட அலுவலகர்களாக பணிபுரிந்து கிராம சேவை அலுவலகர்களாக பதவி மாற்றம் செய்யப்பட்டவர்களுக்குமிடையிலான சம்பளமுரண்பாடு நீக்கப்பட்டுள்ளது.

இந் நீக்கம் கடந்த பெப்ரவரி மாதம் முதல் அமுல் செய்யப்படும். மேற்கண்டவாறு அண்மையில் கிழக்கிலங்கை கிராமசேவை அலுவலகர்சங்க மகாநாட்டில் சிறப்பு அதிதியாக கலந்து கொண்ட ஸ்ரீலங்கா ஐக்கிய கிராமசேவை அலுவலகர் சங்க தலைவர் திரு சோமபால அனுப்பே தனது உரையில் குறிப்பிட்டார்.

சங்கத்தலைவர் திரு சோலமன் சுப்பிரமணியம் தலைமையில் மட்டு. சார்ள்ஸ் மண்டபத்தில் நடைபெற்ற இம் மகாநாட்டில் அவர் மேலும் பேசுகையில்

அமைச்சருடன் எமது சங்கம் மேற்கொண்ட பேச்சுவார்த்தையின் பிரகாரம் கிராமசேவை அலுவலர்களுக்கு மோட்டார் சைக்கிள் வழங்க இணக்கம் காணப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் 17பேர் தரம் Iக்கு பதவி உயர்வு பெற்றுள்ளார்கள்,

10 வருடங்கள் மேல் பதவி வகித்தோர் தரம் I, 5-10 வருடம் தரம் II, ஏனையோர் தரம் III என பதவி வழங்கப்பட வேண்டுமென்ற கோரிக்கையை முன்வைத்துள்ளோம்.

கோரிக்கை நிறைவுபெற வேலைநிறுத்தம் வழி அல்ல உத்தியோகத்தர்களுடன் இணைந்து செயல்பட வேண்டும்.

நாட்டின் அண்மைக்கால சம்பவங்களில் 365 கிராம சேவை அலுவலர்கள் கொல்லப்பட்டுள்ளார்கள் 613 அலுவலகர்கள் எரிக்கப்பட்டுள்ளனர் என்றார்.

மற்றும் பிரதம அதிதி மேலதிக அரச அதிபர் திரு ஆர் தியாகலிங்கம். ஸ்ரீலங்கா ஐக்கிய கிராம சேவை அலுவலகர் சங்க பொருளாளர் திரு எஸ். பி குணபால ஆகியோரும் பேசினர்.

நீண்டகால இடைவெளிக்குப் பின்னர் தென்பகுதி தொழிற்சங்கவாதிகள் இங்கு வருகை தந்திருப்பதும் குறிப்பிடத்தக்கது. (37)

## கிழக்கின் பல பகுதிகளில் புத்தாண்டுக்கு ஏற்பாடுகள்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு அம்பாறை மாவட்டங்களில் புத்தாண்டு கலகலப்பு தற்போது காணப்படுகின்றது.

பெரும்போக வேளாண்மை ... தாண்டு வர்த்தகம் வழமைக்குத் திரும்பும் என வர்த்தகர்கள் தெரிவித்தனர். (37)

## மட்சார் பாடசாலை

நடத்தைப் பிரிவில் இருந்து விடுவிக்கப்படுகிறார்கள்.

இந்த மாணவர்கள் கடந்த காலங்களில் இந்திய ராணுவம் வெளியேற வேண்

## வங்களாவடியில் அலுவலகம்

(தீவுப்பகுதி)

வேலணைப் பிரதேச சபையின் அலுவலகமொன்று வேலணை வங்களாவடியில் திறக்கப்பட்டுள்ளது. இந்த அலுவலகம் மண்டைதீவு, அல்லைப்பிட்டி, நயினாதீவு, புங்குடுதீவு, வேலணை ஆகிய உப அலுவலகங்களின் தலைமை நிலையமாகும்.

இந்த அலுவலகத்தின் அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகஸ்தராக நெல்லியடி பிரதேச சபை தலைமை அலுவலகத்தில் கடமையாற்றிய திரு. அருணாசலம் நியமிக்கப்பட்டுள்ளார். (15)

## எழுச்சிக் கூட்டம்

(வண்ணார்பண்ணை)

உண்ணா நோன்பு இருந்து உயிர் நீத்த அன்னை பூபதி கணபதிப்பிள்ளையை நினைவு கூறும் எழுச்சிக் கூட்டம் இன்று மாலை 6 மணிக்கு வண்ணார்பண்ணை ஐயனார் கோவிலடி சனசமூக நிலைய முன்றலில் நடைபெறும். இக் கூட்டத்திற்கு விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் உறுப்பினர்களும், தமிழீழ விடுதலைப் புலிகளின் தீவிர ஆதரவாளர்களும் எழுச்சி உரை நிகழ்த்துவார்கள். வண்ணார்பண்ணை வாழ்மக்கள் இக் கூட்டத்தை ஒழுங்கு செய்துள்ளார்கள். (45)

இனியும் இந்தியாவின் அரசியல் இராணுவத்தலையீட்டை விடுதலைப் புலிகள் அங்கீகரிக்கப் போவதில்லை. இதே சமயம் தமிழ் மக்களின் போராட்டத்துக்கு இந்தியாவின் தார்மீக ஆதரவைவேண்டி நிற்கின்றோம். நாங்கள் முன்னைய இந்திய அரசின் நடவடிக்கைகளைக் கண்டிக்கின்றோம். இந்தியப்படை வெளியேற்றத்தைத் தொடர்ந்து புதிய இந்திய அரசுடன் நட்புறவை வளர்த்துக் கொள்ள முயற்சி செய்வோம்.

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் ஏற்படப் போகும் புதிய நட்புறவு ஒப்பந்தத்தில் இலங்கைத் தமிழ் மக்களின் நலனும் பேணப்பட வேண்டுமென வலியுறுத்துவோம்''. என்றும் கலாநிதி பாலசிங்கம் கூறினார்.

### இந்தியப்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஒரு இனத்தின் லட்சியத்தை உயிரிலும் மேலாக நினைத்து அவ்வின விடுதலைப் போராட்டத்திலேயே தனது இரண்டு புதல்வர்களையும் இழந்த நிலையிலும் தானும் அதே உரிமைக்காக உயிரை விட்ட, உலகிலேயே முதல் தாய் என்ற பெருமை அன்னை பூபதியையே சாரும் என்று செல்வி மாலினி மேலும் சொன்னார்.

இக்கூட்டத்தில் பண்டிதர் கணபதிப்பிள்ளை(இவர் லெப் கேணல் சந்தோஷத்தின் தந்தையாவார்), தியாகி மைக்கலின் தந்தை அ. சின்னப்பர், அரியாலை பிரஜைகள் குழுத் தலைவர் திரு. சுந்தரலிங்கம் ஆகியோரும் உரை நிகழ்த்தினர். (லோ)

பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டதாகவும், அதனால் பத்திரிகை விநியோகம் தடைப்பட்டதாகவும் தெரியவருகின்றது.

நயினாதீவுக்குச் செல்லும் பிரயாணிகளும் நயினாதீவுத் துறைமுறைமுகத்தில் கடற்படையினரால் சோதனை செய்யப்படுவதால் தம்முடன் தினசரிகள் எதனையும் கொண்டு செல்லப் பயப்படுவதாகத் தெரிவிக்கின்றனர்.

## இன்று நிவாரணம்

(சுன்னாகம்)

இன்று உடுவில் உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள ஏழாலை வடக்கு (ஜே/98) கிராம சேவகர் பிரிவைச் சேர்ந்த 939 குடும்பங்களுக்கும் சுன்னாகம் (மிகுதி) கிராம சேவகர் பிரிவைச் சேர்ந்த 197 குடும்பங்களுக்கும் இரண்டாம் கட்ட மீளக்குடியமர்வு நிவாரணப் பணம் யாழ். ஸ்ரான்லி வீதியிலுள்ள மக்கள் வங்கிக் கிளையில் வழங்கப்படும்.

இதுவரை நிவாரணப்பணம் பெற்றுக்கொள்ளத் தவறிய வேறு பகுதி விண்ணப்பதாரர்களும், தமது நிவாரணப் பணத்தைப் பெற்றுக்கொள்ள முடியும்.

### பாதிக்கப்பட்டவர்களுக்கு ...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

கின்றார்கள். புனர்வாழ்வு அமைச்சு அம்பாறைப் பகுதிக்கு நிதி ஒதுக்கீடு செய்யவில்லையா? எனவும் இவர்கள் கவலை தெரிவிக்கின்றனர். (48)

### பயிலுனர்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

முன்னர் அறிவித்ததன் பிரகாரம் இராமநாதன் கல்லூரியில் நடைபெறமாட்டாது என கல்வித் திணைக்களம் அறிவித்துள்ளது.

லெப்டினட் ஜெனரல் வணசிங்கா, கடற்படைத் தளபதி அட்மிரல் எச். ஏ. ஏ. சில்வா, விமானப்படைத் தளபதி கேணல் குணவர்த்தனா, இராணுவத்தளபதி வோல்டன் பேரேரா, முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் ஜெனரல் சேபாலா ஆட்டிக்கல ஆகியோரும், இலங்கையிலுள்ள இந்தியத்தூதுவர் மல்ஹோத்திரா மற்றும் அதிகாரிகள், வடக்கு.கிழக்குமாகாண ஆளுநர் ஜெனரல் நளின் செனவிரத்தினா, இந்தியப்படைத் தென்பிராந்தியத் தளபதி ஜெனரல் சட்டர்ஜி ஆகியோர் இந்திய இராணுவத்தின் கடைசி அணியை வழியனுப்பி வைத்தனர்.

இலங்கையிலிருந்து இந்திய இராணுவம் நேற்றுடன் முற்றாக விலகி வெளியேறிச் சென்றது தென்னாசியப் பிராந்தியத்தில் மிக முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்ச்சியாகக் கருதப்படுகிறது.

இவ்வைபவத்தில் உரையாற்றிய பாதுகாப்பு அமைச்சர் ரஞ்சன் விஜேயரத்தினா இந்தியப்படைகளை வாபஸ்வாங்கும் தமது வாக்குறுதிகளை நிறைவேற்றிய இந்திய பிரதம மந்திரி வி. பி சிங்கிற்கும், வெளிவிவகார அமைச்சர் ஐ கே. குஜ்ராலுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொண்டார்.

### ...க்கரைப்பற்று.....

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

மாகும். மேலும் மேற்படிடிப்போவை சுற்றிவர நெற்குற்றும் ஆலைகள் இருப்பதனால் அவற்றின் கழிவுகளான உமிச் சாம்பல் காற்றோடு கலந்து பணிபுரியும் ஊழியர்களின் கண்களிலும் ஏனைய உறுப்புக்களிலும் படிவதோடு சுவாசத்தோடு கலந்து பல ஊழியர்கள் நோய்வாய்ப்பட்டுள்ளார்கள். (46)

நாடகம் என்பன இதில் அடங்கும். (37)

## மன்னாரில் நினைவஞ்சலிக் கூட்டம

(மன்னார்)

பல்வேறு இடங்களில் மன்னார் பகுதியில் அன்னை பூபதியின் நினைவு அஞ்சலி நிகழ்ச்சிகள் நடைபெற்றன. பல இடங்களில் வீதிகள் அலங்கரிக்கப்பட்டு இருந்தன

## பொது கூட்டமும் கலைநிகழ்ச்சியும்

(யாழ்ப்பாணம்)

இன்று மாலை 6 மணிக்கு யாழ்/ஜினா விளையாட்டு மைதானத்தில் தமிழீழ விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் பொதுக் கூட்டமும் கலை நிகழ்ச்சிகளும் நிகழவுள்ளன. பொதுக் கூட்டத்தில் விடுதலைப் புலிகளின் மக்கள் முன்னணியின் பிரமுகர்களும் முஸ்லிம் பிரமுகர்களும் உரை ஆற்றுவார்கள்.

கலை நிகழ்ச்சிகளாக ''நடந்து வந்த பாதை'' என்னும் பொருள்பற்றிய வில்லிசையும் ''விடியலைத் தேடுவோம்'' ''ஒரு கிளி புலியாகின்றது''. என்னும் இரு நாடகங்களும் இடம் பெறும் இந் நிகழ்ச்சிகளை முஸ்லிம் மக்கள் ஒழுங்கு செய்துள்ளார்கள்.

### இராணுவத்தை இலங்கை...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

பிட்டார்.

இனியும் இந்திய இராணுவத்தை இந்தியாவுக்கு வெளியேயெங்கே அனுப்புவதானாலும் பலமுறை நன்கு யோசித்து ஆராய்ந்த பின்னரே முடிவு செய்ய வேண்டுமென்றும் திரு. வெங்கடேஸ்வரன் தெரிவித்தார்.

பெரும்போக வேளாண்மை அறுவடை முடிந்துவிட்டதால் தமிழ் மக்கள் புத்தாண்டு கலகலப்புடன் கொண்டாடுவது வழக்கம்.

புத்தாண்டு கலகலப்பு காரணமாக மட்டக்களப்பு, கல்முனை பட்டின கடைத்தெரு அலுவல்கள் சுறுசுறுப்பாகக் காணப்படுகின்றன.

மக்கள் நடமாட்டம் அதிகமாகக் கடைத் தெருக்களில் காண முடிகின்றது.

அமைதியான சூழ்நிலை காரணமாக, நீண்ட கால இடைவெளியின் பின்பு புத்

### கௌரவமா

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இந்தியத் தூதுவர் மெஹ்ரோத்ரா பேசுகையில் இலங்கையின் ஒருமைப்பாட்டையும் ஐக்கியத்தையும் நிலைநாட்டவே இந்திய இராணுவம் இங்கு வந்தது. இக்கட்டான சூழ்நிலையில் இராணுவம் தனது கடமையைச் செய்துள்ளது. எமது இராணுவ அதிகாரிகளும் சிப்பாய்களும் தமது அயலிலுள்ள நேசநாடான இலங்கைக்காக உயிர்த்தியாகம் செய்துள்ளார்கள். இரு நாடுகளுக்கிடையிலான நட்புறவு நீண்டகாலம் நீடிக்கு'' என்று கூறினார்.

### தபால்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

இதுவரை தபால் சேவைகள் நடைபெறவில்லை, ஊழியர் பற்றாக்குறை காரணமாக இச்சேவை நடைபெற வில்லையெனவும் அறியக்கிடக்கின்றது.

இக்கிராமங்களுக்கு உரிய தபால் சேவைகளை வெகுவிரைவில் நடாத்த ஆவன செய்யப்படும் என அண்மையில் நடைபெற்ற நெடுங்கேணி கோட்ட உதவி ஆணையாளர் கூட்டத்தில் தபால் அதிபர் தெரிவித்தார். (31)

## மாசார் பாடசாலை விளையாட்டுப் போட்டி

(வடமராட்சி கிழக்கு)

கடந்தகால சம்பவங்களினால் சீரழிந்துள்ள கல்விக் கூடங்களை, புனரமைப்பதற்கு பெற்றோர்களின் பங்களிப்பும் அவசியமானதாகும்.''

கிளிநொச்சி கல்வி அதிகாரி திரு. பொன். சபாதி, பளை கொத்தணியிலுள்ள மாசார் அரசினர் தமிழ் கலவன் பாடசாலையின், இல்ல மெய்வல்லுநர் போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும்போது இவ்வாறு கூறினார்.

பாடசாலை அதிபர் திரு. எஸ். கே. ரீ. சிதம்பரப்பிள்ளை தலைமையில் போட்டிகள் நடைபெற்றன. வேறு பலரும் உரையாற்றினர். (36)

## பலாலியில் ரஞ்சன்!


(யாழ்ப்பாணம்)

இலங்கையின் பாதுகாப்பு ராஜாங்க அமைச்சரும் வெளிவிவகார அமைச்சருமான திரு ரஞ்சன் விஜேரத்தினா நேற்றுப் பலாலிக்கு வருகை தந்து இலங்கை இராணுவ அதிகாரிகளைச் சந்தித்துக் கலந்துரையாடினார் எந்தப்பிரச்சினைகளிலும் ஈடுபட வேண்டாமென்று அவர் ஆலோசனை கூறியதாகத் தெரிகிறது.

திருமலையில் நேற்றுக் காலை இந்தியப் படையை வழியனுப்பி வைத்தபின் அநுராதபுரம் சென்று போதி பூஜையில் கலந்துகொண்ட பின் பலாலிக்கும் அவர் வருகைதந்தார்.


இப்பத்திரிகை யாழ்ப்பாணம் வைமன் வீதி, 31-ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1990 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 25-ஆம் தேதி அச்சிட்டு வெளியிடப் பெற்றது



தலை வணங்குவதையும்
கெஞ்சுவதையும் நான்
பெரிதும் வெறுக்கிறேன்
மனிதனின் உணர்வு;
அவன் இயக்கத்தை
நிர்ணயிக்கவில்லை, ஆனால்
அவனது சமுக இயக்கம்
தான், அவனது உணர்வை
நிர்ணயிக்கின்றது.

- கார்ல் மார்க்ஸ்



## சொந்த மண்ணில் அகதிகள் ஆனோம்..

ஏழ்மையின் இடுக்குப்பிடிக்குள்
அகப்பட்டு
வாழ வழியற்றிருக்கும்
வறுமையின் கோலம் அல்ல இது
சொந்த மண்ணிலே
சமைக்கவும், புசிக்கவும்
நிம்மதியாகப் படுக்கவும், எழும்பவும்
உரிமை மறுக்கப்பட்ட
அப்பாவி அகதியின் அவலமே இது
வானமே இவர்களுக்குக் கூரை
கண்ணீரே இவர்களின் குடிநீர்
ஆயினும் இவர்கள்....
வீட்டை இழந்தும்
நாட்டை இழக்கத் தயாரில்லாத
வீரத்தின் விளைநிலங்கள்.

-சாளி

## இருதுருவம்!

அமைதிப் படையின்
கனரக வாகனங்கள்
வீதியில் விரைந்தன!

விலகி நின்று
பார்த்த தாயொருவள்
ராணுவ
வீரர்களைப் பார்த்து
நப்பாசை கொண்டாள்!

'நாளை என் மகனும்
ராணுவ வீரனாக
வீதியில்
கனரக வாகனத்தில் ...

வாகனக் குலுக்கலில்
ஆயுதத்துடன்
எழுந்து விழுந்து
வீதிகளில் அங்குமிங்கும்
பார்வையை வீசித் தேடும்
பாவனையுடன்
பயந்திருந்த
சிப்பாயைக் கண்டு

இன்னொரு தாய்
மனதுள் நினைந்து
பெருமை கொண்டாள்!

'துப்பாக்கியைச்
சுமந்த இவர்கள்
பயந்து நடுங்க
காரணமான மண்ணின்
மைந்தர்கள் பாசறையில்
எனது மகனும்
நடந்து கொண்டிருப்பான்!

**செல்வி ப. கவிதாஜினி**

நாம் அன்றாடம் எவ்வளவோ விடயங்களைப் படிக்கிறோம் அனுபவங்களில் திளைக்கிறோம். உணர்வுகளில் தகிக்கிறோம் -அவற்றை எத்தனை பேர்மற்றவர்களோடு பகிர்ந்து கொள்கிறோம் -இதோ ஓர் அன்பர் தான் படித்து உணர்ந்ததை உங்களோடு பகிர்ந்துகொள்கிறார். நீங்களும் உங்கள் அனுபவ உணர்வுகளை 'ஈழநாதம்' வாசகர்களோடு பரிமாறிக் கொள்ளலாம் அல்லவா? இதோ அவரது கடிதமும் அவர் ரஸித்த மகாகவி தாகூரின் கவிதையும்

## தாயே உனக்காக...

ரவீந்திரநாத் தாகூர்

மகாகவி தாகூரின் வாழ்க்கையில் சோக நிகழ்ச்சிகளும் ஏற்பட்டன. அவருடைய பிள்ளை ஒன்று இறந்த பின்னர் அவர் பாடிய கவிகளில் சோகமும், வேதனையும் நிறைந்திருக்கின்றன.

அப்படியான ஒரு சில பாடல்களை தமிழில் தந்துள்ளேன்.

இலங்கை, இந்தியப் படைகளாலும் அவற்றின் எடுபிடிகளாலும் எத்தனையோ சிறுவர் சிறுமியர் கொல்லப்பட்டனர்.

தாகூரின் கீழ்க் கண்ட கவிகள் அவருக்கு மட்டுமல்ல தங்கள் செல்வங்களை அநியாயமாக இழந்த ஈழத்துத் தாய்மார்களுக்கும் பொருந்தும் என எனக்குப் படுவதால் இவற்றினை தங்களுக்கு அனுப்புகிறேன்.

இவை இன்றைய கால கட்டத்தில் பிரசுரிக்கப்பட வேண்டியவை எனத் தாங்கள் கருதுமிடத்து ஒரு ஞாயிறு பதிப்பில் பிரசுரிக்குமாறு வேண்டுகின்றேன்.

தங்கள் உண்மையுள்ள

க. கனகசபாபதி

— நான் போகவேண்டிய வேளை வந்துவிட்டது. நான் போய் வருகிறேன் அம்மா.

— உதயத்து மங்கிய இருளில் நேற்றுவரை உன்னுடன் கட்டிலில் படுத்திருந்த உனது குழந்தையை [அவன் இன்றும் உன்னுடன் படுத்துக்கொண்டிருக்கிறான் என்ற நினைப்பில்] நோக்கி நீ கைகளை நீட்டும்போது, "உன்னுடைய குழந்தை அங்கே இல்லை" என்று நான் கூறுவேன். அம்மா நான் போய் வருகிறேன்.

— மெல்லிய காற்றின் அலையாய் வந்து நான் உன்னைத் தழுவுவேன். நீ குளிக்கும்போது நீர்த்துளிகளாக நான் மாறி உன்னை மீண்டும் மீண்டும் முத்தமிடுவேன்.

— கார்கால இருளில் மழைத்துளிகள் இலைகளின் மேல் விழும்போது கட்டிலில் உறக்கமின்றிப் படுத்திருக்கும் உன்னுடைய காதுகளில் என்னுடைய குரல் மெதுவாக ஒலிக்கும்.

— திறந்த ஜன்னலூடாக உன்னுடைய அறைக்குள் பாயும் மின்னலின் ஒளியோடு வந்து என்னுடைய சிரிப்பும் உன்னை வந்தடையும்.


— என்னை நினைத்துக்கொண்டு நீ தூங்காது படுத்துக்கொண்டிருக்கையில் வானத்து நட்சத்திரக் கூட்டங்களுக்கிடையே இருந்துகொண்டு "தூங்கு அம்மா தூங்கு" என்று நான் கூறுவேன்.

— சந்திரனின் ஒளிக்கீற்றுக்களினூடே நான் உன்னுடைய கட்டிலை அடைந்து தூங்கிக்கொண்டிருக்கும் உன் மார்பின்மேல் தலைவைத்துப் படுத்திருப்பேன்

— நான் ஒரு கனவாக உன்னுடைய கண்ணிமைகளின் சிறிய இடைவெளிகளினூடாக உனது உறக்கத்தின் ஆழத்திற்குச் சென்றுவிடுவேன். நீ நித்திரை விட்டெழுந்து பரபரப்புடன் எழும்போது ஒரு மின்மினிப் பூச்சிபோல் நான் வெளியே இருட்டிற்குள் தாவி மறைந்து விடுவேன்.

— பூஜைக் காலங்களில் அயலவர்களின் பிள்ளைகள் எங்களுடைய வீட்டில் விளையாடிக் கொண்டிருக்கும்போது புல்லாங்குழலின் ஓசையினூடாக நான் வந்து உன்னுடைய இதயம் முழுவதும் பரவிநிற்பேன்.

— பக்கத்து வீட்டு மாமி பிரசாதங்களுடன் வந்து "குழந்தை எங்கே" என்று கேட்டால் என்னுடைய செல்வன் என்னுடைய கண்மணிகளிலும் சரீரம் முழுவதிலும் உள்ளத்திலும் நிறைந்து நிற்கிறான்" என்று மெதுவாக அவளிடம் நீ கூறு.




## சிறுவர் பக்கம்

சின்னஞ் சிறார்களே......

இது உங்களுக்கான பக்கம்
உங்கள் ஆற்றல்களுக்கும் ஆக்கங்களுக்கும்
இதனைப் பயன் படுத்துங்கள்
அடுத்து வரும் இதழ்கள் உங்களின் ஆக்கங்களைக் கொண்டதாய் சுவையாக வரவுள்ளது. படியுங்கள் — உங்கள் விருப்பத்தை எழுதுங்கள். மீண்டும் அடுத்த வாரம் சந்திப்போம்.

உங்கள்
தமிழண்ணா

## இரண்டு ரஷ்ய குட்டிக்கதைகள்

### அறிவும் அனுபவமும்

வயதான குருவி தன்னுடைய குஞ்சிற்கு கூட்டிலிருந்து பறப்பதற்கு அனுமதியளித்தது. சிறகடித்துப் பறந்த குஞ்சு இது என்ன, அது என்ன என்று வாய் ஓயாமல் அம்மாவைக் கேட்டது.

பூமி, புல், மரம், கோழி, வாத்து, ஏரி என்றால் என்ன என்று அம்மா விளக்கினாள். வானத்தில் ஒரு பெரும் நெருப்பு வட்டத்தைப் பார்த்த குருவிக் குஞ்சு தன் அம்மாவிடம் கேட்டது.

"அது என்ன?"

"அது சூரியன்" என்றது அம்மாக் குருவி.

"சூரியன் என்றால் என்ன?" என்று விடாமல் கேட்டது சின்னக்குருவி.

"உனக்கு எதற்குத் தெரியவேண்டும். அது நெருப்பு" என்று குறைபட்டுக் கொண்டே பதில் சொன்னது அம்மாக்குருவி.

"நெருப்பென்றால் என்னவென்று தெரிய வேண்டும்" என்று சொல்லிய குருவிக் குஞ்சு சூரியனை நோக்கி மேன் மேலும் உயரே பறந்தது. தன் மெல்லிய சிறகுகள் சூடுபட்டுக் கருகும்வரை அது பறந்தது. பயந்துபோன அது திரும்பியது. கவலையுடனிருந்த அம்மாவால் ஒரு வார்த்தைகூடப் பேசமுடியவில்லை.

"இப்பொழுது நெருப்பென்றால் என்னவென்று தெரியும்" என்றது குருவிக் குஞ்சு.

### அம்மாதான் அழகு

ஆந்தைகள் இரவில் மட்டுமே பறக்கும். இவை பிரகாசமான சூரியனைக் கண்டால் பயப்படும். ஆந்தை தனது மகனிடம் சொல்லியது, "பகலில் பொந்திலிருந்து வெளியே போகாதே. சூரிய ஒளி கண்ணைக் குருடாக்கிவிடும். வீட்டிற்கு வரும் வழி தெரியாது" ஆந்தைக் குஞ்சு சொன்ன பேச்சைக் கேட்கவில்லை. கூட்டிலிருந்து வெளியே வந்தது. கண்களைச் சுருக்கிக்கொண்டு புல்வெளியை நோக்கிப் பறந்தது. அங்கே அது கண்ணைத் திறந்து சூரியனைப் பார்த்தது. கண்கள் குருடாயின. புல்லில் உட்கார்ந்து அழுதது. நாரை ஒன்று அதனிடம் வந்தது.

"நீ யாருடைய குஞ்சு?" என்று கேட்டது.

"நான் ஆந்தைக் குஞ்சு. என்னுடைய அம்மா ஆந்தை. எனக்குக் கண் தெரியவில்லை. என்னை அம்மாவிடம் கூட்டிக்கொண்டு போங்கள்"

"உன்னுடைய அம்மா எப்படியிருப்பார்கள்?"

"என்னுடைய அம்மா உலகத்திலேயே மிகவும் அழகானவள். அவளின் கண்கள் மிகவும் அன்பானவை, பிரியமானவை, மென்மையானவை. என் அம்மாவைத் தவிர வேறுயாருக்கும் இம்மாதிரிக் கண்கள் கிடையாது

## அறிந்திருக்க வேண்டியவை

☐ உலகிலுள்ள உயிரினங்களில் அதன் உருவத்தோடு ஒப்பிட்டுப் பார்க்கும் போது மிகப் பெரிய மூளையை கொண்டது சுறுசுறுப்புக்கு பேர்பெற்ற எறும்புதான்.

☐ ஒட்டகத்தின் முதுகெலும்பு எப்படி இருக்கும்? வளைந்து, நெளிந்து இருக்கும் என்றுதானே நினைக்கின்றீர்கள்? இல்லவே இல்லை - ஒழுங்கான நேர் கோடு போன்றே இருக்கும்.

☐ 'சிவப்பு' இரத்தத்தைப் பற்றி எல்லோரும் அறிவீர்கள். ஆனால் வெட்டுக் கிளியின் இரத்தம் வெள்ளை நிறமானது என்றால் உங்களுக்கு ஆச்சரியமாகத் தானே இருக்கும். இதுதான் உண்மை.

☐ ஒரு கோழிக்குஞ்சுக்கு 8000 க்கும் அதிகமானஇறகுகள் உள்ளனவாம்.

☐ 'ரன்' (Run) என்ற ஆங்கிலச் சொல்லுக்கு 832 விதமான கருத்துக்கள் உள்ளனவாம்.

☐ எரிமலைகள் பொங்கி வழிவதனால் உருகியோடும் இரசாயனப் பொருட்கள் எரிந்து சாம்பராகும் அல்லவா? அந்தச் சாம்பலின் தூடுதணிய சுமார் 100 வருடங்களுக்கு மேலாகுமாம்.

## கிளியின் கதை

கிக்கிக் கிக்கீ என்று கத்துங்
கிளியைப் பார் தம்பி - பச்சைக்
கிளியைப்பார் தம்பி.
திக்கித் திக்கிப் பேசுகின்ற
மொழியைக் கேள் தம்பி - மழலை
மொழியைக் கேள் தம்பி.!


நாட்டில் மனிதர் கிளியைப் பிடித்துச்
சிறகை வெட்டினார் - பாவம்
சிறையில் பூட்டினார்.
காட்டில் பறந்து திரிந்த கிளி
கூட்டில் வாடுதே - சோகப்
பாட்டுப் பாடுதே!

பாலும் பழமும் கொடுத்தபோதும்
பறக்கப்பார்க்குதே - கூண்டைத்
திறக்கப்பார்க்குதே
நாலும் தெரிந்த மனிதர் செய்கை
நல்ல தில்லையே - கடவுள்
சொல்லவில்லையே!

— புகளங்கன்

### வாரம் ஒரு அறிவுரை

கற்றல் —
புரிதல் —
தெளிதல் —
உணர்தல் —
இவையே
இளையோரது
வாழ்வின்
அடிப்படை
ஆதாரங்கள்.
ஒருவனை
சான்றோனாக்குவது
அவனது கல்வியின்
அடித்தளமே.
எந்நேர ஓய்விலும்
முன்னேற முயலுவதே
சிறுவர்களாகிய
உங்களது
இலட்சியத் துடிப்பாக
வேண்டும்.
ஏனெனில் —
இந்த நாட்டின்
எதிர்காலம்
உங்களின்
ஆளுமையிலேயே
தங்கியுள்ளது.



☐ எலியைத்தேடும் பூனைக்கு வழிகாட்டுங்கள் பார்க்கலாம்

# ஒருங்கிணைந்த பீடை நோய் கட்டுப்பாடு

● பொன்னுத்துரை பாலகுமார்

இன்றைய உலகில் அதிகரித்துச் செல்லும் சனத்தொகைக்கு உணவிட விவசாயத்துறையில் பெருமளவு தங்கியிருக்க வேண்டியுள்ளது. மட்டுப்படுத்தப்பட்ட நிலப் பரப்பில் மிகக்குறைந்தளவு நேரத்தில் அதிகூடிய உற்பத்தியையும் அதன் மூலம் உணவினையும் பெறுதலே இன்றைய தேவையாகும். இதற்குப் புதிய திருந்திய இனங்களைப் பயிரிடுதலும் பீடை நோய் பரிபாலனத்தை விளைத்திறனாக மேற்கொள்ளுதலும் மிகமிக அவசியமான காரணிகளெனலாம். இவற்றில் ஒன்றான பீடை நோய் பரிபாலனம் பற்றி நோக்குவோம்.

இன்று பொதுவாக பீடை நோய்களின் தாக்கம் நமது நாட்டில் விவசாயத் துறைக்கே அச்சுறுத்தலாகவும், சவாலாகவும் உருவாகி வருகின்றது. சில பயிர்களைத் தாக்கும் பீடைகளை நோய்களை விவசாயத் திணைக்களத்தினால் சிபார்சு செய்யப்பட்ட இரசாயனங்களினால் கூட கட்டுப்படுத்த முடியாத நிலை உருவாகியுள்ளது. உதாரணமாக 1988-89 பெரும்போகத்தில் யாழ். மாவட்டத்தில் மிளகாய்ப்பயிரைத் தாக்கும் குருமன் நோயை அதிசக்தி வாய்ந்த செவிக்குறோன் போன்ற இரசாயனங்களினால் கூடக் கட்டுப்படுத்த முடியாத நிலை உருவாகியிருந்தது. எனவே பீடை நோய்ப் பரிபாலனமானது நன்கு திட்டமிடப்பட்டு வினைத்திறனான முறையில் மேற்கொள்ளப்பட வேண்டும்.

பீடை, நோய்க் கட்டுப்பாடு அல்லது பரிபாலனமானது பலமுறைகளில் மேற்கொள்ளப்படுவதினை நாம் காணலாம் முதலில் இம்முறைகள் பற்றி நோக்குவோம்.

## பண்பாட்டு முறைகள்

பண்பாட்டு முறையிலான கட்டுப்பாடு என்பது உற்பத்தியைப் பாதிக்காத வகையிலே பயிர்களில் மேற்கொள்ளப்படும் பயிர்ச்செய்கை முறைகள் மாற்றப்படுவதன் மூலம் பீடைகள் நோய் விளைவிக்கும் அங்கிகளின் பரம்பலைப் பொருளாதாரத் தாக்க மட்டத்திற்கு கீழ் வைத்திருத்தலாகும். சில முக்கியமான பண்பாட்டு முறைகளையும் அவை எவ்வாறு பயிர்பாதுகாப்பில் உதவுகின்றன. என்பதையும் பார்ப்போம்.

### (அ) எதிர்ப்பினங்கள்

எதிர்ப்பினங்கள் எனப்படுபவை குறித்த ஏதவரத்தில் பாதிப்பைற்படுத்தும் நோய் அல்லது பீடைத் தாக்கத்திற்கு எதிர்ப்புத் தன்மையைக் காட்டுபவையாகும். இத்தகை எதிர்ப்பினங்களை தெரிந்து பயிரிடுவதன் மூலமும், ஆய்வுகளின் மூலமும் பிறப்பாக்குவதன் மூலமும் பீடை நோய் பாதுகாப்பை மேற்கொள்ளலாம். சிலவேளைகளில் தாக்கத்தை ஏற்படுத்தும் சிலகுறிப்பிட்ட நோய்களைக் கட்டுப்படுத்த எந்த விதமான கட்டுப்பாட்டு முறைகளும் இதுவரை கண்டறியப்படவில்லை. இதற்கு உதாரணமாக வைரசு நோய்களைக் கூறலாம். இத்தகைய சந்தர்ப்பங்களில் உள்ள ஒரே ஒரு மாற்றுவழி எதிர்ப்பினங்களை பயிரிடுதலே வேண்டியில் தாக்கத்தை ஏற்படுத்தும் வைரஸ் நோய்க்கு வீ. ரி. என்ற இனத்தையும், மிளகாய் இலைச்சுருள் நோய்க்கு அண்மையில் அறிமுகப்படுத்தப்பட்ட பீ. சி. 1 என்ற இனத்தையும், எதிர்ப்பினகளிற்கு உதாரணமாகக் கூறலாம்.

### (ஆ) பயிர்த்தெரிவு

ஓரிடத்தில் நாட்டப்படுகின்ற பயிரிற்கு சாதகமான சூழலியற் காரணிகள் அமையின் அவை படிப்படியான வளர்ச்சியைக்காண்பித்து தகுந்த நேரத்தில் அறுவடை செய்யக் கூடியனவாக அமைகின்றன. மாறாக சூழலியற் காரணிகள் சாதகமாக அமையாதுவிடின் அவற்றின் பதிய வளர்ச்சிக் காலம் நீட்டப்பட்டு நோய் பீடைகளின் தாக்கத்திற்கு சாதகமாயும் அமைகின்றன. அதேவேளையில் சிலபயிர்கள் சிலகாலங்களில் பீடைகள் நோய்களினால் இலகுவில் தாக்கப்படக் கூடியனவாகவும் விளங்குகின்றன. எனவே குறித்த இடம் கால நிலை என்பனவற்றிற்கு தக்கபயிரிடக் கூடியபயிர்களை தெரிவு செய்து பயிரிடுவதன் மூலம் பயிர்பாதுகாப்பினை மேற்கொள்ளலாம். மேலும் நீண்டநாள் இனங்களைத் தவிர்த்து குறுகிய கால இனங்களை தெரிவு செய்வதன் மூலமும் ஓரளவு கட்டுப்படுத்தலாம்,

### (இ) பயிர் செய்கை நேரம்

பயிர்செய்கை நேரமானது பீடைகளின் விரைவான பெருக்கம், பரம்பல் என்பனவற்றில் தலையீடு உடையதாகவும், செல்வாக்குப் பெற்றதாயும் காணப்படுகின்றது, சில பீடைகள் சில காலங்களில் மிக விரைவாசப் பெருகி கூடுதலான அளவு மட்டத்தை அடைந்து விடும் இயல்பின. ஏனைய காலங்களில் இவற்றின் பெருக்கமும், பரம்பலும் குறைவாகவே இருக்கும். எனவே குறித்த பயிரில் தாக்கத்தை ஏற்படுத்தும் பீடைகளின் பரம்பல் மிகக்குறைவாக உள்ள காலம் அறியப்பட்டு அந்நேரத்தில் பயிர் செய்கையை மேற்கொள்ளவேண்டும். அல்லது குறித்த பயிரைத் தாக்கும் பீடைகளின் பரம்பல்கூட உள்ள காலங்களில் பயிர் அறுவடை செய்யும் கட்டத்தில் இருக்கும் வகையில் பயிர் செய்கையை ஆரபிக்க வேண்டும். உதாரணமாக விவசாயிகளின் அனுபவங்களில் இருந்து வெங்காயத்தை ஆடிமாதத்தில் நாட்டியபோது வெங்காயத்தாள் கோதியின் தாக்கம் மிகக்குறைவாகவே இருக்கிறது.

### (ஈ) பயிர் இடைவெளி

அடர்த்தியான அல்லது நெருக்கமான பயிர் செய்கை முறைகள் பொதுவாக பீடைகளினதும் நோய்களினதும் தாக்கத்திளை அதிகரிக்கவே செய்கின்றன. உதாரணமாக ஆய்வுகளும், அனுபவங்களும் நெற்செய்கையில் நெருக்கமான நடுகைக்கும் பங்கசு நோயின் தாக்கத்திற்கும் நேர் விகிதமான தொடர்புகள் இருப்பதாக கூறுகின்றன. அதாவது நெற்செய்கையில் வரிசைகளிற் கிடையே 4'' உம் வரிசையில் 2'' இடைவெளியிலும் நடவேண்டும் என்பதே சிபார்சு செய்யப்பட்ட பயிரிடைவெளி ஆகும். இதற்குக் குறைந்த இடைவெளிகளில் நெருக்கமாக நடப்படின் பங்கசுத்தாக்கம் அதிகமாக உள்ளமை அறியப்பட்டுள்ளது. மேலும் நெருக்கமாக நடப்பட்ட வயல்களில் கபிலநிற [illegible] தத்தியின் தாக்கம் அதிகரித்துள்ளமையும் அவதானிக்கப்பட்டுள்ளது.

எனவே ஒவ்வொரு பயிருக்கும் விவசாயத்திணைக்களத்தினால் சிபார்சு செய்யப்பட்ட பயிரிடை வெளிகளில் நடுகையை மேற்கொண்டு பீடைநோய் கட்டுப்பாட்டினை செய்யலாம்.

### (உ) பயிர்ச் சுழற்சி

தொடர்ச்சியான ஒரே பயிர் அல்லது ஒரே தாவரவியற் குடும்பங்களை சேர்ந்த பயிர்களின் செய்கைமுறை மண்ணிற்குள் தம் சந்ததிப்பருவிருத்தியைத் தொடரும் பீடைகளின நோய்காவிகளின் பெருக்கத்திற்கு வழி கோலுவதாக அமையும். அத்துடன் இதனால் களைகளும் கட்டுப்படுத்த முடிமுடியாத அளவிற்கு பெருகுவதுடன் பல களைகள் பல பீடைகள் நோய்காவிகளிற்கு இடைவிருந்து வழங்கிகளாகவும் தொழிற்படுகின்றன. எனவே ஒரே பயிரை அல்லது ஒரே குடும்பத்தைச் சேர்ந்த பயிர்களை தொடர்ச்சியாக செய்கை பண்ணாது வேறுபட்ட குடும்பப் பயிர்களை பயிரிடுவதன் மூலம் பீடை நோய்த் தாக்கத்தினை வினைத்திறனாகவும், இலாபகரமாகவும் கட்டுப்படுத்த முடியும்.

உதாரணமாக யாழ். மாவட்டத்தின் சில பகுதிகளில் வருடத்திற்கு மூன்று முறை தொடர்ச்சியாக வெங்காயப்பயிர் செய்கைபண்ணப்படுவதால் வெங்காயத்தாள் கோதியின் தாக்கம் அதிகரிக்கப்பட்டமைக்கு ஒரு காரணமாகக் கூறப்படுகின்றது. மேலும் பொதுவாக கத்தரி, தக்காளி, உருளைக்கிழங்கு, மிளகாய் என ஒரே குடும்பப்பயிர்களை பயிரிடுவதனால் பற்றீரியா வாடல் நோயின் தாக்கம் அதிசரிக்கப்படும். எனவே வெண்டி, மரவள்ளி, பூசனி, வெங்காயம் மிளகாய் என வெவ்வேறு தாவரவியற் குடும்பப்பயிர்களை சுழற்சி முறையில் பயிரிட வேண்டும்.

### (ஊ) இடைப்பெயர்

பூச்சிப் பீடைத்தாக்கத்திற்கு இலகுவில் உட்படக் கூடிய பயிர்களுடன் கவர்ச்சியற்ற, பீடைகளின் நாட்டம் குறைந்த வெறுப்பூட்டும் பயிர்களை இடைப் பயிர்களாக பயிரிடுவதன் மூலம் பூச்சித்தாக்கத்தினை பெருமளவு குறைக்கலாம். பூச்சிகளின் பரப்பலைக் குறைக்க இத்தொழில் நுட்பம் சிறந்ததொரு அணுகு முறை எனலாம் இது சுழற்சிமுறை அல்லது சலப்பு பயிர் செய்கை மேற்கொள்ளப்படும் இடங்களிற்குப் பொருத்தமானது. குரக்கன் போன்றன இதற்கு சிறந்த உதாரணமாகும்

### (எ) பயிர்ச் சுகாதாரம்

நோய்களின், பீடைகள் என்பன பயிரில் காய்கள், பழங்கள் ஏனைய பயிர்ப்பகுதிகள் என்பனவற்றில் தாக்கி அவற்றில் மீதி வாழ்க்கை வட்டத்தை முடித்து புதிய சந்ததியை உருவாக்குகின்றன. இவற்றால் தாக்கப்படும் பயிர்ப்பகுதிகள் மீளவும் தாக்கத்தை உருவாக்கும் மூலவளங்களைக் கழ்கின்றன. எனவே தாக்கப்பட்ட பயிர்பகுதிகளைப் பயிரிலிருந்து பிரித்து சேகரித்து அழித்துவிடுவதன் மூலம் பீடைகளின் தாக்கத்தை குறைக்கலாம். இவற்றை விட வயற்சுகாதாரம் பேணல் சமச்சீரான பசளைப்பிரயோகம் நீர்பாசனக்களம் போன்ற பயிர்ச்செய்கை முறைகள் மூலம் பீடை நோய் பரம்பலைக் குறைத்து அதன் மூலம் ஏற்படும் தாக்கங்களை குறைக்கலாம்.

●

## புகழ்பெற்ற பிரெஞ்சு எழுத்தாளர்
# எமிலிஸோலா
### பற்றிய கட்டுரை

**(சென்ற வாரத் தொடர்ச்சி)**

ராணுவ அதிகாரிகளின் கையெழுத்துக்களும் வாழ்க்கை வரலாறுகளும் கொண்ட புத்தகத்தை பரிசோதித்தனர்.

காப்டன் டிரேபஸ் தான் இந்தக் கடிதத்தை எழுதியிருக்க வேண்டுமென்று தீர்மானித்தனர்.

குற்றமற்ற டிரேபஸ், தேசத்துரோகி எனக் குற்றஞ் சாட்டப்பட்டான்.

வஞ்சகமாக டிரேபஸைக் கைதியாக்கினர். குற்றவாளியுமாக்கினர். ஆயிரக்கணக்கான மைல்களுக்கப்பால் 'டேய்த்தீவு' எனும் தனியிடத்தில் அவனைச் சிறை வைத்தனர்.

பாவம்! நிரபராதியான டிரேபஸ் கைதியானான். அவன் மனைவியும் மக்களும் ஏங்கினர். பொது மக்கள் அவனைத் 'துரோகி' என்றே நினைத்தனர்.

பத்திரிகைகள் டிரேபஸைக் கண்டித்துத் தலையங்கங்கள் எழுதின. மூன்று ஆண்டுகள் சென்றன.

ஜேர்மன் ஸ்தானிகர் பிரெஞ்சு ராணுவக் கேணலுக்கு ஒரு கடிதம் எழுதினார்.

இந்தக் கடிதம் பிரெஞ்சு ராணுவத்தாரிடம் சிக்கியது.

கேணல் தமது குற்றத்தை ஒப்புக் கொண்டார் இராணுவத் தலைவனுக்கும் ரகசிய இலாகாத் தலைவனுக்குந்தான் இவ்வுண்மை தெரியும்.

ரகசிய இலாகாவின் தலைவன் மனம் துடித்தது. டிரேபஸை விடுதலை செய்ய வேண்டுமென்றும் கேணலைத் தண்டிக்க வேண்டுமென்றும் ரகசிய இலாகாத்தலைவன் வாதாடினான். ராணுவத் தலைவனின் கண்களில் தீப்பொறி பறந்தது.

"மூன்றாண்டுகள் ஆகிவிட்டன. இப்போது பழைய கதையைக் கிளப்பி டிரேபஸை நிரபராதி என்று நாம் விடுவிக்க முடியாது. அவன் நிரபராதிதான்."

"அவனை விடுவித்தோமானால் பிரெஞ்சு ராணுவத்தின் கௌரவம் அடியோடு பாழாகிவிடும்." இந்த உண்மை உனக்கும் எனக்கும் மட்டுந்தான் தெரியும்.

"இதை நீ வெளியில் சொல்ல மாட்டாய். சொல்லக் கூடாது. இது என் உத்தரவு" என்றான் ராணுவத் தலைவன்.

ராணுவ கௌரவத்தின் முன்பு, கேவலம் நீதி எம் மாத்திரம்?

எவ்விதமாகவோ டிரேபஸின் மனைவிக்கு இந்தக் கடிதத்தின் நகல் கிடைத்தது.

மற்றும் பல முக்கிய கடிதங்களையும் எடுத்துக் கொண்டு ஸோலாவைப் பார்க்க ஓடினாள் டிரேபஸின் மனைவி.

செல்வத்திலும், சுகத்திலும் புரண்டு கொண்டிருந்த ஸோலோ, டிரேபஸின் மனைவி தம்மைப் பார்க்க வந்திருக்கிறாள் என்பதை அறிந்ததும் தயங்கினான்.

"என் கணவன் நிரபராதி. குற்றம் செய்தவன் ராணுவ உடையில் திரிகிறான். நிரபராதி தன் தீவில் தேசத்துரோகி என்ற பட்டத்துடன் வாழ்க்கையைப் பழாக்கிக் கொண்டு இருக்கிறான். பிரெஞ்சு நாட்டில் நீங்கள் ஒருவர் தான் என் கணவரைக் காப்பாற்றக் கூடும். நீங்கள் எனக்கு உதவி செய்வீர்கள்; செய்யத்தான் வேண்டும்" என்று உருக்கமுடனும் உறுதியுடனும் கூறினாள் டிரேபஸின் மனைவி.

தர்ம சங்கடமான நிலைமை ஏற்பட்டது ஸோலோவுக்கு.

டிரேபஸ் உண்மையில் தேசத் துரோகி என்று தண்டிக்கப்பட்டது நியாயமே என்றும் ஸோலா கருதினான்.

"ஏன்? பிரெஞ்சு தேசம் முழுதுமே அப்படித்தான நினைத்தது. ஜேர்மன் ஸ்தானிகர் கேணலுக்கு எழுதிய கடிதத்தின் நகல், ஸோலாவின் மனதை அடியோடு மாற்றிற்று.

வாழ்க்கையின் ஆரம்பத்தில், தான் பட்ட கஷ்டங்களெல்லாம். ஸோலாவுக்கு நினைவுக்கு வந்தன.

ஒரு நிரபராதியின் வாழ்க்கை ஏன் பாழாக வேண்டும்? அவன் மனிதன் தானே? அவனுக்கு மனைவி மக்களும் உண்டல்லவா?

ராணுவத்தின் பொய்யை, நாடு முழுவதும் நம்புகிறது. ஆனால் நான் தனிமனிதன்.

ஆயினும் சத்தியம் எவ்வளவு பெரிது? சத்தியத்தை யாரும் எப்பொழுதும் மறைக்க முடியாது. சத்தியம் சில காலம் மறைந்தது போல் தோன்றும். ஆனால் சத்தியம் மறையாது. அதை யாராலும் மூடி மறைக்கவும் முடியாது என்று கூறினான்.

ஸோலா 'லயூரப்' என்ற பத்திரிகையில் பிரெஞ்சு நாட்டின் குடியரசுத் தலைவருக்குப் பகிரங்கக் கடிதம் எழுதினான்.

ஸோலா எழுதிய இந்தக் கடிதம் சரித்திரப் பெருமை வாய்ந்தது. உண்மை, வீரம், உணர்ச்சி முதலியவைகள் இந்தக் கடிதத்தில் பொங்கித் ததும்புகின்றன.

பொது மக்களில் பலரும் இராணுவத்தால் தூண்டப் பெற்ற சிலரும் ஸோலாவை எதிர்த்தனர். இவ்வறிஞனின் அரிய நூல்கள் தீக்கிரையாக்கப்பட்டன.

'லயூரப்' பத்திரிகாலயத்தை இடித்துத் தகர்த்தனர். ஸோலா டிரேபஸ் ஆகிய 'இரு துரோகிகளைப் போன்று சிலைகளைத் தயாரித்து அதனைப் பொது இடத்தில் கொளுத்தினர்.

ராணுவத்தார் ஸோலா மீது வழக்குத் தொடர்ந்தனர். நீண்ட நாள் வழக்கு நடைபெற்றது.

# துப்பாக்கிகளை விட சக்திவாய்ந்தது பேனா,,,,

**பகிரதன்**

நீதியும் ராணுவ அதிகாரத்திற்குக் கட்டுப்பட்டு விட்டது.

ஸோலாவும் அவன் வக்கீல்களும் டிரேபஸ் குற்றவாளி அல்ல என்றும் இராணுவம் குற்றமுடையதென்றும் நிரூபித்தார்கள்.

ஆயினும் என்ன பயன்? ஸோலாவைத் தண்டிக்காவிட்டால் தனது பதவியை ராஜினாமாச் செய்வதாகப் பயமுறுத்தினான் ராணுவத் தலைவன்.

> நம்முடைய நாட்டின் விடுதலைக்காக எல்லாவற்றையும் அர்ப்பணம் செய்த வீரர்களின் வாழ்க்கைச் சரித்திரம் என்றைய தினம் நூல்களாக வரப்போகின்றன?

"ஸோலாவைத் தண்டியுங்கள். இராணுவத்தின் கௌரவத்தைக் காப்பாற்றுங்கள்" என்று அலறினர் பிரெஞ்சு நாட்டுராணுவ அதிகாரிகள்.

"மனித உள்ளம்" படைத்த நீதிபதியும் பன்னிரண்டு ஜூரிகளும் "ஸோலா குற்றவாளி" என்று ஏகமனதாகத் தீர்மானித்தனர்.

ஒரு வருட சிறையும் மூவாயிரம் பிராங்க் அபராதமும். யாருக்கு?

உண்மையை அஞ்சாது வெளிப்படுத்திய ஒரு சுதந்திர எழுத்தாளனுக்கு! ஸோலா, பிரெஞ்சு தேசத்தில் மட்டுமல்ல, உலகிலேயே புகழ் படைத்தவர்.

அவர் நண்பர்கள் அவரை இங்கிலாந்து போய் பத்திரிகைகளுக்கு எழுதிப் போராடும் படி செய்தனர்.

மாதம் ஒன்றுக்குப் பத்து லட்சம் உணர்ச்சி ததும்பிய வார்த்தைகள் கொண்ட கட்டுரைகளைத் தொடர்ந்து எழுதினார் ஸோலா.

> "எனக்கு அறிமுகமில்லாத - எவ்விதத்திலும் சம்பந்தமில்லாத - எந்த ஒரு மனிதனின் உரிமைக்காக எனது செல்வத்தை, நாற்பதாண்டுகள் சம்பாதித்த புகழைத் தியாகம் செய்து போராடினேனோ, அந்த மனிதனின் கைகளை ஒருமுறையாவது நான் குலுக்குதல் வேண்டும்."

பிரான்சின் நீதி முறையை உலகம் எள்ளி நகையாடிற்று; ஏளனம் செய்தது. பிரெஞ்சு அரசாங்கத்தில் மாற்றம் ஏற்பட்டது.

புதிய யுத்த மந்திரி டிரேபஸின் வழக்கை ஆராய்ச்சி செய்தார். உண்மை வெளியாயிற்று கேணல் தற்கொலை செய்து கொண்டான். ராணுவத் தலைவன் தம் பதவியை ராஜினாமாச் செய்தான்.

மற்றைய அதிகாரிகள் சிறைப்பட்டனர்.

இங்கிலாந்தில் மறைந்து திரிந்த ஸோலாவுக்கு இவ்விஷயம் எட்டிற்று. ஒரு குழந்தையைப் போலத் துள்ளிக் குதித்தார்.

"எனக்கு அறிமுகமில்லாத எவ்விதத்திலும் சம்பந்தமில்லாத எந்த ஒரு மனிதனின் உரிமைக்காக எனது செல்வத்தை நாற்பதாண்டுகள் சம்பாதித்த புகழைத் தியாகம் செய்து போராடினேனோ, அந்த மனிதனின் கைகளை ஒரு முறையாவது நான் குலுக்குதல் வேண்டும்" என்று கூறி ஆனந்தக் கண்ணீர் பெருக்கினார்.

சுதந்திரத்தின் பெருமையை நிலை நாட்டின பிரான்சு தேசம் நீதியின் பெருமையையும் சத்தியத்தையும் நிலை நாட்டி விட்டது.

"தேசத்தைத் துப்பாக்கியால் அல்ல - எண்ணங்களினால் ஆள வேண்டும்"

உலகில் ஏன் ராணுவம் தலைவிரித்து ஆடுகிறது? இந்தக் கொடிய பேயை அடக்குவது அறிவுள்ள ஒவ்வொரு மனிதனின் கடமையல்லவா?

"இன்று இரவில் லட்சக்கணக்கான இளஞ் சிறுவர்களும், சிறுமிகளும், லண்டன், பாரிஸ், பெர்லின் முதலிய நகரங்களிலும் உலகில் ஏனைய பகுதிகளிலும் அமைதியாக உறங்குகின்றனர்.

"இவ்விளங் கொழுந்துகள் பெரியவர்களான பின்னர் ஏன் ஒருவரை ஒருவர் கொல்லவேண்டும்? ஒருவரை ஒருவர் சொல்வது தர்மமா? நீதியா? பெருமையா? இதனால் விளையும் பயன் என்ன?

"கோடிக் கணக்கான பணத்தை இந்த மிருக உணர்ச்சியைப் பரப்புவதற்காக ஏன் செலவிட வேண்டும்?" என்றெல்லாம் பலவாறாக எண்ணுவார் ஸோலா.

'நீதி' எனும் பெயர் கொண்ட சிறந்த புத்தகத்தை டிரேபஸ் விடுதலைக்குப் பின் 1902 ஆம் ஆண்டில் எமிலி ஸோலா எழுதினார்.

பேய்த் தீவில் தனிமையில் துன்பம் அனுபவித்த டிரேபஸ், அரசாங்க உத்தரவைக் கண்டு ஆச்சரியமுற்றான்.

இராணுவம் அணிவகுத்து நிற்கப் பிரெஞ்சு இராணுவத்தின் தலைமைப் பதவி டிரேபசுக்கு அளிக்கப்பட்டது.

எந்த ராணுவம் அவனைத் தேசத்துரோகி என்று கருதி நாடு கடத்திற்றோ, அதே ராணுவம் இன்று அவனைத் தன் தலைவனாக ஏற்றுக்கொண்டது.

ஓடிவந்த தன் மனைவியை அன்போடு கட்டித் தழுவினான் டிரேபஸ். எல்லோரையும் உற்றுநோக்கினான்.

"ஸோலா! ஸோலா! எங்கே என்றான்.

அன்றைய பத்திரிகை ஒன்றை அவன் கையில் கொடுத்தனர்; தன்னை மறந்து கண்ணீர் உகுத்தான் டிரேபஸ்.

ஏன்? அப்பத்திரிகையின் முன் பக்கத்தில் பெரிய எழுத்துக்களில் ஒரு செய்தியைப் பார்த்தான்.

"எதிர்பாராத தீ விபத்தினால் ஸோலா

(9ஆம் பக்கம் பாக்கர்)




25 - 03 - 1989

இன்றைக்குச் சரியாக ஒரு வருடத்திற்கு முன்னர் ஆனைக்கோட்டைக்கும் குளப்பிட்டி சந்திக்குமிடையில் ஒரு மோதல் சம்பவம் இடம்பெற்றது. விடுதலைப்புலிகளுக்கும் தேசத் துரோகிகளுக்குமிடையில் ஏற்பட்ட மோதல் ஒன்றில் எதிர்பாராமல் ஏற்பட்ட விபத்தின்போது லெப். முகுந்தனும் இரண்டாம் லெப். காந்தியும் வீரமரணமடைந்தனர். அவர்களது முதலாம் ஆண்டு நினைவுதினம் இன்றாகும்.

கடந்த வருடம் இந்த தினத்தில் ஆனைக்கோட்டை அருகில் ஒரு வீட்டிற்கு முகுந்தனும் காந்தியும் மதிய போசனம் எடுப்பதற்காக வந்திருந்தனர். இந்தச் செய்தியை அப்பகுதியிலுள்ள திருவாளர் 'துரோகியார்' ஒருவர் ஆனைக்கோட்டை சந்தியில் அமைந்திருந்த இராணுவ முகாமுக்கும் அதனுள் அமர்ந்திருந்த தேசத்துரோகிகளுக்கும் தகவல் கொடுத்தார். எதிர்பாராத விதமாக தேசத்துரோகிகள் அந்த இடத்தைச் சுற்றி வளைத்துக் கொண்டார்கள். இருபகுதியினருக்குமிடையில் மோதல் ஏற்பட்டது. பல சந்தர்ப்பங்களில் தேசத்துரோகிகள் பின்வாங்கி ஓடினர். தேசத்துரோகிகள் மீது விடுதலைப் புலிகள் தொடுத்த போரில் முகுந்தன் வீசிய கிரனைட் எதிர்பாராமல் ஒரு மரத்தின் மீது பட்டு முகுந்தனும் காந்தியும் நின்ற இடத்தில் விழுந்தமையால் இருவரும் அந்த இடத்திலேயே மரணத்தைக் தழுவிக் கொண்டனர்.

லெப்டினன்ட் முகுந்தனை கப்டன் லோலோதான் அறிமுகம் செய்து வைத்தார். அப்போதைய அரசியல் நிலைப்பாடு பற்றி முகுந்தன் கதைத்தார். இந்திய இராணுவத்திற்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையில் மோதல் ஏற்பட்ட பின்னர் எமது போராட்டம் புதிய பரிமாணத்தைப் பெற்றுள்ளது. இதனால் இதுவரை சிங்கள மக்கள் எமது போராட்டத்தை இனவாதப் போராட்டம் என்ற கண்கொண்டு பார்த்த நிலைப்பாட்டில் மாற்றம் உருவாகுமா? என்பதே 1988 இல் முகுந்தன் கேட்ட கேள்வி. எமது வாரமலர் ஆசிரியர் தந்த ஒரு புத்தகம் இருந்தது. றோகன் குணரத்னா எழுதிய WAR AND PEACE என்ற அந்த நூலை முகுந்தனிடமும் லோலோவிடமும் கொடுத்தேன். அந்த நூலைப்படித்தபின் தருவதாக இருவரும் கூறிச் சென்றனர்.

உயரமான தோற்றம் கொண்ட முகுந்தன் உறுதியான உடற்கட்டும் ஊக்கமும் மிக்கவராகக் காணப்பட்டான். இவனை கடசியாக லோலோவின் மரணச்சடங்கு நடைபெற்ற தினம்தான் பார்த்தேன். அன்றைய தினம் இவன் நன்றாகக் களைத்துப் போயிருந்தான் இவன் மட்டுமல்ல அங்கிருந்த எல்லோருமே அப்படித்தான். கடந்த இரண்டு மூன்று தினங்களாக இந்திய இராணுவ நெருக்கடி அதிகமாக இருந்தப்படியாலும் கடந்த இரண்டு தினங்களாக லோலோவைக் காப்பாற்ற அவர்கள் படாதபாடு பட்டமையாலும் நேரத்திற்கு சாப்பாடு பெற்றுக் கொள்வதில் இருந்த கஸ்டங்கள் சரியான தூக்கம் இல்லாமை இப்படி பல காரணங்களால் அவர்கள் எல்லோரும் களைப்போடு இருந்தார்கள். லோலோவின் மரணச் சடங்கு முடிந்தபின் எல்லா போராளிகளும் கூடிச் சந்திக்கும் அந்தப்பனந் தோப்புக்கு மாலை மூன்று மணிக்குப் பின்பே வந்தார்கள். கப்டன் நெருமலப்னன்ட் குட்டி இவர்களுடன் முகுந்தனும் வந்தான். எல்லோரும் அன்றைய முழுநாள் உணவையே இப்போதுதான் சாப்பிடுகிறோம் என்று சொன்னார்கள் எல்லோரும்உணவு உட்கொண்ட பின் விடை பெற்றுக் சென்றார்கள், அன்றுதான் முகுந்தனை கடைசியாகப் பார்த்தேன்.

முகுந்தனும் காந்தியும் இறந்தபின் ஆனைக்கோட்டை முகாமுக்கு தப்பிச்சென்ற தேசத்துரோகிகள் அங்கிருந்த ஆக்கிரமிப்பு இராணுவக் கும்பலை அழைத்துக் கொண்டு வந்தார்கள் இராணுவம் அந்த இடத்தைச் சுற்றி வளைத்துக் கொண்டது

## நேதாஜி

இராணுவம் வருவதற்கு முன்பே அந்த இடத்து வாசிகள் பலர் இடத்தைக்காலி செய்து கொண்டு வெளியேறி விட்டார்கள். இராணுவ சுற்றிவளைப்பி போது அந்த வழியால் போன பலரும் கைது செய்யப் பட்டனர். பலர் அந்த இடத்து வாசிகளோ அல்ல.

எல்லோரையும் அந்த இடத்துவாசிகள் என நினைத்துக் கொண்டு ஆனைக்கோட்டை முகாம் பொறுப்பதிகாரி கேட்ட ஒரே கேள்வி யார் சுட்டார்கள்? என்பதேயாகும். எல்லோரும் தெரியாது என்றே சொல்லிக் கொண்டு இருந்தார்கள். கைதான அவ்விடத்து வாசிகளில் சிலர் மட்டும் போராளிகள்சிலரது பெயர்களைச் சொல்லிக் கொடுத்துக் கொண்டிருந்தார்கள். இவர்கள் தான் முன்னர் முகுந்தனையும் காந்தியையும் தமது வீட்டுக்கு அருகால் கூட செல்லக் கூடாது என்று சொல்லியிருந்த புண்ணியவான்கள் எனப் பின்னர் அறிந்தேன். இவர்களது இந்தமைய பேச்சுக்களால் மெல்லிய உணர்வு படைத்த முகுந்தன் மனம் உடைந்து போயிருந்ததாக அறிந்தேன்.


லெப்ரினனட் முகுந்தன்

இறந்த நிலையில் கிடந்த இவரது உடலிலிருந்து பாய்ந்த இளம் குருதி ஒரு பள்ளமான பகுதியை நேர்க்கி ஓடிக் கொண்டு இருந்தது. அவர்கள் சிந்திய குருதியை பண் உறிஞ்சிக் கொண்டிருந்தது. இன்றைய செந்நீர்த்தீர்த்தம் நாளைய சுதந்திரப் பூங்காவனம் என்று சிரித்திரன் சிவா ஒருமுறை எழுதிய பொருள் பொதிந்த கருத்துத்தான் எனக்கு ஞாபகத்திற்கு வந்தது.


2 ஆம் லெப்ரினனட் காந்தி

முகுந்தனின் உடலை அடையாளம் கண்டு கொண்டு தேசத்துரோகிகளும் இந்திய இராணுவக் கும்பலும் ஒருவரையொருவர் கட்டிப்பிடித்துக் கூத்தாடினார்கள். மராட்டிய இனத்தவனான இராணுவ கொமாண்டர் ஒருவர் கேள்விகளைக் கேட்டுக் கொண்டே இருந்தார். அதனை முத்து என்ற தமிழ்நாட்டுச் சிப்பாய் ஒருவன் மொழிபெயர்த்துக் கொண்டிருந்தான் இவன் என்னிடமும் கேள்வி கேட்டான். எல்லாக் கேள்விகளுக்கும் தெரியாது என்றே பதில் சொல்லிவிட்டேன். இதனால் ஆத்திரமுற்ற முத்து எனது அடையாள காட்டைப் பறித்தான். கொமாண்டரிடம் இந்தி மொழியில் ஏதோ சொன்னான். கொமாண்டர் எனது அடையாள காட்டைப் பார்த்துவிட்டு நீ ஒரு பொய்யன் என்றார். எனது தொழிலைப் புரிந்து கொண்ட அந்தக் கொமாண்டர் என்னுடன் ஆங்கிலத்தில் கேள்வி கேட்டுக் சொல்லடே கதை கொடுத்தார். நான் அந்தக் கொமாண்டரிடம் நீங்கள் ஏன் இம்சைப்படுத்துகிறீர்கள் என்று கேட்டுவிட்டு 1962 ஆம் ஆண்டு சீன இந்திய யுத்தத்தின் போதும் பின் 1967 இல் இந்திய பாகிஸ்தான் யுத்தத்தின் போதும்மீண்டும் 1971 இல் பங்களா தேசுக்கான யுத்தத்திலும் தமிழர்களாகிய நாங்கள் இந்தியாவுக்கே எமது ஆதரவைக் கொடுத்தோம். ஆனால் இன்று இந்தியா என்ன செய்கிறது. பலஸ்தீன விடுதலை இயக்கத்திற்கு ஆதரவு கொடுக்கும் இந்தியா நமீபிய விடுதலைப் போருக்கு ஆதரவு கொடுத்த இந்தியா தென்னாபிரிக்க நிறவெறிக்கு எதிராக குரல் கொடுத்து அன்சானியா போராட்டத்தை ஆதரிக்கும் இந்தியா ஈழப் போராட்டத்தை மட்டும் முறியடிக்க முயல்வதேன் என்று கேட்டேன். உன்னை முகாமுக்கு கொண்டு போய் ''விசாரிக்கவேண்டும் என்றார். வீரசுதந்திரம் வேண்டி நின்றோர் பின் வேறு ஒன்று கொள்வாரோ'' என்று பாடிய பாரதியின் நாட்டைச் சேர்ந்த நீங்கள் இன்று சுதந்திரம் கேட்ட தமிழினத்தை அழிக்க முயல்வதேன் என்று கேட்டுவிட்டு வியட்னாமியரிடம் அமெரிக்கா தோற்றது போல ஆப்கானிஸ்தானிடம் ரஸ்யா தோற்றது போல விடுதலைப்புலிகளிடம் நீங்கள் தோற்றுப் போவீர்கள். ''அமைதிப்படை என்ற பெயரில் வெள்ளைக் கொடியோடு ஈழத்திற்குள் புகுந்த இந்திய இராணுவம் இரத்தக்கறைபடிந்த கரங்களோடு ஈழத்தைவிட்டு வெளியேறியது. என்பதே வரலாறாக இருக்கும்'' என்று சொன்னேன். இராணுவக் கொமாண்டர் சர்மாவுக்கு ஆத்திரம் பொத்திக் கொண்டு வந்தது. அவர் என் கன்னத்தில் அறைந்தார். அதன் பின் எல்லோரையும் அங்கே நின்ற மினிபஸ் ஒன்றில் ஏறச் சொன்னார். முகுந்தனது உடலையும் காந்தியின உடலையும் அதே வாகனத்தில் ஏற்றச் சொன்னார். பொதுமக்கள் (ஒரு நாலு ஐந்து பேர்) இருவரது உடலை

(12 ம் பக்கம் பார்க்க)

கடந்த ஆண்டு இதே நாளில் வீரமரணமடைந்த லெப். முகுந்தன் (கந்தையா முகுந்தன் - மானிப்பாய்) இரண்டாம் லெப். காந்தி (இரத்தினசபாபதி புஸ்பகாந்தன் நவாலி வீதி ஆனைக்கோட்டை) ஆகிய இருவருக்கும் அவர்கள் மரணித்த அதே இடத்தில் நினைவுச் சின்னம் திறந்து வைக்கப்படுகின்றது. அவர்கள் இருவரதும் நினைவாக இக்கட்டுரை பிரசுரமாகின்றது.

# களத்தில் கேட்கும் கானங்கள்




சில வாரங்களாக நம் யாழ்நகர கடைவீதிக யெங்கும் போவோர் வருவோரை சற்று நின்று நிதானித்து கேட்கத் தூண்டும் வகையில் சில புதிய பாடல்கள் காற்றோடு கலந்து வருவதை கேட்கக்கூடியதாக வுள்ளது.

யாழ். நகரில் மட்டுமல்லாது வடக்கு, கிழக்கு பகுதிகளிலுள்ள நகரங்கள், கிராமங்கள் மூலை முடுக்குகளெங்கும் இப்பாடல்கள் கேட்கின்றன.

'ராஜா கையை வச்சா ...
வா வா வஞ்சிமலரே ஒன்று
தா தா கொஞ்சும்கிளியே .'

போன்ற பாடல்களின் ஆக்கிரமிப்பு தளர்ந்து இந்த புதிய பாடல்கள் இனிய குரல்களில், அற்புதமான இசையுடன் இசைந்து ஒலிக்கின்றன.

தென்னங்கீற்றில்
தென்றல் வந்து மோதும்-
நம்
தேசமெங்கும்
குண்டு வந்து வீழும்
கன்னிமனம்
மெல்ல மெல்ல மாறும்
அவள் கையில் கூட
ஆயுதங்கள் ஏறும்,

சமகால பிரச்சினைகளை, அதனால் ஏற்பட்ட-ஏற்பட்டுக்கொண்டிருக்கிற மாற்றங்கள் மனதைத் தைக்கும் வரிகளில் சொல்லப்பட்ட அந்தப் பாடலைக்கேட்டு என்னுள் ஏதோ நெருட, அண்மையிலுள்ள பாடல் பதிவுக் கூடத்தில் இப்பாடல்கள் அடங்கிய ஒலிப்பதிவு நாடா வொன்றை வாங்கினேன்

'களத்தில் கேட்கும் கானங்கள்' என மகுடமிடப்பட்டிருந்த அந்த நாடாவின் உறையைப் பிரித்துப் பார்த்தேன்.

'இது நினைவுகளின் அலங்காரமல்ல உறுதியின் உருவாக்கம்' என்று உள்ளே குறிப்பிடப்பட்டிருந்ததோடு 'இந்திய சிறீலங்கா கூட்டுச் சதியால் பலாலியில் பலியாகி தீருவில் வெளியில் தீயாகி விட்ட பன்னிரு வேங்கைகளின் நினைவாலயத்தில் இதை காணிக்கையாக்குகிறோம் எனவும் அதில் எழுதப்பட்டிருந்தது.

அந்த நாடாவில் பதிவு செய்யப்பட்டிருந்த ஒன்பது பாடல் ளில் ஏழு பாடல்களை இயற்றியவர் நம் நாட்டுக் கவி

## பாடல் பிறந்த கதை

ஞர் புதுவை இரத்தினதுரை, நமது உணர்ச்சிக் கவிஞர் காசிஆனந்தன் ஒரு பாடலும் தமிழகக்கவிஞர் இ. குலாப் ஒரு பாடலும் இயற்றியுள்ளனர்.

நகர இரைச்சல்கள் அடங்கிப்போயிந்த ஓர் இரவுப்பொழுது. பதினொரு மணியிருக்கும் குளித்துவிட்டுக் கரையேறிவரும் ஒரு பெண்ணைப் போல் ஈரமாக வந்து ஜன்னலில்என்னை எட்டிப்பார்த்து புன்னகைத்துக் கொண்டிருந்தது நிலா. அந்தயௌவன வேளையில் — தொந்தரவற்ற மௌன இரவில்-தன்மையாக பாடல்கள் முழுவதையும் அனுபவித்தேன். நீண்ட இடைவெளிக்குப் பின் எனக்கு ஏற்பட்ட சுகானுபவம் இது.

'கண்மணியே
கண்ணுறங்கு
காவியமே நீயுறங்கு...'

நிம்மதியற்ற ஈழ மண்ணில் ஒரு தாய் தன் குழந்தையை தூங்க வைக்கும் தாலாட்டுப் பாடல். அதன் ஒவ்வொருவரிகளும் உணர்வோடு கூடிய உன்னத வரிகளாக அமைந்துள்ளது.

இன்னொரு பாடல் ... கவிஞர் காசிஆனந்தன் இயற்றியது.

'அடைக்கலம் தந்த
வீடுகளே
போய் வருகின்றோம்
நன்றி - நெஞ்சை
அடைக்கும் துயர் சுமந்து
செல்கின்றோம்
உங்கள் அன்புக்குப்
புலிகளின் நன்றி,

தமக்குப் பாதுகாப்புத் தந்து, உணவளித்து உபசரித்த வீடுகட்கு (மக்களுக்கு) போராளியால் நன்றி கூறி விடைபெறுவதாக அமையும் பாடல் வரிகள்...

எங்கள் உடல்களில்
ஓடும் செங்குருதி
உங்கள் சோறல்லவா -
நாங்கள்
தங்கியிருந்த நாள்
சிலநாள் என்றாலும்
நினைவு நூறல்லவா...

கண்களில் நீரை வரவழைக்கும் இந்த வரிகள் போராட்டப்பாதையில் எதிர்நோக்கும் இன்னல்களையும் ஆனால் தளர்ந்து போகாத உறுதியையும் சோகம் கலந்த இசையில் சொல்கிறது. இன்னும்...

'வீசும் காற்றே தூது
செல்லு
தமிழ்நாட்டில் எழுந்தொரு
சேதிசொல்லு ..'

'காகங்களே காகங்களே
காட்டுக்குப் போறீர்களா
காட்டுக்குப்போய் எங்கள்
காவல் தெய்வங்களை
கண்டு வருவீர்களா...'

'பொங்கிடும் கடற்கரை
ஓரத்திலே...'

'நடந்து வந்த பாதை
தன்னை
திரும்பிப்பாரடா - நீ
நாசவேலைசெய்த பின்பு
வருந்துவாயடா...'

'ஏழு கடல்கள் பாடட்டும்-
அந்த
எட்டாத வானமும்
கேட்கட்டும்,

தீயினில் எரியாத
தீபங்களே - எங்கள்
தேசத்தை உருவாக்க
வாருங்கள்...'

பாடல்களை கேட்டு முடித்த பின் மனதுக்குள் வித்தியாசமான ஓர் உணர்வு குடிகொண்டது. கொதித்துக் கொண்டிருந்த இதயத்துள் ஒரு குளிர் நதி பிரவாகிப்பது போலவும்...

பழுதாய்போய் இருந்த இதய வீணையின் தந்திகள் செப்பனிடப்பட்டு இனிய விரல்களால் மீட்டப்படுவது போலவும்...

விடுதலைப்புலிகள் ஈழ மண்ணில் இந்தியப்படையினரோடு போராடிக் கொண்டிருந்த காலம் .. தமிழ்நாட்டில் பொலிசார் புலிகளை வலை வீசித் தேடிக்கொண்டிருந்த காலம். இக்காலத்தில் தான் இந்த 'களத்தில் கேட்கும் கானம்' பாடல்கள் உருவாகின.

இரவு நேரங்களிலேயே எவருக்கும் தெரியாமல் பாடல்கள் பதிவு செய்யப்பட்டன. தமிழகத்தின் பிரபல பாடகர்கள் டி.எம்.சௌந்தரராஜன் மலேசிய வாசுதேவன், ஜெயச்சந்திரன், நாகூர் பாபு (மனோ), தினேஷ், பி. சுசீலா, வாணிஜெயராம், ராஜேஸ்வரி ஆகியோர் பாடல்களைப் பாடியுள்ளனர்.

இவர்களின் மலேசிய வாசுதேவன், பி. சுசீலா, வாணிஜெயராம் ஆகியோர் வேதனத்தை எதிர்பார்க்காமல் இலவசமாகவே பாடல்களைப் பாடி உதவினர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.


பி. சுசீலா 'கண்மணியே கண்ணுறங்கு' பாடலைப் பாட மூவாயிரத்து ஐநூறு ரூபா வேதனம் முதலில் பேசப்பட்டது. ஒலிப்பதிவுக் கூடத்தில் இப்பாடலைப் பாடி விட்டு வெளியே வந்த போது உணர்ச்சி வசப்பட்ட நிலையில் கண்கள் கலங்க கை கூப்பிய வண்ணம் ''எனக்கு பணம் வேண்டாம் இதை எனது பங்களிப்பாக வைத்துக் கொள்ளுங்கள்'' என்று கூறினார்.

மூன்று பாடல்களைப் பாடிய திருமதி வாணி ஜெயராம் இந்தப்பாடல்களைத் தாம் பாடுவதை ஈழப் போராட்டத்தில் கொண்ட அக்கறையாக கருதுமாறு கூறியதோடு மிகுந்த ஆர்வத்தோடு பாடியும் உதவினார்.

''வீசும் காற்றே தூது செல்லு ..'' பாடலை ஒலிப்பதிவு செய்து விட்டு வீடுசென்ற திருமதி வாணிஜெயராம் இரவு பத்துமணிக்கு கவிஞர் புதுவை இரத்தினதுரைக்கு தொலைபேசியில் பேசினார் ''இந்தப் பாடலைப் பாடிவிட்டு வந்ததும் என் மனதுக்குள் ஏதோ செய்கிறது. ஈழ மண்ணில் மக்கள்படும் வேதனைகளை என்மனமும் அனுபவிக்கிறது.'' என்று கவலையோடு கூறினார். தலைவர் பிரபாகரன் கொல்லப்பட்டு விட்டதாக வந்த வதந்திகளையடுத்து அடிக்கடி இது உண்மையா என இவர் விசாரிப்பாராம். அந்த அளவிற்கு ஆத்மார்த்தமான ஈடுபாடு இவருக்கு இருப்பதை கவிஞர் புதுவை இரத்தினதுரை அடிக்கடி நினைவுபடுத்துவர்.

பாடகர் மலேசியா வாசுதேவன் இலவசமாக பாடல்களைப்பாடியதுமல்லாமல் இன்னுமொரு ஒலிப்பதிவு நாடா தாமே பொறுப்பெடுத்து இலவசமாக செய்து தருவதாகவும் உறுதியளித்துள்ளார்.


இப்பாடல்கள் யாவற்றிற்கும் இனிமையாக இசையமைத்துத் தந்த இசையமைப்பாளர் திரு. தேவேந்திரனைப் பற்றி இங்கு முக்கியமாக குறிப்பிட வேண்டியுள்ளது. 'வேதம் புதிது' 'கனம் கோட்டார் அவர்களே, மண்ணுக்கேத்த பொண்ணு, போன்ற



அடைக்கலம் தந்த வீடுகளே.... பாடலைப் பாடிய தினேஷ், கவிஞர் புதுவை இரத்தினதுரை ஒலிப்பதிவு நிபுணர் ...பங்காரு, போராளி ராவ் ஆகியோர்.

படங்களுக்கு இனிமையாக இசையமைத்தவர் இவர். ஒரு படத்திற்கு இசையமைக்க சுமார் நான்குலட்சம் ரூபா வேதனமாக வாங்கும் இவர் இப்பாடல்களை இலவசமாகவே இசையமைத்துக் கொடுத்துள்ளார்.

அடுத்ததாக குறிப்பிடப்பட வேண்டியவர். ஒலிப்பதிவுத் துறையில் பிரபலமான தொழில்நுட்பவியலாளர் திரு. பங்காரு. இவரிடம் உதவி கேட்டுச் சென்றபோது மிகுந்த மகிழ்ச்சியுடன் வரவேற்றார். ''நான் ஏதாவது ஒரு வகையில் உங்கள் போராட்டத்திற்கு பங்களிப்பு நல்க வேண்டுமென்று காத்திருந்தேன். அதனால், எனது ஒலிப்பதிவுக் கூடத்தில் இப்பாடல்களை இலவசமாகவே பதிவு செய்து தருகின்றேன்.'' என்று கூறியதோடு இரவு பகலென்று பாராது உழைத்தும் உதவினார்.



இசையமைப்பாளர் தேவேந்திரன் பாடகர் டி.எம். சௌந்தரராஜன் ஆகியோருக்கு நடுவே கவிஞர் புதுவை இரத்தினதுரை.

''அச்சமில்லை அச்சமில்லை, படத்திற்கு இசையமைத்த இசையமைப்பாளரான திரு. எம். சி. நரசிம்மன் தாமும் ஏதாவது பங்களிப்புச் செய்ய வேண்டுமென கூறி பாடல்களுக்கு வயலின் வாசித்து உதவினார். ஒரு இசையமைப்பாளர் வயலின் வாசித்துதவியது போற்றத்தக்க ஓர் விடயமாகும்,

இன்னுமொரு விடயத்தையும் குறிப்பிட வேண்டியுள்ளது. இந்தப் பாடல் பதிவு விடயமாக பல கலைஞர்களிடமும் தொடர்பு கொள்ளப்பட்டது. அந்த வகையில் பிரபல கவிஞர் கவியரசு (?) வைரமுத்துவிடம் பாடல் எழுதித்தர முடியுமா என்று கேட்கப்பட்ட போது ''உங்கள் போராட்டங்களை பாடலில் எழுதுவது கடினம்'' என்று கூறி தட்டிக் கழித்து விட்டாராம்

சில நேரம் கவிஞர் வைரமுத்து பாடல் எழுதியிருந்தால் பாடல்கள் இந்த அளவுக்கு அழகாக இருந்திருக்குமோ என்பது சந்தேகமே.


இந்தப் பாடல் பிறந்த கதையை எழுதுவதற்கு எனக்குத் தகவல்களை தந்துதவியவர் கவிஞர் புதுவை இரத்தினதுரையவர்கள். அத்துடன் இப்பாடல்கள் உருவாக உதவி புரிந்த தமிழக கவிஞர்களுக்கு நன்றி கூற நாம் கடமைப்பட்டுள்ளதாகவும் இவர் கூறினார்.

இந்த 'பாடல் நாடா' லண்டனில் நடந்த உலகத்தமிழர் மாநாட்டில் வெளியிட்டு வைக்கப்பட்டது. இவ்விழாவில் நாற்பத்தெட்டு நாடுகளின் பிரதிநிதிகள் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.

இதன் அறிமுக விழாவொன்று 'முரசொலி' பத்திரிகையின் முன்னாள் பிரதம ஆசிரியர் எஸ். திருசெல்வம் அவர்கள் தலைமையில் கனடா ரொரன்டோ நகரில் இடம் பெற்றமை இங்கு குறிப்பிடத்தக்கதாகும். □

**'வஸந்தப்ரியன்'**

---




''இண்டைக்கு எங்கடை விதானையிட்டை போனனான்.'' என்று தொடங்கினான் விக்கி.

''விதானையார் நிண்டவரோ'' எனக் கேட்டான் தாடி மாமா.

''அந்த அநியாயத்தை ஏன்டாப்பா கேக்கிறாய் இதோடை எத்தினை தரம் திரிஞ்சாச்சு. ஆளைத்தான் காணேல்லை.''

''உங்கடை பகுதி எண்டு இல்லை. எல்லா இடமும் உதுதான் நிலைமை.''

''விதானைமார் தங்கடை தங்கடை 'ஒவ் பீசில' நிக்சாட்டியும் பரவாயில்லை விதானைமாருக்கு எடுபிடிவேலை செய்ய நிக்கிற ஆட்களின்டை விளையாட்டுத்தான் பெரிய தில்லு முல்லாய் இருக்கு'.

''ஓமோம் அதெண்டால் உண்மைதான். ஒவ்வொரு விதானையும் தன்ரை வசதிக்காய் ஒவ்வொரு குறிச்சிக்கு ஒவ்வொரு ஆளை உதவிக்கு வைச்சிருக்கினம். விதானையாரைக் காண வேணும் எண்டால் உந்த எடுபிடியளின்ரை வீடுகளுக்குத் தான் போக வேணும்''

''போனால் மாத்திரம் காணுமே. போய் அவைக்குப் பயந்து அவைக்கு அடிபணிஞ்சு குடை, கொடி, ஆலவட்டம் எல்லாம் பிடிக்க வேண்டியிருக்கு''

''உந்த எடுபிடிக்காரர் தாங்கள் விதானை மாரைவிடப் பெரிய ஆக்கள் எண்ட மாதிரி பொல்லே பெரிய கூத்தடிக்கினம்.''

''அவங்களோடை கொழுவிப் போட்டால் விதானையிட்டை இருந்து ஒரு அலுவலும் செய்யேலாது. அதுதான் சனங்களுக்கு பெரிய கரைச்சல். அதாலதான் சனங்கள் பொறுமையாய் எல்லாத்தையும் சமாளிச்சு பொறுத்துக் கொண்டிருக்கு.''

''எப்ப உந்த அநியாயமெல்லாம் நிக்கப் போகுதோ தெரியாது''

''உது கடைசி வரையும் நிக்காது. விதானையார் 'சம்திங்' வாங்கி உழைக்கிறாரோ இல்லையோ உந்த எடுபிடியள் நல்லாய் உழைக்குதுகள். நிவாரணக் காசு குடுத்து முடியிறதுக்கு இடையில அவனவன் கொழுத்த முதலையாய் விடுவன்''

''இப்ப விதானைமாரைக் கூட்டியிருக்கினமாம். சீ. ஓ. மாரும் கே. வி. எஸ். என் எண்டு இருந்த ஆட்களையும் விதானையாக்கி விதானைமாரின்ரை நெருக்கடியை குறைச்சிருக்காம் இனி என்ன மாதிரி நடக்கப் போகுதெண்டு பாப்பம்.''

□ □ □

''மினிபஸ் காரரின்டை மோட்டு ஒட்டத்துக்கு. என்னதான் ரோய்தாலும் சரிதராது போலக்கிடக்கு'' என்று கவலையோடு சவுந்திரம் சொன்னான்.

''அதுதானே அண்டைக்கு மனோகரா தியேட்டரில கூட்டம் எல்லாம் வைச்சு எல்லாம் சொனனதுதானே ''எனறான் விக்கி.

''அதென்னவோ. ஆனால் சில மினிபஸ் காரர் திருந்திறதாய் இல்லைப் போல காலமையில பிள்ளையள் பள்ளிக்கூடம் போற நேரத்தில தன்னும் கொஞ்சம் சவனமாய் இருக்க வேண்டாமே.''

''பள்ளிக் கூடம் போறநேரம் மாத்திரம் எண்டல்ல எந்தநேரமும் கவனமாய்த்தானே இருக்க வேணும்''

''இப்ப றோட்டில சனமும் கூட வாகனங்களுடம்கூட பாரன் போன இரண்டு கிழமையுக்க 48 அச்சிடென்ட் நடந்திருக்குதாம்.''

''மெய்யே''

''வேறை என்ன? காலமை நான் சைக்கிளில ரவுணுக்கு போறன் சி. ரி. பி. பஸ் ஒண்டும். மினிபஸ் ஒண்டும் மாறி மாறி கலைபட்டு பெரிய பயங்கரமாய் போச்சு. மினிபஸ் மறிச்சசனத்தை ஏத்த சி. ரி. பி. பஸ் குறுக்க வந்து நிற்கும். பிறகு மினிபஸ் விலத்திக் கொண்டு ஓடும். ஏதோ தாங்கள் மாத்திரம்தான் றோட்டில போற தெண்டநினைப்பு அந்த மினிபஸ்ஸையும், சிரிபி பஸ்ஸையும் ஓடின ஆட்களுக்கு''

''அப்ப ஏன் தனிய மினிபஸ்சை மாத்திரம் பேசினயடாப்பா சி. ரி. பி. பஸ் காரரும் கொஞ்சம் கவனமாய் இருக்க வேண்டாமே'' எனக் கேட்டான் தாடிமாமா.

□ □ □

''போற போக்கைப் பார்த்தால் எங்கடை சின்னச்சின்ன தீவுகளில சனங்களே இல்லாமல் போயிடும் போல.' எனச் சொன்னான் விக்கி.

''ஏன்''

''இல்லை நயினாதீவு, புங்குடுதீவு போல இருக்கிற தீவுகளில சனங்கள் கஸ்டப்பட்டுத்தான் சீவிக்க வேண்டியிருக்கு. தண்ணிக் கஸ்டம். சாப்பாட்டுக் கஸ்டம், எண்டு கனக்கப்பிரச்சினை இருக்குத்தான். எண்டாலும் சொந்த மண்ணை விட்டிட்டு வெளிக்கிடுகிறது எவ்வளவு கஷ்டமான விசியம்'.

'ஏன் என்ன நடந்தது'

'தீவுப்பக்கங்களில இருந்து எல்லாரும் யாழ்ப்பாணம், அது இது எண்டு வெளிக்கிட்டு வந்திருக்கினம். வெளிநாடு எண்டும் படை எடுக்கினம். கொஞ்சக்காலத்துக்கு முந்தி இருந்த குடும்பங்களின்ரை எண்ணிக்கையை விட இப்ப எவ்வளவோ குறைஞ்சு போச்சாம்''

''அதுதான கவலையான விசயம் மீன் பிடிச்சு கஸ்டப்பட்டு உழைச்சுச் சீவிக்கிற சனங்கள் இப்பவும் அங்கையிருக்குதுகள். மற்றவை எல்லாம் தங்கடை தங்கடை வசதிகளை தேடிக் கொண்டு போயினமாம்'

'உதெல்லாம் எங்கை போய் முடியப்போகுதோ'

□

''இன்னுமொரு கவலையான விசயம் 'தாடி மாமாவைப் பார்த்து சவுந்திரம் சொன்னான்.

''என்னடாப்பா?''

''யாழ்ப்பாணத்தில் இருக்கிற புத்தகக் கடையளைப் பார்த்தனியே''

''ஓம் ஏன்?''

''முந்த நாள் வெளியான குப்பைத்தனமான புத்தகங்கள் எல்லாம் வடிவாய்ச் சனங்களுக்குத் தெரியத்தக்கதாக னவாய் இருக்க, காலம் காலமாய் வாற எங்கடை நாட்டுச் சஞ்சிகைகள் எல்லாம் மூலைக்கு மூலை இருக்கும்''

''எப்பதான் எங்கடை நாட்டுக்கு முன்னுரிமை கொடுக்கிற எண்ணம் எங்கடை புத்தகக் கடைக்காரருக்கு வரப்போகுதோ தெரியாது'' □

**அயக்கிரீவன்**




# கலைஞர் சிதம்பரநாதன்

## சில நினைவுகள்,....

நாக. பத்மநாதன்

பல்லாயிரம் மக்களோடு பழகுகிறோம். காலம் ஓடுகிறது. நினைவு சிதைந்து பின் மறைந்தும் விடுவது உண்மை. ஆயினும் எல்லாமே ஏமாற்றிவிடுவதில்லை. பசுமைக் கனிவோடு இதமும் நலனும் தந்தபடி சில நினைவுகள் நெஞ்சத்தில் நிலைத்து வாழ்கின்றன.

இருபத்தைந்து வருடத்திற்கும் முன்னைய சில நிகழ்வுகள் இவ்விதம் அலைவீசி வருகின்றன. இடம் மன்னார். காலம் 1961 - 62 ஆம் ஆண்டில் ஆரம்பமாகிறது. அப்போது எங்களில் பலர் மன்னார் கச்சேரியிலும் அங்குள்ள ஏனைய அலுவலகங்களிலும் வேலை செய்துகொண்டிருந்தோம். எனினும் ஒருங்கிணைந்த எங்கள் நண்பர்குழாத்தின் உணர்வும் செயலும் அலுவலகக் கடமைகளோடு ஏனைய சமூக சமய கல்வி பண்பாட்டுப் பணிகளிலும் விரவிக்கொண்டிருந்தன. எங்களை ஒன்றிணைத்து ஒரு குடும்பமாக்கியது இப்பணிகளே தான்.

இவை மட்டுமா? ஈழத் தமிழின விடுதலைப் போராட்ட வரலாற்றிலே இனப் போராட்டத்தின் ஆரம்பகட்டமாக மொழிப் போராட்டமே அப்போது உச்சக்கட்டத்தை அடைந்திருந்தது. இவ்வித பணிகள் அனைத்திலும் அழியாத ஓவியமாக இனிய நண்பர் இணுவையூர் சிதம்பரநாதன் அவர்களைக் காண்கிறேன். அவரது முழுப்பெயர் தம்பையா சிதம்பரநாதபிள்ளை. அவர் 1925-8-26இல் பிறந்தவர். யான் ஒரு சில மாதங்களே பின்னையவன். எனினும் அண்ணன் என்றுதான் அழைப்பேன். அவரும் தம்பி அல்லது "எடதம்பி" என்றுதான் என்னைக் கூப்பிடுவார்.

வனப்போடு கூடிய தோற்றம். 'ராஜபார்ட்' என்டார்களே? அது அவர் ஏற்று நடித்த வேளையில் மட்டும் இருந்ததல்ல. உண்மைத் தோற்றத்திலும் அந்த வசீகரம் இருந்ததுண்டு. அத்தோடு நட்புச்குரிய இனிய சுபாவம். உற்சாக மூட்டும் பேச்சு, உதவுவதிலே தனி இன்பம். பக்தி செறிந்த நெஞ்சம். அத்துடன் கலையுணர்வும் நிரம்பப் பெற்றிருக்குமானால் - அதுதான் திரு. சிதம்பரநாதன் அவர்களின் வடிவம். பக்தியால் மட்டுமின்றி தனது இயல்பாலும், இனிய பணியாலும் அவர் உயர்ந்திருந்தார். எங்கு பணியாற்றினும் அங்கு அவரது சூழல் இனிமை பெற்றது.

பனங்காம வன்னிப் பிரதேசத்தை ஆண்ட அடங்கா அடலேறு கயிலைவன்னிய மன்னனாக மேடையில் திரு. சிதம்பரநாதன் அவர்களைக் கண்டபோது அந்த வீர மன்னனை நேரிற்கண்ட உணர்வையே நாம் அனைவரும் பெற்றெழுந்தோம். அந்தப் பாத்திரத்துக்கேற்ற தோற்றமும் நடிப்பும் மிகுந்த உன்னத நிலையில் அமைந்திருந்ததை வியந்து ஈழநாடு ஆசிரியர் கே. பி. ஹரன் அவர்கள் தமது ஐயாறன் பகுதியில் எழுதியிருந்த வரிகள் இவ்வேளை நினைவுக்கு வருகின்றன. சிறந்த சாரீரமும் தாம் பிறந்த இணுவிலூரின் இடவாசனைக்கேற்ற கர்நாடக சங்கீத ஞானமும் துணைநிற்க அந்த மரபைத் தழுவியே அவரது பாடல்கள் அமைந்திருந்தன. சிலர் நல்ல நடிகர்களாக இருப்பார்கள். சிலர் பாடகர்களாக இருப்பார்கள். இரண்டும் இணைந்த உயரிய நடிகராக இவர் விளங்கினார். கனவோடு கூடிய கணீரென்ற குரலும் அமைந்திருந்தது. கயிலைவன்னியனாக வந்த "தணியாத தாகம்" நாடகத்தில் மட்டும்தான் இவர் நடித்தார் என்பதல்ல. அவ்வேளை அரிய நாடகங்கள் பல கவிஞர் கரவைகிழார் அவர்களால் உருவாகிக் கொண்டிருந்தன. அவரது 'சிதைந்தசிலை' நாடகத்தில் திரு. சிதம்பரநாதன் அவர்களை ராஜராஜ சோழனாகக் கண்டிருக்கிறேன். அதுபோல தீந்தமிழ்த் தீயில் சிவனாக அவர் தோற்றமளித்தார். இந்த நாடகங்களிலெல்லாம் கரவைகிழாரின் எழுச்சிமிகு தமிழ்பளிச்சிட்டு நிற்கும். பாடல்களும் பெரும்பாலும் அவருடையதே. சித்திவிநாயகர் கல்லூரியின் ஆசிரியராயிருந்த சைவப்புலவர் சு. செல்லத்துரை அவர்களும் தேடற்கரிய துணையாக இருந்தமை மறத்தற்குரியதல்ல. இவர்கள் அனைவரும் தாமெடுத்த பணிக்கே முதலிடம் கொடுத்தனர். இவ்விதந் தம்மைத் தாம் மறந்து இயங்கியதால் எடுத்தபணிகள் முழுமை பெற்றன. ஒரு குழுவாக இயங்கி நடித்த மன்னார் கீதேபொன்கலன் இளைஞர்கள்தான் தட்சணாமூர்த்தி, மட்டக்களப்பு அழகரத்தினம், இணுவில் இராசரட்ணம் வண்ணை இரத்தினசிங்கம், கூட்டுறவுப்பகுதி திரு. சண்முகம், மன்னார் அவதான நிலைய திரு. நடராஜா காரைநகர் மிருதங்கக் கலைஞர் வைத்தியலிங்கம் சுகாதாரப்பகுதி திரு. கந்தசாமி, திரு. கதிர்காமநாதன் ஆகிய கலைஞர்களையும் இன்னும்பலரையும் நாம் மறக்க முடியாது. எவரும் நிதி நாடி வந்தவர்களல்ல. இவர்கள் பொதுப் பணிகளுக்கு நிதிதேடித் தர முவந்தவர்கள். அங்கு இயங்கிய டாக்டர் பவளத்துரை இதற்கு மேலுமோர் எடுத்துக்காட்டு.

கலையானது பக்தியின் நிழலை நாடும்போது அது தனி உயர்வு பெறுகிறது. திரு. சிதம்பரநாதன் அவர்களது வாழ்வு அத்தகையது அவர் வேலையி போது லீவெடுத்து யாழ்ப்பாணம் வருவதனால் அது பெரும்பாலும் சமய சம்பந்தமானதாகவே இருக்கும். கதாப்பிரசங்கங்களையும் பண்ணிசையையும் இவர் தாம் சென்ற இடமெல்லாம் வளர்த்தது டு. கொழும்பு சரஸ்வதி மண்டபத்தில் இவர் செய்த "பூம்பாவை" வில்லிசை நிகழ்ச்சி தனிச் சிறப்பெய்தியது. இலங்கை வானொலியில் வெளிவந்த "ஸ்ரீவள்ளி" நாடகத்தின் முருக வேடம் ஒரு தனி எடுத்துக்காட்டாக இருந்தது இவர் ான் மட்டும் புகழ் பெறவில்லைனளாமர்.

இந்தக் கல்லூரி இளைஞர் பலர் இவரது வழிகாட்டலின் துணைகொண்டு பரிசு பெற்றனர். பிறரது வெற்றியில் இன்பம் காண்பது இலேசல்ல. அத்தகைய குணநலன்கள் இவருக்கு இயல்பாயிருந்தன.

மீண்டும் மன்னாரின் நினைவுகள் எழுகின்றன அங்குள்ள சித்திவினாயகர் கோவிலும் வளர்ந்துகொண்டிருந்த இந்துக் கல்லூரியும் இதமான சூழலைத் தந்து கொண்டிருந்தன. அங்கு சமய விழிப்பொன்று ஏற்படுவதற்கு மன்னார்



இந்து சமய வளர்ச்சிச் சங்கம் நற்றொண்டு ஆற்றிய வேளையில் அதற்கு உறுதுணையாக இருந்தவர்களில் முக்கியமான ஒருவர் திரு. சிதம்பரநாதன் ஆவர். வர்த்தகப் பெருமக்களிலிருந்து ஊரார் அனைவரும் இதில் ஈடுபாடு கொண்டனர்.

எது இருப்பினும் சுதந்திர உணர்வில்லாதவர் முழுமனிதனாகான் திரு. சிதம்பரநாதன் ஓர் உயர்ந்த முழுமனிதனாகவே வாழ்ந்தார். தொடக்கத்திற் கூறிய ஈழத் தமிழினத்தின் மொழிப் போராட்டம் எழுச்சி பெற்ற அவ்வேளையில் தமிழ் அரசாங்க ஊழியர் சங்கமும் பின்னர் மொழிவழித் தொழிற் சங்க ரீதியாக 1961 62ஆம் ஆண்டில் அரசாங்க எழுதுவினைஞர் சங்கமும் எழுந்தியங்கிய போது அந்த ஆரம்பகட்ட செயற்குழு உறுப்பினர்களில் ஒருவராக திரு. சிதம்பரநாதன் இயங்கினார். அந்த ஆரம்பக் கட்டத்திலிருந்து தொடர்ந்து அவரது ஆதரவு இருந்து கொண்டே வந்தது. காரணம் அவர் ஒரு கலைஞராகவும் தமிழ் அபிமானியாகவும் இருந்ததுதான்.

இலட்சிய மனிதனாக இருப்பவனுக்கு வாழ்வில் சோதனைகள் பல எழுவது இயல்பு எந்தச் சூழலிலும் சிறுமைப்படாமல் மலர்ந்த முகத்துடனும் உற்சாகம் தரும் சொற்களுடனும் திரு. சிதம்பரநாதன் அவர்கள் வாழ்ந்ததை நெருங்கிய நண்பன் என்ற வகையில் யானறிவேன். அதை எண்ணிப் பெருமைப்படுகிறேன். □

---

□□□□

தான் இறக்கப்போவது நிச்சயம. ஆனாலும் தனது தேசம் விடியலைக் காணும் அந்தப் புதிய நாளில் புலரும் சூரியக் கதிர்களில் தானும் குளிக்க வேண்டும் என்ற ஆவல் ததும்பும் இக்கவி ஒரு கியூபா தேசப் போராளியினுடையது.

## ஒரு போராளியின் ஆத்மா

"இது எனது இதயம்
இதை எடுத்துக்கொள்;
இதை உன்கையில்
மூடி வைத்துக்கொள்;
காலை புலரும்போது
உன் கையைத் திறந்து காட்டு
சூரியக் கதிரில் அந்த
இதயம் சூடாகட்டும்!"

□□□□

# பாரதச்சுவடுகள்

பாப்பாணான்

(3)

நாளாந்தம தமிழினத்தை நசுக்கும் திட்டம்
நடை முறையில் ஆகிவர நாங்கள் இன்னும்
கேளாத காதினராய்த் திருப்பிக் கேள்வி
கேட்காத வாயினராய் வாழ்ந்து சும்மா
வாளாது இருந்திட்டால் பின்னை நாளில்
வரலாற்றுக் கிழுக்காகும் அதற்கு நாமும்
ஆளாகக் கூடாது எதிர்ப்போம் என்று
அணியாகத் திரண்டார்கள் அன்று எம்மோர்.

சொல்லாடிச் சொல்லாடிச் சோகமானார்
சோராது மீண்டும் அறை கூவலானார்
மல்லாடும் நிலையில் இவர் இல்லை ஆனால்
மற்றவரைப் புண் செய்யா, மறத்துக்கிடமே
இல்லாத அறப்போரைத் தமிழர் செய்ய
இவர்களுக்கு நற்பாடம் புகட்டவெண்ணி
பொல்லாராய் வன் செயலை ஏவிட்டார்
பொருள், உடல்கள் வீடுகளைத் தீயிலிட்டார்.

ஐம்பத்து ஆறுஜூன் ஐந்து தொட்டு
அடி உதைக்கு இலக்கானோம் நீதி கேட்டு
வம்புக்கு வந்து வலுச் சண்டை செய்து
வதைக்க, இவர் பதைக்க, அவர் நகைத்ததெல்லாம்
நம்பத்தான் முடியாது இருந்ததன்று
நடந்திட்ட கொடுமைகளைப் பார்த்தும் கேட்டும்
வெம்பத்தான் முடிந்தது காண் வேதனையில்
வேறெதுவும் செய்வதற்கு அறியமாட்டார்.

அறப்போரில் அமைதியுடன் தமிழர் கூட்டம்
அணியாகக் காலிமுகத்திடலில்குந்த
விறைப்போடு ஆயிரமாய் விரைந்து வந்து
விலங்குமனம் படைத்திட்ட காடையர்கள்
முறைப்போடு இழிமொழிகள் சொன்ன போதும்
மூத்திரத்தால் அபிஷேகம் செய்த போதும்
புறம் போகாப் போர் செய்தார் பணிந்தாரில்லை
புண்பட்டார் அடியுதையால் எதிர்த்தாரில்லை.

ஆடைகளைக் கிழித்தார்கள் ஆங்கவரை
அடித்தார்கள், உமிழ்ந்தார்கள் அசிங்கமாக
மூடைகளைப் போல் தூக்கிச் சென்றருகே
முழங்குகடல் நீரதிலே வீசினார்கள்
பீடைகளோ பின்வாங்க லின்றிச் செய்தார்
பெருமையிது என்பது போல் எண்ணிச் செய்தார்
காடையர்கள் இக் கொடுமை செய்யச் செய்ய
காவலரும் கைகட்டிப் பார்த்து நின்றார்.

நம்மவரைக் காடையர்கள் வதைத்த போது
நாடாளுமன்றத்து மாடிமீது
நிம்மதியாய்க் கைகட்டி நின்ற பண்டா
நகையுதிரப் பெருமையொடு நவின்றதென்ன
தம்மவர்கள் தமிழரது விருப்பையன்றோ
தருகின்றார் தவறில்லை இதனிலென்றார்
எம்மவரில் ஆளுபவர் கொண்ட அன்பை
எடுத்தியம்ப இச் செயலே போதுமன்றோ.

ஒருமுறை எம் மார்மீது கையை வைத்து
ஒத்திகையைப் பார்த்ததின்பின் துணிவு பெற்றார்
சிறுபான்மை மக்களைத் தம் எண்ணம் போல
சீண்டிடலாம் என்பதிலே நிறைவு கொண்டார்
பெரும்பான்மைச் சிங்களவர் இந்த மண்ணில்
பேசுவது செய்வதே நியாயமென்றார்
இரும்பானதாகிற்று இதய மெல்லாம்
இரக்கமென்றில்லாது இயங்கலுற்றார்.

திருமலையில் ஐம்பத்தி ஏழு மாசி
தினம் நான்கு சுதந்திரத்தின் நினைவுநாளில்
பெருமலைபோல் உயர்ந்த மணிக் கூண்டில் ஏறி
பெற்ற சுதந்திரமெமக்குத் துயரே என்று
கருங்கொடியை நாட்டுதற்கு துணிவு கொண்ட
காளையவன் நடராசன் காடையர்தம்
கருங்குண்டுக் கிரையாகி ஈழமண்ணில்
களப்பலியின் வரலாற்றில் முதல்வனானான்

— தொடரும்

# "கோணர் கிக்"

புலவர் தன்னூசியா ஒரு தலைஞர். அவர் இத்தாலியைப் புரட்சியால் வென்றவர். முசோலினி காலத்துக்கு முற்பட்டவர்.

இத்தாலியை அவர் ஒரேயொரு நாள் மாத்திரம் ஆட்சி செய்ய முடிந்தது.

வரதராஜப் பெருமாள் ஆட்சி புலவர் ஆட்சியை விடக் கேவலமானது.

அவர் ஒருநாள் தனது பலத்தில் ஆட்சி செய்தார்.

ஆனால் வரதராசப்பெருமாளோ கோலும் இல்லைக் குடியுமில்லை. ஆனால் நான் ராஜா என ஆட்சி செய்ய நினைத்தார். ஆனால் முடியவில்லை. ஒருநாள் கூட இந்தியாவின் துணையின்றி அவரால் ஆளமுடியாது!

எப்படித்தான் இருந்தாலும் வரதராசப் பெருமாள்தான் முதல் வடக்கு, கிழக்கு முதலமைச்சர் என வரலாற்றில் பொறிக்கப் படும் என ஒரு நண்பர் சொன்னார். அந்த நண்பருக்கு நான் சொன்னேன்: உண்மை தான்! போர்த்துக்கேயர் காலத்தில் ஒரு கைப்பொம்மை அரசாண்டது. அது போர்த்துக்கேயருக்கு அடங்கி பெயரளவில் ஆண்டது.

20 ஆம் நூற்றாண்டில் இந்திய நாட்டின் கைப்பொம்மை ஒன்று தமிழர்களை அடக்கியாள முயற்சித்தது. அதுவே ஒரிஸ்ஸாவுக்குப் போய்க் கொண்டிருக்கும் வ. ரா. பெ. ஈ. பி. ஆர். எல். எப் தனது நாடகங்களில் அடிக்கடி பேசும் வசனம்!

" மக்சள் சக்தி மாபெரும் சக்தி சீக்கிரம் வரவேண்டும் "

மக்கள் சக்தி சீக்கிரமே கிடைத்து விட்டது.

— அங்கதன்

## துப்பாக்கிகளை...

(4ம் பக்கத் தொடர்ச்சி)

இறந்தான். ஆனால் அவன் புகழ் என்றும் இறவாது. சத்தியம்! சத்தியம்! இந்த ஒன்றுக்காகவே தம் சுகவாழ்க்கையை அர்ப்பணம் செய்த தீரர் ஸோலா!"

ஸோலாவின் வாழ்க்கை - அதிகாரத்திமிர் படைத்தவர்கட்கு -கேவலம். கௌரவ மாஜிஸ்ரேட் பதவி கிடைத்தால் வீதியில் போகின்ற வண்டிக்காரனை அதட்டுகின்ற சுபாவம் படைத்தவர்கட்குப் புத்தி கற்பிக்கும்.

பணம், பதவி இரண்டிற்காகத் தேசத்தைக் காட்டிக் கொடுக்கும் துரோகிகள் மனதை மாற்றும்.

தாங்களே அறிஞர்களென்று தற்பெருமை கொண்டிருப்பவர்கள் அறியாமையைப் புலப்படுத்தும்.

ஸோலாவின் தியாகம் இளைஞர்கள் உள்ளத்தில் புத்துணர்ச்சியை உண்டாக்கும்.

ஸோலா சிறந்த எழுத்தாளர்; அறிஞர், ஆசிரியர்; தேசபக்தர்; சத்தியத்திற்காக வாழ்ந்த உத்தமர்.

அவரைப் போன்ற பலர் நம்நாட்டிலும் வாழ்ந்திருக்கின்றனர். அவர்களைப்பற்றி நாம் அதிகம் சிந்திப்பதில்லை; நம் இளைய தலைமுறைக்கு அவர்களை நாம் சரியாக அறிமுகப்படுத்தவும் இல்லை.

நம்முடைய நாட்டின் விடுதலைக்காக எல்லாவற்றையும் அர்ப்பணம் செய்த வீரர்களின் வாழ்க்கைச் சரித்திரம் என்றைய தினம் நூல்களாக வரப்போகின்றன?

''அவை 'எமிலி ஸோலா' — 'மகாத்மா காந்தி'யின் வாழ்க்கை வரலாற்றைத் திரைப் படங்களாக எடுத்து மக்களுக்குக் காட்டியது போல, மற்ற சுதந்திர வீரர்களின் வாழ்க்கை வரலாறுகள் திரைப்படமாக எடுக்கப்பட்டு எப்போது மக்களுக்குக் காண்பிக்கப்படப்போகின்றன?

தேசீய ஒருமைப்பாட்டுக்கும் நாட்டின் அமைதிக்கும் இளைய தலைமுறையினர் நாம் பெற்ற சுதந்திரத்தை எப்படிப் போற்றிக் காப்பாற்ற வேண்டும் என்பதற்கும் இவை மிகவும் அவசியம்.

நன்றி: ஓம்சக்தி செப்-86

## மனஓலயம்

### பாதை தெரியாத □□□ □□□□ பயணிகள்

அவன் அந்த மரத்தின் கீழ், நிழல் படர்ந்துள்ள பகுதியில் அமர்ந்திருந்தான்.

நான் வந்ததை அவன் தூரத்திலேயே கண்டிருக்க வேண்டும். என்னை காணாதவன் போல எங்கோ தொலைத்தூரத்தில் பறந்து கொண்டிருக்கும் பறவைக் கூட்டடத்தை வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தான்.

'என்னடா!' என்று அவன் தோளைத் தொட்டேன்.

என்னைப் பார்த்து விரக்திப் புன்னகை பூத்துவிட்டு மீண்டும் எங்கோ வெறித்தான்.

'சுகமில்லையா!' என்று கனிவுடன் கேட்டேன்.

'உடலா ...? உள்ளமா...? என்று என்னைப் பார்த்து மிக... மிக... சர்வசாதாரணமாகக் சேட்டான்.

இப்படியெல்லாம் அவன் என்னோடு இதுவரை பேசியதில்லை. மனம் குழம்பிய நிலையில் தான் மரத்திற்கு கீழே அவன் அமர்ந்திருக்கிறான் என்பதை அவன் பதிலிலிருந்து புரிந்து கொண்டேன்.

வழமையாக அவன் முகத்தில் மின்னும் மலர்ச்சி இன்றில்லை. கண்கள் சிவந்திருந்தன. இரவு அவன அழுதிருக்கலாம். ஏன? இப்போதும் அவன் அழுது கொண்டிருக்கலாம். அதன் காரணம் அறிய ஆவலானேன்.

கேட்டேன்.

'உனக்கு இலக்கியம் இருச்கிறது. இறக்கிவைப்பாய் ... எனக்கு எதுவுமே இல்லை. நான் என்னோடுதான் இருக்கிறேன். என் சுமைகளை நான் என்னில் தான் இறக்கிவைக்க வேண்டும்'! என்றான்.

'எதுவென்றாலும் சொல்லித்தொலை...' என்றேன். சிரித்தான். அவன் கண்கள், கண்ணீரை நிரப்பியிருந்தன.

'எனக்கு வாழ்க்கை பிடிக்கவில்லை. இந்த உலகத்தின் அத்தனை பிணைப்புகளிலிருந்தும்நான்என்னை விடுவித்துக்கொண்டு ஓட வேண்டும் போல இருக்கிறதடா '

திடீரென்று எப்படி இவன் ஞானியானான்! சிந்தித்தேன். அவன் விரக்தியின் காரணம் விளங்கவில்லை. மறுபடியும் மறுபடியும் ... கேட்டேன். சொன்னான்.

□ □ □

ஆம்: இதோ இருக்கிறானே என் நண்பன், இவனைப் போல் இங்கே எத்தனை இளைஞர்கள்... யுவதிகள்...

தேசம் தெரிகிறது; அதைச் சென்றடைய வேண்டிய பாதை தெரியவில்லை.

தகுதி இருக்கிறது! திறமை இருக்கிறது, அவற்றைப் பயன் படுத்த வேண்டிய வழி தெரியவில்லை.

எமது நாட்டில் வேலை இல்லாப் பிரச்சினை ஒரு புற்றுநோயாக வளர்ந்து கொண்டிருக்கிறது!

சமுதாயப் பொறுப்புகளை தங்கள் தங்கள் தோள்களில் சுமக்க வேண்டிய நம் இளைஞர்கள் சாபமிடப்பட்டவர்கள் போல் வாழ்க்கையிலிருந்து அந்நியப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

சொந்தக் குடும்பத்திலிருந்து அவர்கள் தூக்கி எறியப் படுகிறார்சள்.

கரைந்து போகும் ஒவ்வொரு நிமிடங்களையும் அவர்கள் வேதனையுடன் நகர்த்திக் கொண்டிருக்கிறார்கள்.

நேற்று வரை வீட்டில் விளையாட்டுப் பிள்ளையாகத் திரிந்தவன் குடும்பத்தால் திட்டப்படுகிறான். உறவினர்களினால் தீண்டப்படுகிறான்.

'உழைத்துப் போட்டுவிட்டுச் சாப்பிடு' என்று ஒவ்வொரு நாளும் அவன் ஓதப்படுகிறான்.

இதுவரை ஆண்டவர்கள், தத்தம் வீடுகளைத்தான் நேசித்தார்கள். நாட்டைப் பற்றி யோசிக்கவில்லை இதன் விளைவால் இந்த பல நோய்கள் ஏற்பட்டன ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றன.

அவற்றில் மிக மோசமான கொடிய நோய் வேலை இல்லாப் பிரச்சினை!

இப்பிரச்சினைக்குள் சிக்கிய சிலர் 'இறப்பதற்காகவே, நாம் பிறந்துள்ளோம்?' என்று விரக்தியாய் முடிவெடுத்துள்ளனர்.

பாடசாலை போனது குழந்தைப் பருவத்தைக் சழிக்க என்றும் பல்கலைக்கழகம் போனது இளமைப் பருவத்தை கழிக்க என்றும் ஆகிவிட்டது.

வறுமை இங்கே வானளாவ உயர்ந்துள்ளது.

பல இளைஞர்களும், யுவதிகளும் தத்தம் வீடுகளிலேயே அகதி முகாம்கள் அமைத்திருப்பதை அறியக் கூடியதாய் உள்ளது.

அணியும் ஆடைகளுக்குக் கூட அடுத்தவனை எதிர்பார்க்க வேண்டியுள்ளது.

அடுத்த ஆண்டுக்குள் வேலையில்லாப் பிரச்சினை தீர்க்கப்பட்டுவிடும் என்ற சேதி கேட்ட நண்பன் ஒருவன் சொன்னான. 'அடுத்த ஆண்டு வரை எந்த அந்நியன் கடன் தரப் போகிறான்...?'

ஏ! சமுதாயமே!

உழைக்கத் தெரிந்தவன் எப்படியும் உழைப்பான்; பிழைக்கத் தெரிந்தவன் எப்படியும் பிழைப்பான் என்று பிற்போக்காகப் பேசாதே!

விரும்பிய வேலையைச் செய்வதற்கு இளைய உலகங்ளுக்கு அனுமதி வழங்கு!

உடலை அறுத்து சத்திர சிகிச்சை செய்யக் கூடியவனை சதிரறுக்க வைக்காதே!

மக்களின் கண்ணீர் துடைக்க நீளும் கரத்திடம் கத்தியை வழங்காதே!

நம் ஈழத்தில் இக்கொடுமை கொஞ்சம்... கொஞ்சமாக குறைந்து வருகிறது என்று மனசு சொல்லுகிறது.

இதோ!

எமது காயங்களுக்கு கட்டுப் போட புதிய கைகள் வருகின்றன.

நம் பூமியின் தேகத்தில் புதிய வெளிச்சம் பரவுகிறது.

எங்கோ... மிக... மிக... சமீபத்தில் வெற்றி நாதம் கேட்கிறது.

புதிய ஆட்சி புலரும்.

இது மெய்!

இனிய—

இளைஞர்களே... யுவதிகளே ..

உங்கள் மனங்களில் கவிந்துள்ள கறுப்பு எண்ணங்களை கலைத்து விடுங்கள்

நாம் — நம் தேசத்தில் ராஜநடை போடத் தயாராகுவோம்! இன்னும்...

**வவுனியா — திலீபன்**

□ ஒழுக்கத்தைப் பற்றி எனக்குத் தெரிந்ததெல்லாம் இதுதான. எந்தக் காரியத்தை நீங்கள் செய்கிறீர்களோ அதற்கு அப்புறம் நீங்கள் நிம்மதியடைந்தால் அது ஒழுக்கம். எதைச் செய்த பிறகு மிகமோசமாக உணர்கிறீர்களோ அது ஒழுக்கக்கேடு.

- எர்னெஸ்ற் ஹெமிங்வே

□ வறுமையைக் கடுமையாகஅனுசரிக்கவேண்டும். நாம் ஏழையாக வாழ்ந்தால்தான் ஏழையின்மீது அன்பு செலுத்தவும் ஏழையைப் பற்றி தெரிந்து கொள்ளவும் முடியும்.

- அன்னை தெரேசா

### வைரவரிகள்

□ சுதந்திரத்தை, சுதந்திரமாக ஒவ்வொருவரும் அனுபவிப்பதற்கு நடத்துவதே விடுதலைப் போர்.

- ஜாக்சன்

□ கடமையில் உறுதியுள்ள மனிதனை மோகம் ஆட்கொண்டாலும் அனைவரும் அறிய சடமையினின்று வழுவ அவன் விரும்புவது இல்லை; அதற்குரிய காரணத்தை உயரிய கருத்தென்ற ஆடையினால் போர்த்து மறைக்கிறான்.

- பகவத்கீதை

### அதிசய செய்திகள்

உலக அதிசயங்கள், விசித்திரங்கள் என்றுநிறையக் கேள்விப்பட்டிருப்பீர்கள். இங்கும் சில விசித்திரங்களை உங்களுக்குத்தருகின்றேன்.

□ **ஒரு கண் இராணுவம்**

ஒவ்வொரு நாட்டையும் காப்பாற்றுவதற்கு தம் உயிரையே அர்ப்பணிப்பவர்கள் இராணுவத்தினர். 1840 இல் எகிப்தில் முகமதுஅலி என்பவன் மன்னனாகஇருந்தான். இவன் ஒரு கொடியவன். தன் இராணுவப் படையில் இருப்பவர்களுக்குஒருகண்ணை அழித்தவன். அவர்களால் ஒற்றைக்கண்ணால் தான் பார்க்க முடியும். ஏன் இப்படிச் செய்தான்தெரியுமா? அவர்கள் தப்பி ஓடினால் அடையாளம் காணத்தானாம். ஐம்பதுவருடங்களா அவனது ஆட்சிக்காலத்தில் இராணுவத்தினர் ஒருகண்கொண்டவர்களாகவே இருந்தனராம்,

□ **நரமாமிச மீன்கள்**

தென் அமெரிக்காவில் 'அமேசன்' என்ற ஆறு உண்டு. உலகின் இரண்டர்வது நீண்ட நதி இதுவாகும். இந்த நதியில் நீங்கள் ஒரு தடவைஇறங்கிவிடுங்கள். உங்கள் எலும்புக்கூடு அடுத்தகணம் எங்காவது ஒதுங்கும். ஏன் தெரியுமா? அதில் உள்ள மீன்கள் தான். பிரான்கா என்ற வகை மீன்களுக்கு விலங்கு, மனிதரின் மாமிசம் என்றால் போதும். இந்த பிரான்காக்களே அமேசனிலும் உள்ளன. இதனால் அமேசன் நதியில் இறங்கினால் அதோ கதி தான்.

- தி. தவபாலன்

## சிறுகதை

# சுமை

*தம்பரதருச் செந்திநாதன்*

இள நீலவானம் வேதனை இல்லாதவர்களின் முகம்போல இயல்பாக இருந்தது. வெண் மேகக் கூட்டங்கள் எந்த விதமான ''செக்கிங்''கும் இல்லாமல் அசைந்தன. பறவைக் கூட்டம் ஒன்று சீராக வட்டம் போட்டு இனிய குரலில் கீதம் இசைத்தது.

தலையில் இருந்த சுமையை சரித்துக் கொண்டு வானத்தைப் பார்த்த கந்தசாமி சிறுபொழுது ஆனந்தப்பட்டான். அடையாள அட்டை காட்டி, பயந்து நடுங்கி, தேவையான போது அவமானப்பட்டு அல்லல்பட வேண்டிய எந்தச் சிக்கலும் இந்தப் பறவைகளுக்கோ, வெண் மேகக் கூட்டங்களுக்கோ இருக்கவில்லை. மனிதராகப் பிறந்துவிட்ட, அதுவும் இந்த மண்ணில் வாழும் எங்களுக்கு?

கிழிந்த சேலையும் பரட்டைத் தலையுமாக ஒரு பெண் புழுதியில் தோய்ந்த பிள்ளையுடன் நடந்துபோனாள். விழி யோரங்களில் கண்ணீர் வழிந்திருந்தது.

சவப்பெட்டி கட்டிக் கொண்டு பழைய மொடல் கார் ஒன்று இரைந்து கொண்டு போனது. யாரோ புண்ணியவாளன் போலும். பெட்டியில்வைத்து எரிக்கக்கூடிய முறையிலாவது செத்திருக்கிறான் என கந்தசாமி நினைத்தான்.

நீண்டிருந்த அந்த தெரு மணலாய் தெரிந்தது. ஒருகாலத்தில் தார் போட்ட தெருவாக இருந்திருக்க வேண்டும். ''தாரும்'' ''கல்லும்'' காணாமல் போய் எவ்வளவு காலமாகி விட்டது.

தெருவின் இருபக்கமும் வயல்கள் கருகிப்போய் இருந்தன. கருகியவயல்களுக்கு அப்பால் அந்த முள்ளுக்கம்பி வேலி தெரிந்தது. அப்பாலே வேறு நாட்டின் எல்லை அல்ல. வேற்று நாட்டவர்களின் எல்லை. கந்தசாமி கூர்ந்து அந்த முள்ளுக்கம்பி வேலியையே தன் பார்வையினால் துலாவினான்.

மண்மூட்டை அரண்களும் சீமெந்துக்கல்லுக் கோபுரங்களுடன் அவர்கள் அமைதி காத்துக் கொண்டிருந்தார்கள்.

□

சட்டென்று கந்தசாமிக்கு அந்தப் பழைய ஞாபகம் வந்தது. 1987 அக்டோபர் முதற்கிழமையாக இருக்க வேண்டும்.

பொழுது புலராத அந்த அதிகாலைப்பொழுதில் தரை அதிர்ந்தது. பிரதான வீதி வழியாக அந்தப் பெரிய இராட்சத இயந்திரங்கள் நகர்ந்தன. கறுத்த சீலையை தலையில் கட்டிய சமாதான தூதுவர்கள் அதில் புன்னகைத்தபடி போனார்கள். அவர்களின் சிரிப்பின் அர்த்தத்தினை அப்போது புரிந்துகொள்ள முடியவில்லை. பின்னர்தான் புரிந்துகொள்ள முடிந்தது.

அதிர்ச்சியுடன் வந்த மனைவிபாக்கியம் அவன் தோளைத் தொட்டு-

''என்னப்பா இதெல்லாம்'' என்று கேட்டாள்.

பக்கத்தில் நின்ற பதினைந்து வயது மகன் சங்கரன் பெரிதாகச் சிரித்தான்.

''அம்மாவுக்கு ஒண்டும் தெரியாது'' என்று சொன்னபடி தாயைப் பார்த்தான்.

''என்னடா'' என்றாள் பாக்கியம்.

''அமைதி காக்க வந்திருக்கினம் அல்லே''

''ஓமோம்'' - என்றாள் பாக்கியம்.

''அவையின்ரை டாங்கியள் தான் இது.'' என்றான் சங்கரன்.

பாக்கியத்திற்கு அவன் சொன்னவைகள் புரிந்ததுபோலவும் இருந்தது. புரியாதது போலவும் இருந்தது. அது காரணமாக அகோரப்பசியெடுத்து பாய்ந்தபடி செல்லும் பெரும் பூதங்கள் போல அகன்ற செயின்களால் கடினமான தார் றோட்டில் தடம்பதித்து செல்லும்அந்த பிரமாண்டமான உருவங்களைப் பார்த்து திகைத்தபடி நின்றாள்.

கந்தசாமி எதுவும் பேசாமல் அதுகளையே பார்த்தபடி நின்றான். அவனுக்கு எல்லாமே புதினமாகத் தெரிந்தன.

''அமைதி காப்பதற்கு இந்த பிரமாண்டமான யுத்த டாங்கிகள் என்ன விதத்தில் உதவப்போகிறன'' என்ற வினா அவனுள் எழுந்தது.

ஒன்றன்பின் ஒன்றாக பதினைந்து போயின. போய் முடிந்த பின்னர் சங்கரன் காரணமில்லாமல் சிரித்தான். ''ஏன்டா சிரிக்கிறாய்-'' -என்று கந்தசாமி கேட்டான்.

'ஒண்டுமில்லையப்பா' என்று சொல்லியும் சிரித்தான.

கந்தசாமி சட்டென்று அதிர்ந்து போனான். பதில் ஏதும் சொல்லாமல் மௌனித்தான். வேடிக்கையாகச் சிரித்தபடி நிற்கும் மகனையும், பயந்துபோய் இருக்கும் மனைவியையும் மாறி மாறிப் பார்த்தான்.

நெஞ்சத்தில் இனம் தெரியாத தவிப்பு ஒன்று உருவானது. ஏனவோ ஒன்று நடக்கப் போவதைப் போன்ற உணர்வு கிளர்ந்தெழுந்தது.

வேலிக் கரையோரமாக கறையான்பொறுக்கிக்கொண்டிருந்த கோழிகள் சிதறியோடின. நாக்கைத் தொங்கப் போட்டுக் கொண்டு உருண்டு திரண்ட நாய் ஒன்று பாய்ந்தபடி வந்தது. நீண்டிருந்த கடைவாய்ப் பற்கள் பயங்கரமாகத் தெரிந்தன.

''அடிக் அடிக்'' என்று கல் எடுத்து நாயைக் கலைத்தும் பிரயோசனப் படவில்லை.

எந்தவிதமான பயமும் பதட்டமும் இல்லாமல் நாய் கோழிகளில்ஒன்றை பிடித்துக் கொண்டு போனது.



''அம்மாளே'' - என்றபடி கண்ணீர்விட்டு அழத் தொடங்கினாள் பாக்கியம்.

நாயைக் கலைத்தபடி சங்கரன் ஓடினான். ஆனால் பிரயோசனப் படவில்லை. சந்தசாமி பிரம்மை பிடித்தவன் போல சற்றுநேரம் இருந்தான். பிறகு,

''அழாதேயப்பா- என்ன செய்யிறது'' என்று சொன்னாலும் மனம் இதில் எல்லாம் ஒட்டாமல் சற்று முன்னர் போன டாங்கிகளைப் பற்றியே திரும்பத்திரும்ப நினைத்துக் கொண்டு இருந்தது.

□

இப்போது தலைக்கு மேல் வட்டம் போடும் பறவைக் கூட்டத்தைப் பார்க்க மனைவி பாக்கியத்தினதும் மகன் சங்கரனதும் நினைப்பு வந்தது. கண்களின் வழியாக கண்ணீர் வெளிப்பட்டது. அதன் வெம்மை கன்னங்களை பொசுக்கியது.

அன்றைக்கு வீட்டில் இருந்த சந்தசாமி மனைவி, ஒரே மகன் சங்கரன் மூவரையும் அவர்கள் தெருவுக்கு அழைத்து வந்தார்கள்.

ஆக்கிரமிப்பு யுத்தம் தொடங்கி நாலைந்து நாட்கள் தான் ஆகியிருந்தது. காணி பிடிக்கும் பக்கத்து வளவுக்காரன் வேலிக் கதியால்களைத் தான் வெட்டுவான். பக்கத்து நாட்டுக்காரன் என்ன செய்வான் என்பது அன்றைக்குத்தான் கந்தசாமிக்கு நேரில் புரிந்தது.

கொஞ்ச நாளைக்கு முன்னர் வெள்ளைக் கொடி பிடித்து சிரித்துச் சிரித்து வந்தவர்களா இவர்கள் என்று கந்தசாமி நினைத்தான்.

உண்மைசொரூபத்தை அவர்களால் மறைக்க முடியவில்லை. எனவே முகமூடி போட்டிருந்தார்கள். இப்போது அதனை கழற்றி வைத்துவிட்டு சுயரூபத்தில் வந்திருக்கிறார்கள்.

எங்கும் மரண ஓலமும் அதனை விழுங்கும் ஆக்கிரமிப்பாளரின் துப்பாக்கி, ஷெல் சத்தங்களும் கதிகலங்கிக் கொண்டிருந்த வேளையில் வீட்டில் கந்தசாமியும் மனைவியும் மகனும் நடுங்கிக் கொண்டிருந்தார்கள்.

காலாகாலமாக சொந்த மண்ணில அடிமையாக வாழ்ந்து கொண்டு இருந்த அவர்களில் பல பேர் முன்பு உரிமை கேட்டபடியால் தாக்கப்பட்டார்கள்.

இப்போது அடிப்பவன் தான் மாறிவிட்டான். உரிமை என்பது எட்டாக் கனியாகிவிட்டது.

கந்தசாமியையும் ஏனையவர்களையும் வீட்டைவிட்டுவிட்டு தெருவுக்கு அழைத்து வந்தபோது அவர்கள் என்ன செய்யப் போகின்றார்கள் என்பது கந்சாமிக்கு ஓரளவு விளங்கியது.

ஆனால் காரணம் எதுவும் இல்லாமலே அவர்கள் மீது குண்டுகள் பாய்ந்தன. கணப்பொழுதில் எல்லாமே நடந்து விட்டன.

மீண்டும் கண்விழித்த போது கந்தசாமியின் தோளில் கட்டுப்போட்டப்பட்டு இருந்தது. சாந்தமே உருவான இளைஞன் ஒருவன் பக்கத்தில் இருந்தான்.

கந்தசாமிக்கு யாரும் எதுவுமே கூறாமல் நடந்தவைகளை உணர்ந்து கொள்ள முடிந்தது. கண்களில் வழிந்த கண்ணீரை அந்த இளைஞன் துணியினால் ஒற்றி எடுத்தான்.

காயங்கள்ஆறி ஓரளவு சுயநிலைக்குத் திரும்பிய போது, இளைஞனும் அவனது நண்பர்களும் விடை கொடுத்தார்கள்.

ஆனால் சந்தசாமி அதற்குப் பதில் கூறாமல் கண்களை மூடினான்.

□

சட்டென்று சந்தசாமி சுயநினைவுக்குவந்தான். தன்னை எதிர்பார்த்து காத்திருக்கும் இளைஞர்களை நோக்கி விரைவாக நடக்கத் தொடங்கினான்.

தலையில் இருந்த சுமை பெரிதாக அழுத்தியது. ஆனால் அதைவிடப் பெரிய சுமை இந்த மண்ணில் இருப்பதை அப்போது கந்தசாமி நினைத்தான்.

□

**வாசகர்கள் எழுத்தாளர்கள் கவனிக்க:**

வாசகர்களே...
ஞாயிறு மலர் பற்றிய உங்கள் ஆலோசனைகள், கருத்துக்கள், விமர்சனங்கள் வரவேற்கப் படுகின்றன.
எழுத்தாளர்களே!
உங்களின் ஆற்றல்மிகு ஆக்கங்களை நாங்கள் எதிர்பார்க்கிறோம்.
நம் சமுதாய ஏற்றத்தை முன்னெடுக்கும் ஏவுகணைகளாக உங்கள் படைப்புக்கள் அமையட்டும்.
பிரசுரிக்கப்படும் ஆக்கங்களுக்கு உரிய சன்மானம் வழங்கப்படும்.

# இலக்கியத்தடம்

கலை என்பதன் முதல் இலக்கணம் அது மனிதனால் படைக்கப் படுவதாகும். அதாவது கலைஞன் தான் அனுப வித்தவற்றை ஏதேனும் ஒரு சாதனம் மூலம் படைக்கின்றான். அதுவே கலை. மனித சிந்தனையின் பரிணா மமே கலை.

கூத்து, நடனம், நாட கம், இசை, சிற்பம் என வும் சிறுகதை, நாவல், கட்டுரை, கவிதை என வும் கலையானது பரிண மிக்கின்றது. நமது பிர தேசத்தில் கலையின் நிலை என்ன?

இசை, நடனம், போன் றன பாடசாலைகளிலும் பல்கலைக் கழகங் களி லும் போதிக்கப்படுவதா லும், நாதஸ்வரம், மேளம், சிற்பம், ஓவி யம்போன்றவைதொழில் ரீதியாக உள்ளதாலும் ஓரளவு நம் மத்தியில் வளர்ச்சி பெற்றுள்ளன. அவை கூட தொழில் ரீதியாகவே.

ஏனைய கலைகளின் வளர்ச்சி பூரணமாகவே இல்லை. எமது பாரம் பரிய கலைகள் பல கிரா மப் புறங்களிலே விரவிக் கிடக்கின்றன. பொரு ளாதாரக் காரணங்க ளால் நலிவு பெற்றுள்ள அந்த மக்களால் தமது ஜீவனோபாயத்தைக் கொண்டு நடத்தவே சிரமமாக இருக்கும் போது எப்படி கலை களை வளர்ப்பது?

எனவே கிராமப்புறங் களில் தளர்ச்சி அடைந் துள்ள பாரம்பரிய கலை களை வளர்க்க நாம் முனைய வேண்டும். நவீன கலைகளாக வள ர்ச்சி பெற்றுள்ள சிறு கதை, நாடகம், நாவல், கவிதைபோன்றன அவற் றின் தரம் பேணுதல் என்னும் போர்வையில் ஒரு குறிப்பிட்ட வட்டத் திற்குள் அதாவது குண் டுச் சட்டிக்குள் குதிரை ஓடுகின்றன.

புத்திஜீவிகளுக்கென்று புத்தி ஜீவிகளால் இத் தகைய நவீன கலைகள் பயன்படுத்தப் படுகின்ற னவா? என்று சிந்திக்க வேண்டியுள்ளது. பொது வாகவே மனிதர்களால் ஆக்கப்படும் கலைகள் வெறும் பொழுது போக் குக்காகவோ, அனுபவ உணர்வுகளை வெளிப் படுத்துவதற்காகவோ மட்டும் படைக்கப்படுவ தில்லை. இத்தகைய கலைகளுக்கு சமூக கட மைகள் உண்டு.

அரசியல், பொருளா தாரம் என்று எந்தத் துறையிலும் பூரணமாக சுதந்திரம் பெறாதநிலை யில் வாழ்கிறோம். அவ்வாறு அடிமை நிலையில் வாழ்கின் றோம் என்பதை உண ராமலே நாம் இருக்கின் றோம்.

எனவே எமதுஉண்மை நிலையினை நாம் புரிந்து கொள்ளவும், எம்மைப் பீடித்துள்ள அடிமைத் தளைகளை அறுத்தெறி ந்து நாம் விடுதலை பெறவும் எமது கலை களை நாம் பயன்படுத்த வேண்டும். மொத்தத் தில் எமது பாரம்பரிய கலைகளை புதிய உத் வேகத்துடன் வளர்ப்பது எமக்கு அத்தியாவசிய மாகிறது.

☐

☐ **மஹாகவி பாரதியார்:-**

எத்தனையோ இலக் கிய வாதிகள், கவஞர் கள் தோன்றி தமிழ்ப் பணி புரிந்துள்ளனர்.

என்றாலும் பாரதி யார் போல் நெஞ்சத் தினை தொட்டவாகள் யாருமில்லை. சொல்ல வேண்டிய கருத்தினை சொல்ல வேண்டிய முறையில் சொல்லி யாரை அவை போய்ச் சேர வேண்டுமோ அவர் களிடம் போய்ச்சேர வைத்தவர்.

உயர்ந்த இலக்கிய இர சனைக்காரர்களையா, அல்லது சாமானியர் களையா அவர் திருப் திப்படுத்தினார். வைத் தால் குடும்பி இல்லை யேல் மொட்டை என் னும் நிலையில் அவர் இருக்கவில்லை.

சாமானியர்களை திரு ப்திப்படுத்த புஷ்பாதங்க துரைகளை, ராஜேந்திர குமார்களை குரும்பூர் குப்புசாமிகளை ஒத்த தாக அவர் எழுத வில்லை.

அதனால் தான் பாரதி யார் பெயர் இன்னும் இமயமலையாகஉயர்ந்து நிற்கின்றது. அவர் பாடல்களும் பெறுமதி மிக்கனவாக உள்ளன.

## "அழலாடிக்குட்டன்"

இத்தகைய
பாரதியாரே -
''யாமறிநதபுலவரிலே
கம்பனைப் போல்
வள்ளுவர் போல்
இளங்கோவைப்
போல்-
பூமிதனில்
யாங்கணுமே
பிறந்ததில்லை.
உண்மை வெறும்
புகழ்ச்சியில்லை...''

என்று பாடுகிறார்.

'யாமறிந்த புலவரிலே
கம்பனைப் போல்
வள்ளுவர் போல்
பாரதிபோல்'

என்று அவர் பாட வில்லை. ஆனால் இங் குள்ள சிலரோ சிறந்தவர் களாகபட்டியல் போடும் போது இன்ன இன்னார் சிறந்தவர்கள் என்று குறிப்பிடுவதுடன் தங் கள் பெயரையும் பக்கத் தில் போட்டு தன்னையே தான் சிறந்தவராக காட் டிக் கொள்ளுகின்ற னர் (!) என்னவேடிக்கை?

☐

☐ **இரவல் கட்டுரை கள்:**

எமது பத்திரிகைகள் பல தமிழ் நாட்டில் இருந்து வெளிவரும் பத் திரிகைகளில் இருந்து கட்டுரைகளையும் ஏனைய விடையங்க ளையும் பிரசுரிக்கின்றன. சில வேளைகளில் எழுதி யவரின் பெயரோ வேறு எந்த விபரமோ இருக் காது.

சில வேளைகளில் எழுதியவரின் பெயர் குறிப்பிடப் பட்டு இருந் தாலும் எந்தப் பத்திரி கையில் இருந்து எடுத் துப் பிரசுரிக்கப்பட்டு உள்ளது என்பது கூட இருக்க மாட்டாது.

தங்களது பத்திரிகைக் காக பிரத்தியேகமாக எழுதப்பட்ட கட்டுரை என்ற மாயத் தோற் றத்தினை இத்தகைய பத்திரிகைகள் உருவாக் குகின்றன. ஏன் இந்த நிலை?

(இக் கருத்தினை எமக் குச் சுட்டிக் காட்டிய நாயன்மார் வீதி நல்லூ ரைச் சேர்ந்த தி. தவபா லனுக்கு நன்றி.)

☐

☐ **எம். ஏ. நுஃமான்**

சண்முகம் சிவலிங்கம் அவர்களின் நீர் வளை யங்கள் என்னும் கவி தைத் தொகுதிக்கு எம். ஏ. நுஃமான் அவர்கள் எழுதிய முன்னுரையின் சில பகுதிகள்;

'' தற்காலத் தமிழ்க் கவிதை பற்றிப் பேசுப வர்கள் மரபுக் கவிதை என்ற இருமை முரண் பற்றி இன்னும் பேசிக் கொண்டு தான் இருக் கின்றனர். சசி கூட புதுக்கவிதை, அகலித்த புதுக்கவிதை பற்றியெல் லாம் பேசியிருக்கிறார். என்னைப் பொறுத்த வரை இந்த இருமை முரண் இப்போது அபத் தமானதாகவேதோன்று கிறது. இந்த இருமை முரணின் அடிப்படை என்ன? வேறு எதைச் சொன்னாலும் சாராம் சத்தில் யாப்பும் யாப் பின்மையும் தான். யாப் பில் எழுதுவது மரபுக் கவிதை. யாப்பை மீறி எழுதுவது புதுக்கவிதை புதுக் கவிதையாளர்கள் மரபுக்கவிதையை ஒரு பத்தாம் பசலியாகவே நோக்குகின்றனர். மர புக் கவிஞர்கள் புதுக் கவிதையை ஒரு சவ லைக்குழந்தையாகவே பார்க்கின்றனர். இன்று கூட இந்த நோக்கு கவிதை பற்றிய நமது விமர்சனப் பார்வை யைப் பெரிதும் பாதிக் கவே செய்கின்றது.

யாப்பிலே எந்த அள வுக்கு மோசமான கவி தைகள் உள்ளனவோ அந்த அளவுக்கு சில வேளை அதைவிட அதி சமாக யாப்பை மீறி, வசனத்தில் எழுதப்பட்ட வற்றிலும் மோசமான வை உண்டு. ஆகவே யாப்பு அல்லது யாப் பின்மைக்கு தானே ஒரு கவித்துவத் தகைமை இல்லை. செய்யுளும் வசனமும் கவிதைக்கான ஊடகங்கள் (MEDIUM) மட்டும்தான். ஊடகம், தானே கவிதையா வதில்லை. அது கவிதை யைத் தாங்கி நிற்கும் சாதனம். அவ்வளவு தான் கவிதை என்பது கவிதைப் பொருளும், பொருளின் வெளிப் பாட்டு முறைதான் கவி தைப் பொருளுக்கு ஒரு கவித்துவத் தன்மையைக் கொடுக்கின்றதே தவிர செய்யுள் அல்லது வச னம் என்ற ஊடகம் அல்ல.''

☐

## சிறைக்குள் ஒரு சிறையுடைப்பு

அகப்பை எமது கைக்குள்
திணிக்கப்படுகின்றது;
தேசத்தை விடுவிக்க
ஆயுதத்தைத் தேடினாலோ
அது மறுக்கப்படுகின்றது.
எங்களின் குமுறலகள்
அறைச்சுவர்களுடன் தான்
போரிடுகின்றன - ஆயினும்
அறைகூவலை விடுக்கின்றோம்;
தமிழீழத்தை அழைக்கின்றோம்.
தினம் ...
நெருப்பினை விழுங்கியே
வாழ்வதால்... !
உருக்கியே சிறை
இரும்பினை அழிப்போம் - அப்போ
உரக்கவே ஒலிக்கும் - எம்
உரிமைக்கீதம் கேட்டு
கருக்களும் எழும்!
துவக்குகள் கனல் பறக்கும்!

நன்றி : சுதந்திரப்பறவைகள்

## களநிகழ்வுகளுடன்..

(5 ஆம்பக்க தொடர்ச்சி)

யும் வாகனத்தில் ஏற்றி னோம்

இதற்கிடையில் திரு நெல்வேலியிலிருந்து ஆனைக்கோட்டைக்கு அந்த வீதிவழியாக வந்த ஓர் இளைஞனை ஈ. பி. ஆர். எல். எவ். இயக் கத்தைச் சேர்ந்ததுரோகி கள் இரண்டுபேர் தாக் கிய வண்ணம் இழுத்துக் கொண்டு வந்தனர். இவர்களது பேச்சுக்கள் செயல்கள் இவற்றைப் பார்த்தால் இவர்கள் கடைந்தெடுத்த மூன் றாம் தரமான பேர்வழி கள் என்பதில் சந்தேக மேயில்லை. ஒருவன் எல் லோரையும் ஏற்றிய மினிபஸ்ஸை ஆனைக் கோட்டை முகாம் நோக்கி செலுத்தினான். வழிநெடுக பஸ்சிற்குள் இருந்த தேசத்துரோகி கள் வீதியின் இருமருங் கிலும் நின்ற பொது மக் களுக்கு முகுந்தன் இற ந்த செய்தியைச் சொல் லிக் கொண்டு வந்தார் கள். பஸ் ஆனைக்கோ ட்டை முகாமை அடைந் ததும் தேசத்துரோகி ஒருவன் இறந்த போரா ளிகள் இருவரது உடலை இறக்குமாறு பொதுமக் களுக்குச்சொல்லி அவர் களைத் தாக்கினான். இதற்கிடையில் ஈ. பி. ஆர். எல். எவ். தோழி ஒருத்தி பஸ் அருகே ஓடி வந்து முகுந்தனது உட லைக் காட்டி அவனைக் கருங்காலி என்றாள். முகுந்தனும் காந்தியும் இறந்த செய்தி அருகிலி ருந்த ஈ. பி. ஆர். எல். எவ். முகாம்களுக்கு அறிவிக்கப்பட்டது. பல தேசத்துரோகிகளும் கட த்தப்பட்ட புத்தம்புது கார்களிலும் வேறுவாக னங்களிலும் அந்த இடத் திற்கு வந்து சேர்ந்தனர் இரு தேச பக்தர்களதும் உடல்கள் மானிப்பாய் யாழ்ப்பாணம் வீதியின் ஓரத்தில் வைக்கப்பட் டது. அந்த வீதியால் போவோர மறித்து தேசத் துரோகிகள் தாம் ஏதோ பெரிய அபார சாதனை நிலை நாட்டி விட்டது போல் காட்டிக் கொண்டிருந்தனர்.

இறந்து போன இரு போராளிகளுக்குமி டையில் ஓர் ஒற்றுமை யுண்டு முகுந்தன் பிற ந்த தினம் 27-1-1968. காந்தியின் பிறந்த தினம் 27-1-1970. இருவரது பிறந்த தினமும் ஒன்றே மறைந்த தினமும் ஒன்றே. தமிழர் போரா ட்டத்தில் ஒன்றாக இணைந்து பணியாற் றிய இரட்டையர்களான அளவெட்டி இறைகுமா ரனும் உமைகுமாரனும் ஒரே நாளில் புளொட் இயக்கத்தால் உயிர் இழ ந்தது போல் ஒன்றாக இணைந்து போராடிய முகுந்தனும் காந்தியும் ஒரேநாளில்மறைந்தனர்